பதிவு எண் 2041

KUDI ARASU.

தனிப் பிரதி விலை { உள் நாடு 1 அணா; வெளி நாடு 1½ அணா }

# குடி அரசு

| | |
|---|---|
| வருட சந்தா முன் பணம் ... | ரூ 3—0 |
| 6 மாத சந்தா ,, ... | ரூ 1-12 |
| வெளி நாட்டிற்கு ,, ... | ரூ 4—0 |


வாரப்பதிப்பு.

ஆசிரியர்: ஈ. வெ. ராமசாமி.

வியாபாரிகள் விளம்பரம் அங் 1க்கு அ. 12.
கோர்ட் விளம்பரம் அங்குலம் 1க்கு ரூ. 2
நீடித்த விளம்பரத்துக்கு தனி விகிதம்

மாலை 4. | ஈரோடு, விபவ ஞு ஆடி மீ 7 உ (22—7—28) ஞாயிற்றுக்கிழமை. | மலர் 13

## தானியம் அரைக்கும் - கை யந்திரம். -



மாவு, கோதுமை, காப்பி முதலியன அரைக்கலாம்

மணி 1க்கு ஆறு பட்டணம் படி அரைக்கக்கூடியது

**யந்திரம் 1க்கு விலை ரூபாய் 67—8—0.**

இன்ஜினினுல் ஓட்டப்படக்கூடிய 'பிரீமியர்' என்ற பிரசித்திபெற்ற அரைக்கும் யந்திரங்களும் சலிசாக கிடைக்கும்.

MASSEY & Co LTD
ENGINEERS

**மாசி அண்ட் கம்பெனி, Ltd.**

திருச்சி ரோடு, ரெட்பீல்ட்ஸ் போஸ்ட்

கோயமுத்தூர்.


பார்த்தீர்களா! இரகசிய நூல் படித்தீர்களா!!

ஹிப்னடிஸ மெஸ்மரிஸ மென்னும்

## மனோவசிய ரகசிய சாஸ்திரம்.

இப்புத்தகம் ஆங்கில நாட்டார் செய்து அனுபவ மடைந்தது. இதில் தூங்காமல் தூங்குதல், தூக்கத்திலிருப்பவனைப் பலவித வேலை செய்வித்தல், பிறரை வசியப்படுத்தல், புலி முதலிய மிருகங்களைத் தன் வசப்படுத்தல், தூர சங்கதி அறிதல், மருந்தில்லாமல் நோய் தீர்த்தல் முதலிய பல ரகசிய மெஸ்மரிஸ சாஸ்திரம் சித்திரப் படங்களுடன் அடங்கியிருக்கிறது. விலை ரூ. 1—8—0. ஸ்ரீ பானுமதி புஸ்தகசாலை, சூளை போஸ்டு, மதராஸ்.

## டிடக்டாவ்ஸ் அல்லது துப்பு இரகசியம் அறியும் கருவி.



இதன் உபயோகம் யாதெனில் இருப்பிடத்திலிருந்தே உம்முடைய காதலியையும் அவள் செய்யும் காரியங்களையும் அவள் அறிந்து கொள்ளாமலேயே இதன்மூலமாய்ப் பார்க்கலாம். உம்முடைய பின்னும் உமக்குத் தெரியாமல் நடக்கிறதை ஏககாலத்தில் இரண்டையும் இதன் மூலமாகக் கண்டுகொள்ளலாம். உமக்குத் தெரியாமல் உம்மைப்பின்தொடர்ந்து வருபவரை நீர் திரும்பிப்பார்க்காமலே இதன் மூலமாய்க் கவனித்துக்கொள்ளலாம். இன்னும் பலவித இரகசியங்களை இதன் மூலமாய் ஒருவரும் தெரிந்துகொள்ளாமல் கண்டு பிடிக்கலாம்.

இத்துடன் பல கலர்களால்தயாரித்த படுக்கை அறையின் 4 அழகிய போட்டோ படங்களுடன் டி. கருவி விலை ரூபா 2 தான்.

மலாய் நாடுகளுக்கு முன்பணம் வந்தாலன்றிக் கண்டிப்பாய் வி. பி. யில் அனுப்பமுடியாது.

பாரிஸ் எம்போரியம் ஜி. டி. மதராஸ்.

## நூதன ஜெர்மன் எலக்டிரிக் விளக்கு.

இதை மேஜையின் பேரிலும், சுவற்றிலும் வைக்கலாம். இராத்திரியில் படுக்கையிலிருந்தபடியே விளக்கை இதில் கண்ட கயிற்றின் (wire) உதவியால் நிறுத்தவும் செய்யலாம். புயற்காற்று அடித்தாலும் எரியும். பிரகாசம் கண்ணைப் பறித்துக்கொண்டு போகக்கூடியது. விசேஷ காலங்களில் வைத்தால் திரளான ஜனங்கள் அதிசயத்தைப் பார்க்கக் கும்பலாகக்கூடி விடுவார்கள். மிக ஜாக்கிரதையாக பாக்கிங் செய்தனுப்பப்படும். குறைந்த விலை 4—8—0. தபால் செலவு 0—8—0.



தி. பான்ஸி வாட்ச அவுஸ்,
15 A-பீட், ஜி. டி. மதராஸ்.



படிக்கப் படிக்க ஆனந்தம்! விகடப் பேச்சின் விநோதம்!!

# ஆனந்த விகடன்

மாதப் பத்திரிகையை

## ஆவலுடன் எதிர்பார்க்கிறார்!

தமிழ் மாதம் பிறந்துவிட்டால் தமிழ் நாட்டிலே ஆயிரக்கணக்கானவர் "ஆனந்த விகடன்" வருகிறதென்று தபாற்காரனையே எதிர்நோக்கிக் கொண்டிருக்கிறார்கள். "ஆனந்த விகடனை" எப்பொழுது தபால்காரன் கொணடுவந்து கொடுப்பான், எப்பொழுது அதிலுள்ள விஷயங்களைப் படித்து ஆனந்திப்போம் என்று சதா இதே சிந்தனையாய் "ஆனந்த விகடன்" சந்தாதார்கள் எதிர்பார்த்துக்கொண்டிருப்பது சகஜமாயிருக்கிறது. அவர்களுடைய எண்ணம் நிறைவேறுமாறு அன்றைய தினம் தவறாமல் தபால்காரன் "ஆனந்த விகடனை" அவரிடம் கொண்டுவந்து கொடுக்கிறான். அதை அளவிலா ஆனந்தத்துடன் வாங்கி உடனே அதைப் பிரித்துப் படிக்கிறார்; சிரிக்கிறார்; தம் நண்பர்களுக்கெல்லாம் அதைப் படித்து காண்பிக்கிறார். வீடு முழுவதும் அன்று ஆனந்தமயமாகவே இருக்கிறது. "ஆனந்த விகடனை"ப் படித்தால் நீங்கள் ஆனந்தமாயிருப்பீர்கள். உடனே சந்தாதாரராகச் சேருங்கள். தாமதிக்க வேண்டாம். இவ்வளவு குறைந்த சந்தாவுக்கு இதைவிட ருசிகரமான பத்திரிகையை நீங்கள் வேறெங்கும் காணமுடியாது.

இந்தியா, பர்மா, இலங்கைக்கு வருடசந்தா தபால்கூலி உள்பட ரூ. 1—0—0
சிங்கப்பூர், பினாங்கு, செட்டால் முதலிய வெளிநாடுகளுக்கு முன்பணம் ரூ. 1—4—0.
மாதிரி காபி இனாம்!

**'ஆனந்த விகடன்' ஆபீஸ்,**
244, தங்கசாலை வீதி, மதராஸ்.

தந்தி விலாசம்:— "விகடன்" சென்னை. டெலிபோன் 3311.



வியாபாரிகளே! கவனியுங்கள்!!

வியாபாரத்தின் நிலைமையை அடிக்கடி அறிந்து லாபகரமான வழியைத்தெரிந்து அவ்வழியில் தொழிலை நடத்துவதினாலேயே வியாபாரம் ஓங்கி வளரும்

## லாபகரமான வழியை அறிவதெப்படி?

உங்கள் தொழிலுக்குத் தகுந்தாப்போல் சரியான கணக்குகள் வையுங்கள்
உங்களுடைய கணக்கு முறைகளை ஒழுங்காக வைத்துக்கொள்வதற்காக

## வர்த்தகக் கணித நூல்

என்ற புதிதாக வெளிவந்த புத்தகத்தை வாசித்துப் பாருங்கள்

ஒரு தரம் பார்த்தவுடனேயே நமக்கு வரவேண்டிய தெவ்வளவு, நாம் கொடுக்க வேண்டியதெவ்வளவு, லாப நஷ்டமெவ்வளவு, முதல் தொகை எவ்வளவு வியாபாரத்தில் போடப்பட்டிருக்கிறது, எவ்விதமான தொழில் லாபத்தைக்கொடுக்கிறது என்று [illegible] கப் பிறருடைய உதவியில்லாமலே ஆங்கிலேயர் எப்படித் தெரிந்து கொள்ளுகிறார்களோ அதே முறையில்தான் இப் புத்தகம் எழுதப்பட்டிருக்கிறது. மேலும், எல்லா வியாபாரிகளும் எவ்விதமான தொழிலுக்கும் இப் புத்தகத்தில் சொல்லப்பட்டிருக்கிற முறைப்படி கணக்குகள் வைத்துக்கொள்ளலாம். படிப்பதற்குக் கஷ்டமில்லாதபடி தெளிவான நடையில் எழுதப்பட்டிருக்கிறது. இதன் விலை ரூ 2

**வாசன் புஸ்தகசாலை.** நெ. 244, தங்கசாலை வீதி, தபாற் பெட்டி நெ. 119, சென்னை



## ஞான திருஷ்டி.

இப்புத்தகத்தில் இறந்தவர்களுடன் பேசுதல், காணாமல் போனதைக் கண்டுபிடித்தல், இருக்குமிடமிருந்தே தூர தேசங்களைப் பார்த்தல், மனிதர்களின் திரிகால வர்த்தமானங்களை அறிதல் முதலியன எழுதப்பட்டுள்ளன. "ஞான திருஷ்டிக் கண்ணாடி" என்னும் உபயோகிக்கும் கருவியுடன் விலை ரூ. 1—8—0. தபால் கூலி பிரத்தியேகம். பினாங்கு, சிங்கப்பூர் முதலிய வெளிநாட்டார்கள் முன் பணம் அனுப்பவேண்டும். ஆரியன் ஸைக்கிக் இன்ஸ்டிட்யூட், சௌகார்பேட்டை, மதராஸ்.



## கணித சோதிடம்

பரகித கணிதப்படி கணிதஞ்செய்து பலன்கள் கூறப்படும். ஒரு வருஷத்திற்கு மாதவாரி பலன்கள் சுருக்கமாயும் விவரமாயும் எழுதி அனுப்ப ரூபாய் இரண்டு. ஆருடம் ப் கேள்விகளுக்கு விவரமான பதில் எழுதி அனுப்ப ரூபாய் ஒன்று. விவாக விஷயம் ரூபாய் ஒன்று. விவாக விஷயத்தைப்பற்றி ஜாதகங்கள் எழுதி அனுப்புவதுடன் கொண்டு பெண்ணுக்குப் புருஷனும், புருஷனுக்குப் பெண்ணும் இன்னுமென்று [illegible] எங்களிடம் அருமையான [illegible] சோதிடம் [illegible] எழுதி அனுப்பும் பலன்கள் பொதுப்பலன்களாக [illegible] விட்டமாகவும் சாஸ்திரீகமாகவுமிருக்கும். [illegible] தெரிவியுங்கள்.

தே. [illegible] செட்டி,
[illegible] பேட்டை, [illegible]



## எதிர்கால சோதிடம்.

நீங்கள் பிறந்த நாழிகை அல்லது கடிதம் எழுதும் நேரத்தையாவது குறித்தனுப்பினால் உங்கள் எதிர்கால ஆயுள், தனம், சகோதரம், மாதுர், பிதுர், ஸந்தானம், சத்ரு, ருணம், களத்திரம், களத்திர ரூபம், பாக்கியம், ஜீவனம், தொழில், லாபம், விரையம் ஆகிய இத்யாதி விஷயங்கள் பூராவும் தெரிவிக்க ரூ: 2. ஒரு வருஷத்திற்கு மாதவாரி நடக்கும் பலன் எழுத ரூ. 2. பலன் சரியில்லாவிடில் பணம் வாபீஸ் செய்யப்படும்.

அருட்பிரகாசர் சோதிடாலயம்,
வைத்திக்குப்பம், புதுவை. (பிரஞ்சிந்தியா).

# சாமி. விவேகாநந்தரும் இரக்கமிலா வைதீகப் பண்டிதர்களும்

—————

### கைவல்ய சாமியார் எழுதுவது.

(1)

சுவாமி விவேகானந்தர் கும்பகோணத்திலும் சென்னையிலும் நிகழ்த்திய உபந்நியாசங்களினின்றும் திரட்டப்பட்ட, சீர்திருத்தத்தைப்பற்றி பொழிந்துள்ள அமிர்தமொழிகளை நேயர்கள் கூர்ந்து நோக்க வேண்டுமென்று "நவசக்தி"யில் திரு. வி. கலியாண சுந்தர முதலியார் அவர்களால் எழுதப்பட்டு வருகிறது.

உலகமொத்து வாழ ஆசை மிகுந்து, அவசிய மேற்பட்டு, உடல் கலந்து, ஊன் கலந்து, உயிர் கலந்து, உவட்டாமலிருக்கும் சுவாமிகளின் அமுத மொழிகள் அநேகம். அவைகளில் வைதீகப் பண்டிதர்களையும் பக்தி என்று கேட்டு நடிப்பவர்களையும் நம் சமயங்களையும் சுவாமிகளால் கண்டித்துக் கூறுபவைகளே பெரும்பான்மையானவை. ஆனால் அவைகளை "நவசக்தி"யில் திரு.வி.கலியாண சுந்தரமுதலியார் எழுதவில்லை. அதைக் "குடி அரசு"க்கு விட்டுவிட்டார் போலும். ஆனதால் சுவாமிகள் வைதிகப் பண்டிதர்கட்கும், சமயமென்றும் பக்தி யென்றும் சாதிக்கும் மேஷடகத்திற்கும் சொன்ன புத்திமதிகளைக் "குடி அரசு" எழுதுகிறது. எல்லாரும் கூர்ந்து நோக்குவார்களாக.

"சென்ற ஒரு நூற்றாண்டாக இந்நாட்டில் சீர்திருத்தக்காரர்கள் கணக்கின்றி ஏற்பட்டிருக்கின்றார்கள். சீர்திருத்த யோசனைகள் பற்பலசொல்லப்பட்டிருக்கின்றன. இச்சீர்திருத்தக் காரர்கள் மீது சொந்த முறையில் நான் குற்றமொன்றும் சொல்லப்புகவில்லை. அவர்களில் பலர் மிகவும் நல்ல மனிதர்கள், நல்ல எண்ணமுடையவர்கள்; அவர்களுடைய நோக்கங்களும் பல அம்சங்களில் பாராட்டக்கூடியனவேயாகும். ஆனால் இந்த நூறு வருடமாக நடந்திருக்கும் சீர்திருத்த முயற்சியினால் தேசமுழுவதிலும் நிரந்தரமான நற்பயன் அதிகம் விளையவில்லையென்பது வெளிப்படை."

இது, சுவாமி விவேகானந்தரின் வியாசத்தினின்று எழுதின 'நவசக்தி'யின் முதல் வாக்கியம். சீர்திருத்தத்தினால் நற்பயன் அதிகம் விளையாததற்கு காரணமென்ன? பண்டிதர்களின் வைதிகமும், சரியான வழியில் ஆராய்ச்சியில்லாத மதப்படிப்பும், குருட்டு நம்பிக்கையினாலுண்டாகும் பக்தியின் தன்னலமுமே காரணமென்று சுவாமிகள் சொன்ன பாகங்களை 'நவசக்தி' எழுதவில்லை. சென்னை, கும்பகோணம், ராமேஸ்வரம் முதலிய இடங்களில் செய்த பிரசங்கங்களினின்றும், "கிழக்கும் மேற்கும்," என்ற தலையங்கத்துடன் சுவாமிகளுடைய எழுத்துக்களிலே மிக மிக அருமையானவற்றுள், முதலாவதாகக் கருதப்படவேண்டிய வியாசத்தினின்றும் நம் நாட்டின் அஞ்ஞானமும் ஏழ்மையும் கொடுமையும் நீங்கும் பொருட்டு அவர் மேனாட்டிலிருந்து எழுதின கடிதங்களிலிருந்தும் திரட்டி இது எழுதப்படுகிறது. அதாவது :—

"ஜப்பானியர்களைப்பற்றி என் மனதிலுள்ளவற்றையெல்லாம் ஒரு சிறிய கடிதத்தில் என்னால் வரைய முடியாது. நான் விரும்புவதெல்லாம், நமது வாலிபர்களில் அநேகர் வருஷந்தோறும் ஜப்பானுக்குச் சென்று பார்க்க வேண்டுமென்பதே. ஜப்பானியர்களுக்கு இந்தியா இன்னும் உயர்ந்ததும் நன்மையாயுமுள்ள ஒவ்வொன்றையுமுடைய கனவுப்பண் பூமியாகவே இருக்கிறது. நீங்களோ! உங்களுடைய ஸ்திதி யென்ன? ஜீவிதகாலமெல்லாம் அற்ப விஷயங்களைப் பேசிக் கொண்டிருக்கிற வீண் பேச்சு மாத்திரமாயுள்ளவர்களே! நீங்கள் எப்படியிருக்கிறீர்கள்? வாருங்கள்! வந்து இந்த ஜனங்களைப்பாருங்கள்! பார்த்து விட்டுப்போய், அவமானத்திற்குப் பயந்து உங்கள் முகங்களை ஒளித்துக் கொள்ளுங்கள்! மூழுமூட ஜாதியார்! நீங்கள் வெளியில் வந்தால் ஜாதியை இழந்து விடுவீர்கள்! இந்த நூற்றுக்கணக்கான வருடங்களாக தடிப்பேறிய மூடக் கொள்கையினால் மேன் மேலும் அதிகரித்து வருகிற சுமையைத்தலையில் தாங்கி உட்கார்ந்து கொண்டிருக்கிற நீங்கள், நூற்றுக்கணக்கான வருஷங்களாக இந்த ஆகாரத்தை அல்லது அந்த ஆகாரத்தைத் தொடலாம் அல்லது தொடக்கூடாது என்று வாதம் செய்து சக்தியெல்லாம் செலவழிக்கின்ற நீங்கள், எவ்வளவோ வருஷங்களாக ஜன சமூகத்தின் இடைவிடாத கொடூரத்தினால் ஜீவகாருண்யம் சிறிதுமில்லாத நீங்கள் எப்படி இருக்கிறீர்கள்! ஐரோப்பியர்களுடைய புத்தி சக்தியினின்றும் சிதறிக்கிடக்கிற சிற்றறிவைத் திருமபத்திரும்பச்சொல்லிக் கொண்டும், ஜீவிதம் முழுதும் ஒரு முப்பதுரூபா குமாஸ்தாவேலையடையவோ அல்லது ஒரு வக்கீலாகவோ நிச்சயம் பண்ணிக் கொண்டும் இருக்கின்ற உங்களையும் (இதுவே பால்ய இந்தியாவின் உத்தம ஆசை) ஒவ்வொரு மாணவனுடைய காலடியிலும் பசிநோயினால் பீடிக்கப்பட்டு ஆகாரத்திற்கு அலறுகின்ற ஒரு கூட்டம் குழந்தைகளையுடைய உங்களையும் (இதுவே இந்தியர்களுடைய நற்காலமில்லைமை) உங்களுடைய புஸ்தகங்களையும், அங்கிகளையும், சர்வகலாசாலை சாட்சிப் பத்திரங்களையும், எல்லாச் சொடுமைகளுக்கும் ஏதுவாகவிருந்த மூடங்களையும், எல்லாவற்றையும் விழுங்கி விடுவதற்குக் கடலில் போதுமானஜலம் இல்லையா?

வாருங்கள் மனிதர்களாயிருங்கள்! அபிவிருத்திக்கு எப்போதும் எதிரிடையாயிருக்கின்றபுரோகிதர்களையும், மூடப் பண்டிதர்களையும், வெறுத்துத்தள்ளுங்கள், ஏனென்றால் அவர்களுடையஇருதயங்கள் ஒருபொழுதும் விசாலமாகா. அவர்கள், ஆற்றுக்கணக்கான வருஷங்களாயுள்ள மூடக் கொள்கை, கொடுமை, இவற்றினின்றும் முளைத்தெழுந்தவர்கள், வைதீகக்கொடுங்கோன்மையைக் களைந்தெறியுங்கள். வாருங்கள்! மனிதராயிருங்கள் உங்களுடைய நெருங்கிய பொந்துகளினின்றும் வெளியில் வாருங்கள்! ஜன சமூகங்கள் எங்ஙனம் முன்னேறிச் சென்று கொண்டிருக்கின்றன என்பதைப்பாருங்கள். மனிதனை நீங்கள் நேசிக்கிறீர்களா? உங்களுடைய தேசத்தைநீங்கள் நேசிக்கிறீர்களா? அப்படியானால் வாருங்கள் நாம் இன்னும் நலந்தரத்தக்கதான விஷயங்களில் முயற்சி செய்வோம்.

ஆங்கில துரைத்தனத்தார் உங்களுடையதடித்துப்போன நாகரீகங்களை உடைப்பதற்கு ஈஸ்வரனால் கொண்டு வரப்பட்ட ஆயுதமாயிருக்கிறார்கள். சென்னை தான் ஆங்கிலேயர் இங்கு ஸ்திரப்படும்படி உதவி செய்ய முதல் மனிதர்களைக் கொடுத்தது. இப்பொழுது யாதொன்றினும் பின்வாங்காமல் ஒரு புதியஸ்திதியை உண்டுபண்ண, எளியவர்களிடத்தில் இரக்கம்காட்ட, அவர்களது பசித்த வயிற்றுக்கு ஆகாரம்அளிக்க, பொது ஜனங்களின் அறிவை வளர்க்க, அவர்களை முன்னுக்கு கொண்டு வர, உங்களுடைய முன்னோர்களது கொடுமையினால் மிருகப்பிராயத்திற்கு வந்திருக்கப்பட்டவர்களை மனிதர்களாக்க, வீரிய மாய்முயற்சி செய்ய சுயநன்மையற்று யோக்கியர்களாயுள்ள எத்தனை மனிதர்களைக் கொடுப்பதற்குசென்னை தயாராக விருக்கிறது?

எனது தைரியமுள்ள வாலிபர்காள்! அன்பு, உண்மை, பொறுமை, இவற்றைத்தவிரவேறொன்றும் அவசியமில்லை. வளர்ச்சியைத்தவிர, அதாவது அன்பைத் தவிர ஜீவிதம் என்றால் வேறு என்ன? ஆதலால் அன்பே ஜீவன்; அதுவே ஜீவியகாலநிதி. ஸ்வய நன்மையெல்லாம் மரணமே; இது எங்கும் எப்பொழுதும் உண்மை. நன்மை செய்தலே ஜீவிதம். பிறர்க்கு நன்மை செய்யாமல் இருப்பதே மரணமெனப்படும். நீங்கள் பார்க்கின்ற மானிடமிருகங்களில் நூற்றுக்குத் தொண்ணூறு பேர் மரித்தவர்களே, பிரேதங்களே. ஏனென்றால் எனது புத்திரர்களே; அன்பு செலுத்துகிறவனைத் தவிர வேறு எவனும் ஜீவிக்கிறதில்லை. உணருங்கள். எளியவர்கள், அறிவீனர்கள், தாழ்த்தப்பட்டிருப்போர்கள் இவர்களுக்காக இரங்குங்கள்.

ஸ்வதந்திரமின்றி வளர்ச்சியேயில்லை. நமது முன்னோர்கள் மதக்கொள்கைகளை ஸ்வதந்திரப்படுத்தினார்கள். (நாம் ஒரு அற்புதமான மதத்தையுடையவர்களாக இருக்கிறோம்) ஆனால் அவர்கள் சன சமூகத்தின் கால்களில் பெரிய விலங்கையிட்டார்கள். நமது சனசமூகம், சுருக்கத்தில், பயங்கரமாகவும் ஆபாசமாயும் இருக்கின்றது. மேல் நாடுகளில் எப்பொழுதும் ஜன சமூகத்திற்கு ஸ்வதந்திரம் உண்டு. அவர்களைப் பாருங்கள்; அவர்களுடைய மதத்தையும் பாருங்கள். வளர்ச்சிக்கு முதலாவதாக வேண்டியது ஸ்வதந்திரம். மனிதனுக்கு, நினைப்பதற்கும் பேசுவதற்கும் ஸ்வதந்திரம் வேண்டியது போலவே அவனுக்கு ஆகாரம், உடை, விவாகம் முதலிய எல்லா விஷயங்களிலும் ஸ்வதந்திரம் வேண்டும்.

ஜட சம்பந்தமான நாகரீகம் கூடாது என்று நாம் மூடத்தனமாகப் பேசுகின்றோம். "இந்த திராட்சைப்பழங்கள் புளிக்கும்" என்கிறஅந்த மூடத்தனத்தையெல்லாம் நாம் ஒப்புக்கொண்டாலும் - இந்தியா முழுவதிலும் ஒரு லட்சம்பேர் உண்மையான ஆத்மஞானிகள் இருப்பதாக வைத்துக்கொண்டாலும், இப்பொழுது இவர்களுடைய ஆத்மஞானத்தின் பொருட்டு முப்பத்து முக்கோடி ஜனங்கள் பாமரத்தனத்திலும் கொடுமையிலும் பட்டினியிலும் முழுகிக்கிடக்க வேண்டுமா?

ஜட சம்பந்த நாகரீகம் (ஆடம்பரம்கூட) எளியவர்களுக்குத் தொழில் கொடுக்கும் பொருட்டு அவசியம்தான். ஆகாரம்! ஆகாரம்! இங்கு எனக்கு ஆகாரம் கொடுக்கமுடியாத கடவுளால் மோக்ஷலோகத்தில் எனக்கு நித்தியானந்தத்தை கொடுக்கமுடியுமென்று நான் நம்பமாட்டேன், இந்திய தேசம் முன்னேற்றத்தில் வரவேண்டும். எளியவர்கள் போஷிக்கப்படவேண்டும். கல்வி பரப்பப்படவேண்டும். வைதீகக்கொடுமை கூட வேகூடாது. ஜன சமூகத்தில் கொடுமை உதவாது. ஒவ்வொருவருக்கும் அதிக ஆகாரம்.

அநேக சந்தர்ப்பங்களில் நமதுபால்யமூடர்கள் ஆங்கிலேயரிடத்தினின்றும் அதிக அதிகாரத்தைப் பெறுவதற்கு சபைகள் கூட்டுகின்றனர். ஸ்வதந்திரத்தைக்கொடுப்பதற்குத்தயாராயில்லாத எவனும் ஸ்வதந்திரத்திற்கு அருகனல்லன். ஆங்கிலேயர்கள் அதிகாரத்தையெல்லாம் உங்களிடத்தில் கொடுத்துவிடுகிறார்களென்று வைத்துக் கொள்ளுவோம். ஏன்? அப்பொழுது அதிகாரம் வகிப்பவர்கள் பொது ஜனங்களை அடக்கிவைத்துக்கொண்டு அவர்களுக்கு அதிகாரம் கொடுக்க மாட்டார்கள். அடிமைகள் அடிமைகளையுண்டாக்குவதற்கு அதிகாரத்தை விரும்புகின்றனர்.

நேற்றையதினம் இங்கு ஸ்திரி ஜெயிலின் அதிகாரியாகிய எஜமானி வந்திருந்தாள்; இங்கு அவர்கள் அதை ஜெயில் என்று சொல்லமாட்டார்கள். ஆனால் சீர்திருத்தச் சாலை யென்பார்கள். நான் அமெரிக்காவில் பார்த்ததில் இது மிகப் பெரிய விஷயம். அதனுள் வசிப்பவர்கள் எவ்வளவோ தயவுடன் நடத்தப்படுகிறார்கள். அவர்கள் எவ்வளவோ சீர்திருத்தப்பட்டு ஜனசமூ

இதன் தொடர்ச்சி 18-ம் பக்கம் பார்க்க

# இதிகாசங்கள்.

## இராமாயணம்—பாலகாண்டம்.

### திரு. சந்திரசேகர பாவலர் எழுதுவது.

இனி "தமிழ் நாடு" என்ற பத்திரிகையில் நாயக்கர் பிரசாரம் என்ற பெருந் தலைப்பின் கீழுள்ள "நாயக்கரின் ராமாயணம்" என்ற சிறு தலைப்பிட்டு திரு. சாமிநாதன் என்பவர் எழுதியுள்ளதை ஆராய்வோம்.

முதலில் அவர் "குடி அரசில் இராமாயணக் கட்டுரைகளில் தாடகை என்பவள் சிறந்த பதிவிரதா சிரோமணி என்றும், இராவணன் உண்மையான கடவுள் பக்தி மிகுந்த அரசனென்றும், அகலிகை கௌதமராக மாறிக்கொண்ட இந்திரனுடன் மோசம்போய்ச் சேரவில்லையென்றும், இந்திரனைக்கண்டவுடன் அவனழகிலீடுபட்டுத் தெரிந்தே அவனுடன் கூடினளென்றும், தசரதன்புத்திர காமேஷ்டி யாகம் செய்துவைத்த ரிஷிகளிடம் தன்னுடைய பத்தினிமார்களை ஒப்படைத்தான் என்றும், இன்னும் அநேக விஷயங்களை, இமய முதல் குமரிவரையுள்ள இந்திய மகாஜனங்களால் நல்லவர்களாகவெடுத்துக்காட்டக் குறிப்பிடும் ராமாயண காவியத்தின் பாத்திரங்களை கெட்டவர்களாகவும், கெட்டவர்களாக வழக்கச் சொல்லிலேயே வழங்குபவர்களை நல்லவர்களாகவும் மாற்றி இதுவரை இந்திய நாட்டினர்களுக்கு விளங்காத உண்மை வெளிவருகின்றது. இந்த உண்மையான விஷயங்கள் இவர்களுக்கு எங்கிருந்து கிடைத்தன" என்று வினவியிருக்கிறார்.

இவரைப் போலும் கல்வி அறிவில்லாத மக்கள் பல மலிந்துள்ளமையாலேயே நமது நாடு பாழான நிலைமையிலுள்ளது. இந்தச் சாமிநாதன் கல்வி அறிவற்றவர் என்பதை நாம் அவர் எழுதிய கட்டுரையினாலேயே நன்கறியலாம். நாம் இக் 'குடி அரசில்' இராமாயணத்தைப்பற்றி எழுதிவரும் செய்திகள் நமது சொந்தமல்ல; வால்மீகி முனிவர் வடமொழியில் எழுதியுள்ள இராமாயணத்தை பண்டித அனந்தாச்சாரியார், பண்டித நடேச சாஸ்திரியார், சி. ஆர். சீனிவாசய்யங்கார் பி. ஏ. முதலியவர்கள் தமிழிலும், பண்டித மன்மத நாததத்தர் ஆங்கிலத்திலும் மொழி பெயர்த்திருக்கின்றனர். அவர்களுடைய கூற்றையே கூறி ஆராய்வோம் என்று கூறி வருகிறோம். நமது சாமிநாதன் அம்மொழி பெயர்ப்புக்களில் ஒன்றையேனும் வாங்கிப் படித்தனரா? என்று கேட்கின்றோம். அவர் இக் 'குடியரசை'ப் படிக்குமுன் இந் நூல்களைப் படிக்காதவரேனும் 'இதனைப்படித்த பின்னராயினும்' அநியாயமாகக் "குடி அரசில்" செய்திகள் வருகின்றனவே இவைகள் உண்மைதானா' என்று அவைகளைப் படித்துப்பார்த்தனரா? இவ்வாறு சுயபுத்தியுமின்றிச் சொற்புத்தியும் கேளாமல் அறிவு பெறவேண்டுமென்ற எண்ணமும் இல்லாமல் சுவாமிநாதன் என்ற பெயர் பத்திரிகையில் வரவேண்டும். வாயில் வந்ததை உளறலாம் என்ற எண்ணம் மட்டும் கொண்டு கட்டுரை எழுதவந்த இந்தச் சாமிநாதனின் நிலை மிகவும் பரிதபிக்கத் தக்கதே. ஆசிரியர் திருவள்ளுவ நாயனார் தெய்வத் திருக்குறளில் "அரங்கின்றி வட்டாடியற்றே நிரம்பிய நூலின்றிக் கோட்டி கொளல்" எனத் திருவாய் மலர்ந்தருளிய இலக்கணத்துக்கு இவர் ஓர் நல்ல எடுத்துக்காட்டானார். அரங்கிடாமல் வட்டாடுவாரும் நூலறிவில்லாமல் பேசவும் எழுதவும் முன் வருவாரும் எக்காலத்தும் இருப்பதனாலேயே தெய்வப் புலவர் இவ்வாறு கட்டளையிட்டனர் போலும். இனியாவது இந்தச் சாமிநாதன் நன்றாகப் படித்து விட்டுப் பின்னர் எழுத முன் வருவாராக.

ஆரியப் பார்ப்பனர் மயக்கத்தில் எவ்வாறோ அகப்பட்டு மயங்குபவரோ? அன்றி அவ்வகுப்பினரில் ஒருவரோ இச் சாமிநாதன்? மேலே நாம் கூறியுள்ள மொழிபெயர்ப்பாளர் நால்வரில் அனந்தாசாரியரும் சீனிவாசய்யங்காரும் வைணவ சமயத்தினர். மற்றிருவரும் ஆரியரே. இவர்களெல்லோரும் அகலிகை சோரம்போனமையையும் தசரதன் தனது பத்தினிமார்களை ரித்விக்குகளிடம் ஒப்படைத்ததையும் ஒப்புக்கொண்டு உண்மையை உள்ளவாறெழுதியிருக்க அவைகளைத் தாமும் படியாமல் படித்த நமது கூற்றையும் கேளாமல் இவர் பிதற்றுரை பல வரைகின்றனரே? கொஞ்சம் எழுதப் படிக்கத் தெரிந்த அரைகுறைப்படிப்பாளியாகிய நம் சாமிநாதனே ஆரியப்புரளில் இவ்வாறு ஏமாறி மயங்கிக் கிடந்தனரென்றால் கொஞ்சமும் படியாமலிருக்கும் சாதாரண மக்களின் நிலையைக் கூறவும் வேண்டுமோ? தாடகா பிராட்டியாருடைய பெருமைகளை இவர் தேவாரத்தைப் படித்து உணர்வாராக.

இனி அவர் தமக்கே பொருள்படாதெழுதும் வெற்றுரைகளை விடுத்து அவர் பின் எழுதும் "ராமாயணத்தில், அநேக சனங்கள் வெகுவாய்த் தெரிந்து கொண்டிராத--ராமனுடைய குற்றமெனக் கருதிக்கொண்ட ஒரு பார்ப்பனக் குழந்தையின் மரணத்துக்காக ஒரு சூத்திரனைச் சிரச்சேதம் செய்த—கதையை எடுத்துக் காட்டவந்த நாயக்கருக்கு எல்லாராலும் ஸ்பஷ்டமாய் தெரிந்து இருக்கும்படியான விஷயமாகிய குகனென்னும் படகோட்டி விஷயத்தில் ஜாதி வித்தியாசமின்றி அவனை அன்போடு ஆதரித்து அவனையும் சகோதரர்களில் ஒருவனாகச் சேர்த்துக்கொண்ட உண்மை நெறியும், வானவர்களை வித்தியாசமின்றி அன்பினால் பிணித்துக்கொண்டு அவர்களுடன் ஒன்றாயிருந்து காலங் கடத்திய நீதிமுறையும், மானிட வகுப்பைச் சேராத சடாயு என்னும் பக்ஷியின்மேல் வைத்த அன்பினால் அதன் மரணத்துக்காகக் கண்ணீர் விட்டுக் கதறி அழுது அதைப் புள்ளினமெனக் கருதாது அதற்கும் மனிதர்களுக்கும் செய்யவேண்டிய ஈமக் கடன்களைத் தானே செய்த நேர்மையும், சபரி என்னும் ஒரு வேடப் பெண்ணலளித்த உணவுகளை உண்ட அன்பின் பெருக்கும், அரக்க குலத்தைச் சேர்ந்த விபீஷணரின் நேர்மையான நடத்தையைக் கருதி அவரை அரக்கனெனத் தள்ளாமல் தன்னுடன் சேர்த்துக்கொண்ட சமத்துவ நீதியும், நிராயுதபாணியாய் தன்னுடைய பாணத்தினால் ஏற்படும் மரணத்தைத் தவிர, வேறு கதியற்றவனாக நின்ற ராவணனை 'இன்று போய் நாளை வா' என்று சொன்ன அரசநீதியும், வண்ணான் தானே என்று அலக்ஷியம் செய்யாமல் அவனும் ஒரு பிரஜா உரிமையுடையவனெனக் கருதி, அவன் சொல்லுக்கும் தான் கட்டுப்படவேண்டும் என்னும் காரணத்தால் தன்னுடைய மனைவியாகிய நாட்டின் அரசியை காட்டிற்கனுப்பிய நன்னடத்தைகளும் இராமன்பால் இருக்க சமத்துவ வேஷம் பூண்ட நாயக்கருக்கு இவைகளெல்லாம் விளங்காமல் அந்த ஒரு விஷயம் மட்டும் அடிக்கடி பல சமயங்களிலும் நிதர்சனமாய்க் கொண்டுவருகின்ற நேர்மைதானென்னவோ!" என்ற கூற்றினை ஆராய்வோம்.

மேலேகண்டகூற்றுகளைப் படித்துப்பார்த்தால் அது ஓர்பார்ப்பனன் தமிழாகவே காணப்படுகிறது. ஆதலின் சாமிநாதனென்பவர் ஓர் பார்ப்பனராதல் வேண்டும். அன்றி பார்ப்பனன் பெற்ற பிள்ளையைக் (கட்டுரையை) தாம் பெற்ற பிள்ளையாகக்கொண்ட ஓர் பார்ப்பனரல்லாதாராக வேண்டும். இவர் பார்ப்பனரல்லாதாரெனின் இவர் பிறருக்குப் பிறந்த பிள்ளைகளைத் தன்னுடையவெனக் கொண்ட தசரதன் செயலுக்குப் பரிந்து பேசுதற்கு ஒப்பமிட்டது வியப்பாகாது. அன்றி பார்ப்பனரேயெனின் இவ்வாறெழுதுவது அவர் பண்பே.

இத்தகைய கட்டுரையை வெளிப்படுத்திய தமிழ் நாட்டின் பெருமைதானென்னவோ? இதனால் "தமிழ் நாடு" ஆசிரியர் பெருமையும் கல்வியும் ஆராய்ச்சி வன்மையும் இனிது புலனாம். குலத்தைக் கெடுக்கும் கோடாரிக் காம்புகளும் உள, இனி மேலே குறித்துள்ள கூற்றுகளை ஆராய்வோம்.

இராமன் ஓர் பார்ப்பானுக்காக ஓர் சூத்திரனுடைய தலையை வெட்டிய அநியாயத்துக்குச் சமாதானம் கூறுவதை விடுத்து நமது சாமிநாதன் வேறு பல விரித்தார். விரித்தமையும் மிக அழகிதே. இராமனைப்பற்றிய வேறு சில செய்திகளைக் குறித்தார். அவைகளை வரும்போது விவரமாக ஆராய்வோமேனும் ஈண்டுச் சுருங்கக் கூறுவோம். குகனுடைய உதவியில்லாமல் போனால் இராமன் கங்கையைக் கடத்தலரிது. ஆதலின் அவனுடைய உதவி பெறுதற்காக இராமன் அவனை அவ்வாறு பேசி மயக்குகிறான். இராமன் ஓர் ராஜதந்திர நிபுணனே. குரங்குகளோடு அவன் கூடி வாழ்ந்தது அவன் பெற்ற சாபப் பயனேனும் அவன் வாலியை மறைந்து கொன்று சகோதரத் துரோகியாகிய சுக்ரீவனோடு நண்பு கொண்டது பரதனாகிய தனது சகோதரனுக்குத் துரோகம் நினைத்த அவ்விராமனுக்கு இயல்பானதே. இதுபோலவே சகோதரத் துரோகியாகிய விபீஷணனிடம் இராமன் நட்புக்கொண்டதும் அவனுக்கு இயல்பும் இராஜ தந்திரமுமாம். இவ்வாறாக இவ்விருவருடனும் நட்புக்கொண்டதை இராமனுக்குப் பெருமையானதென மயங்கினர் சாமிநாதன். பேராசைக்காரனும் சகோதரத் துரோகியுமாகிய விபீஷணனைத் தன் பக்கம் சேர்க்காதிருந்தால் இராமன் இராவணனைக் கொன்றிருத்தல் இயலாது. 'இராவணனுடைய நெஞ்சில் அம்பெய்து கொல்'எனக் கூறி அருகே நின்றானே பாவி விபீஷணன் அபிப்ராயம் அநியாயம் "இன்றுபோய் நாளைவா" வென இராமன் கூறியதாகக் கூறுவது இராமன்பாற் பற்றுடைய வால்மீகியும் கம்பரும் என்பதைச் சாமிநாதன் உணர்வாராக. இனத்துரோகமும் இனத்துரோகச் சேர்க்கையும் தான் சுவாமிநாதனுக்குச் சமத்துவமாகத் தோன்றுகின்றன போலும். தனக்கு உதவி செய்த சடாயுவுக்கு மனமிரங்கியது உலக இயற்கையே. நல்லுணவு கிடையாது திண்டாடிய இராமனுக்கு சபரி நல்லுணவு தர அதை அவன் ஆவலுடன் வாங்கி உண்டதும் அவனுக்கு ஓர் பெருமையோ? நன்றாகச் சாப்பிட்டதை ஓர் பெருமையாகக் காட்டியதும் சாமிநாதனுக்கும் ஓர் பெருமையே. இவைகளால் இராமனுடைய துரோகச் செயல்கள் இனிது புலனாகும். இராமன் சூத்திரனைக் கொன்றது அநியாயமே. அதனால் இராமன்சிறந்த அதர்ம ராஜனே என்பதும் விளங்குகின்றது. இனி சீதையைப் பற்றி அவர் கூறுவதைக் கவனிப்போம்.

இராமன் சீதையின் கற்புடைமையில் ஐயுறுகின்றான். சீதையை இராவணன் பற்றி மடியில் வைத்துப்போனதும் அவனுடைய வசமாக அவள் பத்து மாதம் வாழ்ந்ததுமே அவ்வையுறவுக்குக் காரணம். சீதையும் தன்னுடல் இராவணன் வசமிருந்ததை ஒப்புகிறாள்.

இராமன் அரசாளும் நாளையிலே ஓர் வண்ணான் அந்நியனோடு வாழ்ந்த சீதையை இராமன் சேர்த்துக் கொண்ட இழி செயலை மிக இழித்துப்பேசுகிறான். அதனால் மானம் பொறுக்கமாட்டாமல் இராமன் நிறைந்த கர்ப்பிணியாக இருந்த சீதையைக் காட்டுக்கு வஞ்சகமாக அனுப்புகிறான். இவ்விழிந்த செயலைப்பாராட்டிச் சாமிநாதன் 'வண்ணான் தானே' என்று அலக்ஷியம் செய்யாமல் அவனும் ஒரு பிரஜா உரிமையுடையவனெனக் கருதி அவன் சொல்லுக்கும் தான் கட்டுப்

[இதன் தொடர்ச்சி 18-ம் பக்கம் பார்க்க.]

# இந்தியக் கைம்பெண்

மிஸ். மேயோ எழுதுவது.

காய்ந்து கருகி வெடித்த ஒரு சமவெளியில் ஒரு நாள் காலைக் கதிரவன் தன் ஒளியைப் பரப்பிக் கொண்டிருக்கிறான். அவ்வெளியில் களிமண்ணும் ஓலையும் கொண்டு கட்டப்பட்ட ஒரு குடிசை தனியாக நிற்கின்றது. அக்குடிசையின் வாயில் திறக்கப்பட்டு வாயிற்படியில் வெள்ளையுடையணிந்த ஒரு மாது உட்கார்ந்திருந்தாள். இக்குடிசைக்குப் பின்புறமாக சிறிது தூரத்திற்கப்பால் தூசு நிறைந்தெழும் ஒரு சிற்றூர் தென்படுகிறது. பாபம்! அச்சிற்றூர்தான் பரந்த இம்மண்ணுலகம் என்று கருதியிருக்கிறாள் அவ்வேழை மாது!

அம்மாதின் பெயர் சீதா. வயது 27 தான் ஆகிறது. பார்ப்பனர் நம்மைக் குறித்தெழுதி வைத்த மனு (அ) தர்ம நீதிப்படி அவள் சொல்லொணாப் பாவம் செய்தமையால் இவ்வாறு கைம்பெண் நிலையடைந்ததாக கருதப்பட்டனள். ஆனால் உண்மையிலேயே பாபம்! பால்மணம் மாறாக் குழவியையொத்த பரிசுத்த மனம் வாய்ந்தவள்.

கன்னங்கள் வெளுத்துக் குழி விழுந்தும் பற்கள் வரிசையினமைந்து வெளியிற் புலப்படுவது போன்றுமிருக்கின்றன. இச்சிறு வயதிலேயே, காரெனக் கறுத்து ஒளிவிட்டுக்கொண்டிருக்க வேண்டிய அவளது தலைமயிர் அங்குமிங்கும் வெளுத்துக் காணப்பட்டது. அவள் கை கால்களில் நரம்புகள் எழுந்து சாட்டைக் கயிறுகள்போல் தோன்றுகின்றன. கண்களில் எவ்வித பார்வையும் இருப்பதாகத் தோன்றவில்லை. இனி வெளிப்பட்டுப் பிழைப்பது அரிதென்று கண்டு பயம் நீங்கு என்ற இரண்டுணர்ச்சியும் அற்றுப்போய் கூட்டிலடைபட்டிருக்கும் ஒரு மிருகத்தின் கட்பார்வையையே அவள் உடைத்தாயிருந்தாள்.

குடிசையோ ஒரே ஒரு அறைதான். களிமண்ணால் எடுத்த சுவர்களும், தரையும் சாணங்கொண்டு நன்றாக மெழுகப்பட்டிருக்கின்றன. சாளரம் என்பதே கிடையாது. ஒரு மூலையில் ஒரு கயிற்றுக் கட்டிலும் அதன் கீழ் ஒரு தண்ணீர் கூஜாவும் காணப்படுகின்றன. கதவருகில் சாப்பிடும் தட்டு ஒன்று ஒரு ஆணியில் மாட்டப் பட்டிருக்கிறது. மாவரைக்கும் யந்திரம் ஒன்று ஒரு மூலையில் வைக்கப் பட்டிருக்கிறது. அவ்வளவுதான் அவளது உடைமைகள் போலும். இவ்வுலக வாழ்வெல்லாம் வாழ்ந்து விட்டாள். அதை நினைத்து வருஷக்கணக்காக மனமுருகி கண்ணீர் விடுவதுதான் இப்பொழுது அவளது முக்கியமான கவலை. இன்றும் அதிகாலையில் எழுந்து தலை முழுகி கடவுளைத் தொழுது முடிந்துவிட்டது. வாயிற்படியில உட்கார்ந்திருக்கிறாள். வேறு வேலை? அவ்வாறு உட்கார்ந்தவுடன் பழைய நினைவுகள் முளைத்தெழுகின்றன!

கவலை என்பதும் வறுமையென்பதும் இன்னதென்றறியாத ஒரு செல்வவந்தர் வீட்டில் அவள் அருமைக் குழந்தையாய்ப் பிறந்து வளர்ந்ததென்ன! அதன் பின் ஒரு செல்வத் தம்பி பிறந்து எல்லோர் மனத்தையும் இன்புறச் செய்ததென்ன! வீட்டிலிருந்த செவிலிகள் அவளுக்குச் சிறுகச்சிறுக வீட்டு வேலைகளை கற்றுக்கொடுத்ததென்ன! சாதிக் கட்டுப்பாட்டின் முறைமைகளும், அவைகளை மீறினால் நேரும் கெடுதிகளும், சாமிகளுக்குப் பூசனை புரிவதெப்படி, பெண் என்பவளுக்குக் கண்கண்ட தெய்வமாகிய கணவனுக்குப் பணிவிடை செய்வதெப்படி, என்றிவைபோன்ற பாடங்களைக் கற்றதெப்படி என்ற இத்தகைய நினைவுகள் ஒன்றன்பின் ஒன்றாய் அடுக்கடுக்காய் எழுந்துகொண்டிருந்தன.

அதன் பின் அவள் விளையாடி வந்த குழந்தை விளையாட்டுகளும், பெண்கள் பேசும் வீண் பேச்சுகளும், குழந்தை பெறுவதெப்படி, வளர்ப்பதெப்படி, அதனிடையுறும் துன்பங்களைப் பொறுப்பதெப்படி யென்பது போன்ற நினைவுகளும் எழுந்தன.

இவைகளில் அவள் மனத்திடை இன்றும் நினைத்தால் உடனே திகிலெழச் செய்து நடுக்குறச் செய்வது தசைநோய்களே. அதனால் விளையும் நோக்காடு என்ற பயம் ஒரு பேயென அவளை இரவும் பகலும் அலைத்து வந்திருந்தது. அதனால் நாள்தோறும் இரவில் படுப்பதற்கு முன் கடவுளை நினைத்துத் தொழுதற்கு ஒரு பாடத்தை அவளே கட்டிச் சொல்லி வந்தாள். அதாவது:—"மக்களும் செல்வமும் மாடும் மனைவியும் உவந்தளிக்கும் அருட்பெருங்கடலே! நீர் என்மீது கருணை கூர்ந்து அளித்திருப்பது இச்சிறு உடல் ஒன்றுதான். அதற்கு எக்காலத்திலும் எவ்வித கெடுதியும் நேரிடாமலும், அது எப்பொழுதும் பரிசுத்தமாய் இருக்குமாறும் அருள்புரிவாயாக" என்பதே.

இந்தப் பாடத்தோடு "இயல்பாகவே, விரைவில் எனக்கு ஒரு கணவன் கிடைக்கும்படி செய்யவேண்டும்" என்றும் அவள் தொழுது பூ, பழம் முதலியவைகளை வைத்துப் படைத்து வருவாள். ஏற்ற காலத்தில் ஒரு கணவனும் தேடிக்கொடுக்கப் பெற்றாள். 'சரியான சாதி'யிற் பிறந்தவனாக விருந்தவனாதலால் அவனுக்கு வரதட்சணையாக ஏராளமான விலையும் கொடுக்க வேண்டியிருந்தது. முதன் முதல் அவள் கணவன் வீட்டிற்கனுப்பி வைக்கப்பட்ட பொழுது அவளுக்கு வயது பதினொன்றுதான்.

அவ்வாறு புக்ககம் புறப்பட்டதை அடிக்கடி நினைத்துப் பார்த்தாள். அங்கு போனால் எப்படி எப்படி நடந்துகொள்ள வேண்டுமென்று தன் பிறந்த வீட்டிலுள்ளோர் ஒரு இராமாயணமாக ஒப்பித்ததும், அதை காதாற் கேட்டு ஒருவாறு அதன் பொருளுணர்ந்திருந்தும் அதன்படி நடந்துகொள்ள முடியாதவளாக விருந்ததும் நினைவிற்கு வந்தன. ஏன்? கணவனாகிய பீமால், பெயருக்கேற்றபடி பருத்துத் தொப்பையோடு கூடிய ஒரு வயதுசென்ற மாப்பிள்ளையாக வந்து வாய்த்தான். அவளது தந்தையைவிடப் பெரியவனும் வயது சென்றவனுமாக அவன் இருந்தமையால் பதினொரு வயது குழந்தையாகிய அவளுக்கு அவனை எப்படித் தன் கணவன் எனப் பாவிப்பதென்பது தெரியவில்லை.

இந்த அழகில் அவளுக்கு முன் நான்கு பெண்மணிகள் இந்தப் பெரியவருக்கு மனைவியாக வந்து குழந்தையின்றி இறந்து போயிருந்தனராம். இவள் ஐந்தாவதாக வந்தவளாம். எந்த விதத்திலாவது அவன் ஒரு ஆண் குழந்தையைப் பெற்றுக்கொடுத்தே தீரவேண்டுமாம்.

"சரி அப்படியானால் குழந்தை வேண்டுமென்று கடவுளை இடைவிடாமல் தொழுது வருகிறேன்" என்று நடுக்கத்துடன் கூறிவிட்டு அவ்வாறே தொழுது வந்தாள். ஆனால் கடைசியில் அவளை யறியாமல் "என்மீது கருணை கூர்ந்து அளித்திருப்பது இச்சிறு உடல் ஒன்றுதான். அதற்கு எக்காலத்திலும் எவ்வித கெடுதியும் நேரிடாமலும், அது எப்பொழுதும் பரிசுத்தமாயும் கேடுறாமலும் இருக்குமாறு அருள் புரிவாயாக" என்பதையும் கூட்டியே சொல்லித் தொழுதுவந்தாள்.

புக்ககம் சென்று ஒரு வருஷ காலமாயிற்று பேதைப் பருவம் தீர்ந்துவிட்டது. ஆனால் உடல் தோற்றத்தில் வளர்ச்சிக்குரிய குறிகள் ஒன்றுங் காணப்படவில்லை. அதற்கு மாறாகத் தளர்ச்சியால் வெளுத்து நாளுக்குநாள் இளைத்தே காணப்பட்டாள்.

இதைக் கண்ணுற்ற பெண்கள் "நீ என்ன இவ்வாறு இளைத்துப் போகின்றாயே! அன்றியும் பிள்ளை புண்டாகக் காணோம். இப்படியிருந்தால் உன் கணவன் மற்றொருத்தியை மணப்பது உறுதி" என்று கூறினார்கள்.

ஆனால் பீமாலோ அவ்வாறொன்றும் செய்யவில்லை. திடீரென ஒருநாள் தன் மனைவியாகிய சீதாவைக் கூப்பிட்டு "நாளை நீ காளி கோவிலுக்குச் செல்லவேண்டும். அங்கு போய் ஒரு ஆண் குழந்தையுண்டாக வரங்கிடக்க வேண்டும். அவ்வாறு ஒருநாள் முழுதும் வரங்கிடந்து அன்றிரவு கோயிலிலேயே குருக்கள் காட்டுகிற ஓரிடத்தில் படுத்துறங்க வேண்டும்; பின் விடிந்ததும் எழுந்து வீட்டிற்கு வருவாயாக. வந்து 'புத்' என்னும் நரகத்திலிருந்து என்னை நீக்க கைகொடுப்பதற்காக நான் நெடுநாளாக எதிர்பார்த்திருக்கும் புத்திரனைப் பெற்றுக் கொடுப்பாயாக" என்று கூறினான்.

அவ்வாறே ஒரு நாள் பார்த்து ஒருமாட்டு வண்டியில் நன்றாக மூடியிட்டு சீதாவைக் கொண்டுபோய்க் கோயிலில் விட்டுவிட்டார்கள். அன்று முழுதும் காளியின் முன் மண்டியிட்டு உட்கார்ந்திருந்தாள். இரவுப் பொழுது வந்ததும் குருக்கள் காட்டின இருள் நிறைந்த ஒரு தனியிடத்தில் படுத்துப் பயந்து நடுநடுங்கிக் கிடந்தாள்.

காலையில் குருக்கள் வந்து "அம்மா! இரவு நல்ல கனவு கண்டீர்களா?" என்று கேட்டார். "கனவல்ல, எல்லாம் நல்ல நினைவாகவே தோன்றிற்று. யாரோ ஒருவர் உயிருடன் என்னருகே வந்ததுபோலிருந்தது. குரலோ தங்களுடைய குரலைப் போலவே தோன்றிற்று" என்றாள்.

"அம்மணீ! காளிதேவி உங்கள்மீது கிருபைகூர்ந்து வரங்கொடுத்து விட்டாள். இனி தங்களுக்கு ஒரு குறையுமில்லை. வீட்

இதன் தொடர்ச்சி 16-ம் பக்கம் பார்க்க

# புராணமும் தெய்வீகமும்.

## அமெரிக்க அறிஞர் இங்கர்சால் இயற்றியது.

**திரு. ரா. சௌரிராஜன் மொழிபெயர்த்தது.**

இன்பமே வாழ்க்கையின் நோக்கமும் முடிவுமாகும். இன்பத்தின் தன்மையை நிர்ணயிப்பது அறிவின் செயலாகும். இன்பத்தின் தன்மையை அறிந்து கொண்டபின் அறிவாளிகள் அதனுடன் ஒத்து வாழ்வார்கள். இன்பமென்றால் உண்டு உறங்குவதல்ல. நல்ல ஆரோக்கியத்துடன் யோக்கியமாக வாழ்வதே இன்பமாக வாழ்வதாகும். தன்னலமற்ற காரியங்களைச் செய்வதினாலும், தன் கடமையைத் தடையறச்செய்வதினாலும், நல்ல மார்க்கத்தில் செல்வதினாலும், இயற்கையின் வழியே செல்வதினாலும் உண்டாகும் சந்தோஷமே இன்பமாகும். இவ்விதம் தோன்றும் இன்பமே கவியாகவும் கீதமாகவும் மாறுகிறது.

நியாயமான நல்ல மார்க்கத்தின் முடிவு இன்பமாகும்.

ஆனால் இன்பமாக வாழ வேண்டுமென்ற ஆசை இழிவானதென்று எண்ணுவோர் பலர் இருக்கிறார்கள். இத்தகையோர் தங்களை ஞானிகளென்று கூறிக் கொள்ளுகிறார்கள். அவர்கள் ஐம்புலன்களை அடக்குவதாக பாசாங்கு செய்கிறார்கள். இந்த உலகத்தையும் இந்த வாழ்க்கையையும் அவர்கள் வெறுக்கிறார்கள். இந்த உலகத்தில் சுகத்தை அவர்கள் விரும்பவில்லை, மற்றொரு உலகத்தில் இன்பத்தை அவர்கள் எதிர் பார்க்கிறார்கள். இவ்வுலகத்தில் சுகம் அவர்களுக்கு தாழ்வடைகிறது. மற்றொரு உலகத்திலோ அது அவர்களுக்கு ஆபத்தாகிறது. "இவ்வுலகத்தில் துன்பத்தைத் தருவது அடுத்த உலகத்தில் இன்பத்தைக் கொடுக்கிறது" என்கின்றனர்.

இத்தகைய ஞானிகளே மதாசாரியர்களாக விருந்தார்கள்; குருக்களாகவிருந்தார்கள்; இறைவன் புதல்வராகவிருந்தார்கள்; முனிவர்களாக விருந்தார்கள். இவர்களெல்லாம் உலகத்துக்கு ஒரு சிறிதும் பயன் படாதவர்கள்; அவர்கள் பலர் தொழில் செய்யவில்லை; கைத் தொழில் செய்யவில்லை. பிறருடைய உழைப்பால் அவர்கள் வயிறு வளர்த்து வந்தார்கள். பிறர் அவர்களுக்காக பாடுபட்டால் அவர்கள் பிறரைக் காப்பாற்ற வேண்டுமென்று இறைவனை வேண்டுவார்கள். ஜனசமூகத்துக்கு இதோபதேசம் செய்யவே கடவுள் தங்களைப் படைத்ததாக அவர்கள் சொல்லிக் கொள்ளுவார்கள். இவர்களே இழிவானவர்கள்; என்றும் துன்பத்தை உண்டாக்குபவர்கள்; அயோக்கியர்கள்; பழி வாங்கப்படுவோர்கள்.

பண்டும் இன்றும் அவர்கள் ஆராய்ச்சிக்கும், சுதந்திரத்திற்கும், சமத்துவத்துக்கும் விரோதியாயிருந்து வருகிறார்கள். இயற்கைக்கு மேம்பட்டதையும், தெய்வீகத்தையும், பொருளற்றதையும் நம்புகிறவர்கள் இவர்களே! குருட்டு பக்தியையும், விரோதத்தையும், பயத்தையும் உலகத்தில் பரப்புகிறவர்கள் இவர்களே! தங்களுடைய கொள்கையைக் காப்பாற்றுவதற்காக இவர்கள் எல்லா குற்றங்களையும் செய்திருக்கிறார்கள்-எல்லா கொடுமையையும் செய்திருக்கிறார்கள்.

பெண்டு பிள்ளைகளை நேசித்தவர்களையும், மாடமாளிகைகளைக் கட்டினவர்களையும், காட்டை அழித்து நாட்டைப் பண்படுத்தியவர்களையும் சிற்ப சாஸ்திரத்தில் தேர்ச்சி பெற்றவர்களையும், இசை நிபுணர்களையும், உலகத்தில் வித்தையை வளர்த்து அன்பைப் பெருக்கியவர்களையும் அவர்கள் உலகப்பற்றுள்ளவர்களென்று வெறுத்தார்கள்.

தன்மதிப்புள்ளவர்களையும், அறிவாளிகளையும், கவிஞர்களையும், நாடகர்களையும், உண்மையை ஒளிக்காமல் விளக்கிய உபன்யாசகர்களையும், மனிதனுக்காக உலகத்தை ஜயித்த வீரர்களையும் இவர்கள் அச்சுறுத்தி துன்பப்படுத்தினார்கள்.

இவ்வுலகத்தை இவர்கள் மற்றொரு உலகத்தின் தலைவாயிலாகவும், மற்றொரு உலகத்துக்கு மக்களை அனுப்பும் பள்ளிக்கூடமாகவும் மற்றொரு உலகத்தின் சோதனை நிலையமாகவும் கருதினார்கள். மற்றொரு வாழ்க்கைக்காக இவ்வாழ்க்கையை வெறுக்க வேண்டுமென்று அவர்கள் வற்புறுத்தினார்கள். இவ்வுலகத்தில் ஞானிகளைப்பணிந்து அவர்கள் சொல்படி நடப்பவர்கள் அடுத்த உலகத்தில் அழியாதவாழ்வை அடைவார்களென்றும், மற்றவர்கள் நரகத்தை அடைவார்களென்றும் சொன்னார்கள்.

இத்தகைய ஞானிகள் உழைப்பை வெறுத்தார்கள். உலகத்துக்காக அவர்கள் ஒன்றும் செய்யவில்லை. அவர்கள் பிறருடைய உழைப்பால்-பிச்சை எடுத்து-ஜீவித்தார்கள். மாசற்ற இன்பசுகத்தையும் இரக்கமுள்ள அன்பையும் அவர்கள் வெறுத்தார்கள்.

இந்த ஞானிகள் தனியான கல்வியை விருத்திசெய்தார்கள். தெய்வீகம் பொருந்திய புராணங்களை எழுதினார்கள். அவைகள் கடவுள்களையும் தேவதைகளையும் பற்றி பக்கம் பக்கமாய் வர்ணிக்கின்றன. உலகத்தின் தோற்றத்தைப்பற்றியும் மனிதனின் உற்பத்தியைப்பற்றியும் அவைகள் சொல்லுகின்றன; மதிக்கத்தக்கவை அதில் ஒன்றுமில்லை. கோடிக்கணக்கான மனிதர்கள் இந்தப் பொருளற்ற புத்தகங்களை வாசித்து தங்கள் வாழ்நாளையெல்லாம் வீணாக்கினார்கள்.

ஞானிகளெல்லாம் அவர்களுடைய புத்தகங்களெல்லாம் கடவுளால் எழுதப்பட்டதென்றும், அதன்படி மனிதர்கள் நடக்காவிட்டால் நரகத்தை அடைவார்களென்றும் சொன்னார்கள். இருந்தபோதிலும் உலகப்பற்றுள்ளவர்களும் 'கொடுமையானவர்'களும் 'இறைவனருள்' இல்லாதாரும் 'தெய்வீகம்' பொருந்திய புத்தகங்களை விட அருமையான காவியங்களைச் செய்தார்கள். உலகத்திலுள்ள வேத புராண இதிகாசங்களெல்லாம் ஷேக்ஸ்பியரின் மூளைக்கு-அறிவுக்கு-ஒரு சிறிதும் ஒப்பாகாது.

அமெரிக்காவில் விடுத்த சுதந்திர அறிக்கையானது வேத புத்தகங்களை விட மிகவும் மேலானது.

ஞானிகள் பயத்தாலும், பலத்தாலும் இவ்வுலகத்தை சீர்திருத்த முயன்றார்கள். அவர்கள் மதத்தின் பேரால் சகோதரர்களை அன்புடன் நடத்தும்படி மனிதர்களுக்குச் சொல்லிக் கொடுத்தார்கள். அவர்கள் சக்தியை உபயோகப்படுத்தினார்கள். எப்பொழுதும் அவர்கள் அக்கிரமத்தைக் கையாண்டார்கள். கடவுளின் தயவு தங்களுக்கிருப்பதாக அவர்கள் நடித்தார்கள். தங்களுடைய பிரார்த்தனை மழையையும் சூரிய வெளிச்சத்தையும் தருவதாக அவர்கள் சொன்னார்கள். அட்டை போல அவர்கள் தொழிலாளர்களின் உழைப்பை கொள்ளை கொண்டு போனார்கள். அவர்கள் இரக்கம் காட்டவேண்டுமென்று இறைவனை வேண்டினார்கள். ஆனால் அவர்கள் இரக்கமில்லாமலிருந்தார்கள். அவர்கள் பழிக்குப்பழி வாங்குவதையே விதித்தார்கள்; ஆனால் அவர்கள் ஒருவரையும் மன்னிக்கவில்லை.

'ஞானி'களுக்கு பலமிருக்கும் பொழுது வித்தைகளெல்லாம் அழிந்து ஒழிந்தன; கல்வி மறைந்து போயிற்று; ஆராய்ச்சி வெறுக்கப்பட்டது; சுதந்திரம் அழிக்கப்பட்டது. அறிவாளிகளெல்லாம் சிறையிலடைக்கப் பட்டார்கள்; யோக்கியமானவர்களும் குணசீலர்களும் தேசப்பிரஷ்டம் செய்யப்பட்டார்கள். உண்மையை உரைத்த தைரியவான்களும் சத்ய வீரர்களும் கொலை செய்யப்பட்டார்கள். 'ஞானிகள்' எப்பொழுதும் ஜன சமூகத்துக்கே பெரிதும் விரோதியாயிருக்கிறார்கள்.

நாம் சுகமாகவிருப்பது யாரால்? நாம் முன்னேற்றமடைவது யாரால்? நாம் அதிக நாள் ஜீவித்திருப்பது யாரால்? நாம் பிணியைப்போக்கிக் கொள்வது யாரால்? துன்பத்தைப் போக்கிக் கொள்வது யாரால்? நாம் நல்ல ஆடை அணிந்து விருந்து உண்டு மாளிகையில் வாழ்வது யாரால்? உள்ளத்தைக் கவரும் சங்கீதத்தைக் கேட்டு ஆனந்தமுறுவது யாரால்? சிறந்த கவிகளைப் படித்து அறிவைப் பெருக்கிக் கொள்வது யாரின் உதவியால்? ஜன சமூகத்துக்கினை விருக்கும் கோடிக்கணக்கான இயந்திரங்கள்-ஜன சமூகத்துக்கு நன்மையைச் செய்து வரும் இயந்திரங்கள்—யாரால் கண்டுபிடிக்கப் பட்டன. இவைகளெல்லாம் ஞானிகளால் ஆனவையல்ல. உலகப்பற்றுள்ளவர்களாலும் உலக வாழ்க்கையில் கட்டுப்பட்டவர்களாலுமே உலகத்துக்கு இவ்வளவு நன்மைகள் செய்யப்பட்டிருக்கின்றன. இவர்களுக்கு நான் எனது மனமார்ந்த வந்தனத்தை செலுத்துகின்றேன். இத்தகையோர்களாலேயே நாம் சுகமாக வாழ்ந்து வருகிறோம்.

"திராவிடன்."

---

## மேலூர் தாலூக்கா வாசிகளே! ஏமாந்துவிடாதீர்கள்.

இந்த தாலூக்கா போர்டு ஏற்பட்டு சுமார் ஒன்பது வருஷங்களாகிறது. இந்த ஒன்பது வருஷங்களாகியும் ஆறு லக்ஷம் ஜனங்கள் வசிக்கக்கூடிய இந்த மேலூர் தாலூக்காவுக்கு ஒரு ஹைஸ்கூல் ஏற்படுத்தவில்லை. கல்விக்காக பிள்ளைகளும் பெற்றோர்களும் 18 மைல் தூரத்திலுள்ள மதுரைக்கு போகவேண்டியிருக்கிறது. இக்கஷ்ட நஷ்டங்களை தீர்க்கவேணுமென்று மேலூர்தாலூக்கா வாசிகளாகிய பொது ஜனங்களும், மிராஸ்தார்களும், தாலூக்கா போர்டாருக்கும், ஜில்லா போர்டாருக்கும் இவ்வொன்பது வருஷமாக மகஜர் மூலமாயும், விண்ணப்பங்கள் மூலமாயும், நேரிலும், எவ்வளவோ மன்றாடிக் கேட்டுப்பார்த்தும் செவிடன் காதில் ஊதிய சங்கின் தொனிபோல் பயனற்றதாய் முடிந்தது.

ஆகவே; இப்போது மறுபடியும் வருகிற ஆகஸ்டு மாதத்தில் தாலூக்கா போர்டு மெம்பர்கள் எலக்ஷனும் பிரஸிடெண்டு எலக்ஷனும் வருகிறபடியால் மேலூர்தாலூக்கா வாசிகளாகிய என் அன்பார்ந்த சகோதரர்களே! இந்த எலக்ஷன் சமயத்தில் உங்களிடம் வரும் அபேக்ஷகளில், மேலூரில் ஒரு ஹைஸ்கூல் ஏற்படுத்த பரிபூரணமாய் சம்மதித்து சத்தியம் செய்து கொடுப்போரையே தேர்ந்தெடுக்கவேண்டுமாய்க் கேட்டுக்கொள்ளுகிறேன். இது சமயம் தவறினால் தாலூக்கா போர்டு மெம்பர்களாவது அபேக்ஷகர்களாவது காணக்கிடையார்கள்; கண்டாலும் பேசார்கள். ஆனதால் தாலூக்கா வாசிகளே ஏமாந்து விடாதீர்கள்.

வீ. முத்துசாமி.

---

## சங்ககிரி தாலூக்கா போர்டு தலைவர் தேர்தல்.

கொங்கணாபுரம் ஜமீன்தாரும் பிராமணர்களை அடியோடு போர்டுக்குள் நுழையவிடாமல் தேர்தலில் மிகவும் சிரத்தை எடுத்துக்கொண்டவருமான உயர்திருவாளர் செங்கோட்டு வேலகவுண்டர் அவர்கள் ஏகமனதாய் சங்ககிரி தாலூக்கா போர்டுக்கு தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

கே. சுப்பிரமணியம்.

# கோயமுத்தூருக்கு முதல் மந்திரி விஜயம்.

### உபசாரப்பத்திரங்கள்.

நமது மாகாண முதல் மந்திரி கனம் டாக்டர் சுப்பராயன் அவர்கள் 16வ கோயமுத்தூருக்கு வந்திருந்ததை ஒட்டி கோவை முனிசிபாலிட்டியாரும் ஜில்லா போர்டாரும் அவருக்கு வரவேற்பளித்து உபசாரப் பத்திரம் வாசித்துக் கொடுத்தார்கள். வரவேற்பு வெகு ஆடம்பரமாய் அதாவது தெருவெல்லால் தோரணங்களாலும் வளைவுகளாலும் அலங்கரிக்கப்பட்டிருந்தது. பாண்டு முதலிய மேளங்களுடன் ஊர்வலம் நடைபெற்றது. வரவேற்பு விழாவிற்கு கோவை ஜில்லா பிரமுகர்கள் அனேகர்களும வெள்ளைக்கார அதிகாரிகளும் ஸ்திரீகளும் விஜயம்செய்திருந்தார்கள் ஆனல்பார்ப்பனர்கள் மாத்திரம் வெகு சிலரே வந்திருந்தது குறிப்பிடத்தககது.

மந்திரிக்கு டிஸ்டிரிக்ட் போர்டு தலைவர் என்கின்ற முறையிலும் முனிசிபல் சேர்மென் என்கின்ற முறையிலும் திருவாளர் ராவ்பகதூர் சி. எஸ். இரத்தினசபாபதி முதலியார் அவர்களால தனித்தனியே இரண்டு இடங்களில் இரண்டு உபசாரப்பத்திரங்கள் பல வேண்டுகோள்களை ஆதாரமாகக் கொண்டு வாசித்துக்கொடுக்கப்பட்டன.

அவற்றில், முக்கியமாக இரண்டு பத்திரத்திலும் குறிப்பிட்டதானது, கோவை இரண்டாவது வகுப்பு கல்லூரியை முதல் வகுப்புக்கல்லூரி ஆக்கவேண்டும் என்பதும் அதற்குதக்கஉதவித் தொகைஅளிக்க வேண்டும் என்பதுமாகும.

கனம் மந்திரி அவற்றிற்கு பதிலளிக்கையில் உயர்தரக் கல்விவிஷயமாக பெருந்தொகை கேட்டிருப்பதும் கல்லூரியை முதல் வகுப்பு கல்லூரியாக்க வேண்டுமென்று கேட்டிருப்பதும் தாம் ஒப்புக்கொள்ள முடியாதென்றும், ஏனென்றால் கல்வி விஷயத்தில் தாம் இனிமேல் அதிகச் செலவு செய்ய முடியாதென்றும், திரு. அண்ணாமலை செட்டியார் அவர்கள் ஏற்படுத்தப்போகும் மீனுக்ஷி காலேஜுக்குப் பெருந்தொகை கொடுக்கவேண்டியிருக்கிறதென்றும், மற்றபடி கல்வி விஷயமாய் தாம் செலவழிக்கப் போகும் ஒவ்வொரு பைசாவையும் பாமர மக்களின் ஆரம்பக் கல்விக்கே செலவழித்து எப்படியாவது நமது நாட்டில் பெரும்பான்மையான மக்களுக்குக் கல்வி யில்லையென்று சொல்லப்படுவதை அடியோடு ஒழிக்க தான் தீர்மானித்திருப்பதாகவும் சொன்னர்.

ரோட்டுகள் விஷயமாக சொன்ன விஷயத்திற்கு, கூடிய உதவி செய்வதாகவும் அநேகமாக சுங்கங்களை எடுத்துவிடுவதற்கு யோசனை நடந்து வருகிறதென்றும் சொல்லி முனிசிபல் பள்ளிக்கூடத்திற்கு அஸ்திவாரக் கல்லை நாட்டினர்.

பின்பு திடீரென்று தலைவர் ரத்னசபாபதி முதலியாரவர்கள், திரு. நாயக்கர் மந்திரிக்கு வந்தனோபசாரம் சொல்வாரென்று தெரிவித்தார்.

### திரு. நாயக்கர்.

திரு. நாயக்கா பெரிய கரகோஷத்தினிடையே எழுந்து பேசியதின் சுருக்கமாவது கனவான்களே! நண்பர் திரு. முதலியாரவர்கள் என்னை வந்தனம் கூறும்படி கட்டளையிட்டார். நான் இங்கு பேசவேண்டியிருக்குமென்று ஒரு சிறிதும் எதிர்பார்த்திராத நிலையில் திடீரென கட்டளையிடப்பட்டுவிட்டேன். என்றாலும் நமது மந்திரியவர்கள் வரவேற்புப் பத்திரங்களுக்குப் பதிலளித்ததிலிருந்து நான் பாராட்டத் தகுந்த ஒரு விஷயத்தை எடுத்துக் காட்டி பாமர மக்கள் சார்பாக இரண்டொரு வார்த்தை சொல்லுகிறேன்.

கல்வி விஷயமாக முனிசிபாலிட்டியாரும் ஜில்லா போர்டாரும் உபசாரப் பத்திரத்தில் கேட்டுக்கொண்டதற்கு கனம் மந்திரியவர்கள் சொன்ன பதில் எனக்கு மிகவும் திருப்தியாயிருந்தது. அதாவது தாம் இனிமேல் உயர்தரக் கல்விக்குப் பணம் செலவழிக்க முடியாதென்றும் பாமர மக்களின் ஆரம்பக் கல்விக்கு செலவிடப் போவதாகவும் சொன்னது ரொம்பவும் நியாயமான விஷயமென்றே சொல்வேன். ஏனெனில், நமது நாட்டில் 100-க்கு 6 அல்லது 7 பேபோடித்தவர்கள் இருக்கிறார்கள். அப்படியிருக்க படிப்பு சம்மந்தமாகச் செலவழிக்கும் பணங்களையெல்லாம் படித்த கூட்டத்தார் என்போர்களுக்கே அதிகப் படிப்புக்கு செலவழிக்க வேண்டுமென்பது மிகவும் அக்கிரமமாகும். இவர்களில் பெரும்பாலோர் வரி கொடுக்காதவர்களாகவே இருக்கவும் கூடும். அதிகப் படிப்பு அதாவது உயர்தரப் படிப்பு படிக்க வேண்டுமென்பவன் சர்க்காரிடமிருந்து அதாவது பொது ஜனங்களின் வரியிலிருந்து ஒரு பைசா அளவு எதிர் பாராமல் அவனவன் சொந்தப்பணத்திலிருந்தே படித்துக் கொள்ளவேண்டும். அப்படிக்கில்லாமல் படித்தவனுக்கே உயர்தரப்படிப்புக்கு என்று மேலும் செலவழிக்கவேண்டுமென்பது சாப்பிட்டிருப்பவனுக்கு மறுபடியும் ஆகாரத்தை அவன் வாயில் கொட்டி திணிப்பதும், சுத்தமாய் சாப்பாடே இல்லாமலிருப்பவனுக்கு அடியோடு பட்டினி போட்டு பட்டினியாலேயே சாகும்படி செய்வதும் ஆன காரியத்தை ஒத்திருக்கிறது. ஒரு நாட்டில் 100-க்கு 93 பேர் எழுத்து வாசனையே இல்லாமலிருக்கிறார்கள் என்பதும், சில பேர் மாத்திரம் அதிகமானபடிப்பைப் படித்துவிட்டு அடிமைத் தன்மைக்கு போட்டி போட்டுக் கொண்டிருக்கிறார்களென்பதும் இந்த நாட்டின் சுயமரியாதையற்ற தன்மையைக்காட்டுவதற்கு போதிய உதாரணமாகுமென்றே சொல்வேன்.

மேலும், பாமரமக்கள் கல்வியென்று சொல்வதில் நம் பெண்மக்களையும் சேர்த்துக் கொள்ளவேண்டுமென்பது எனது அபிப்பிராயம். ஏனெனில் நமது நாட்டுப் பெண்மக்கள் 1000க்கு ஒருவர் கூட படிக்கவில்லையென்று சொல்லுவதை விடப்பெரிய ஒரு அவமானம் இந்நாட்டிற்கு வேறெதுவுமில்லை என்றே சொல்லுவேன். வெறும் ஆண்களை மாத்திரம் படிக்கவைத்து விட்டு பெண்களை படிக்கவைக்காமல் இருக்கும் நமது சமூகம் ஒரு கண் குருடாயுள்ள முகத்தை ஒத்ததென்றுதான் சொல்லவேண்டும். ஆகையால் பெண்களுக்கும் ஆண்களுக்கும் சமமான க்ல்வி கொடுக்கும் விஷயத்தில் கவலை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று இந்தச் சமயத்தில் மந்திரியவர்களுக்கு நினைப்புக்குக்கொண்டுவருகிறேன். நான் சொல்லப்போவது ஒரு சமயம் அதிகப்பிரசங்கமென்று சிலருக்குத் தோன்றக்கூடுமானாலும் என் மனோபாவத்தை தெரிவிக்கக்கடமைப்பட்டிருக்கிறேன். என்னவென்றால் துரதிர்ஷ்டவசமாக நான் எப்போதாவது ஒரு சமயம் மந்திரியாக நேருமானல் குறைந்தது ஒரு பத்து வருஷத்திற்காவது ஆண் பிள்ளைகள் படிப்பிற்குச் செலவு செய்வதை அடியோடு விட்டு விட்டு பெண்மக்களின் கல்விக்காகவே எல்லாப் பணங்களையும் செலவு செய்வேன் என்று தைரியமாய்ச் சொல்லுகிறேன். எனவே, கனம் மந்திரியவர்கள் இங்கு வாக்களித்த பாமர மக்கள் கல்வி அபிவிர்த்தியை முன்னிட்டு அது முடிவுபெறுகிறதானல் அவரே மந்திரியாயிருந்து காரியங்களை முடித்துக்கொடுக்க வேண்டுமென்றுகூட பாமர மக்கள் சார்பாக நான் ஆசைப்படுகிறேன். என்று பேசி முடித்தார்.

### கனம் மந்திரி அவர்களுக்கு விருந்து.

ஜில்லாபோர்டு தலைவரும முனிசிபல் அக்கிராசனாதிபதியுமான திரு. ராவ் பகதூர் சி. எஸ். ரத்தினசபாபதி முதலியார் அவர்கள் இல்லத்தில் 16—7—28 இரவு 8—30 மணிக்கு கனம் மந்திரி டாக்டர் சுப்பராயன் அவர்களுக்கு விருந்து நடைபெற்றது விருந்துக்கு வந்திருந்தவர்களில் குறிப்பிடத்தக்கவர்கள் திருவாளர்கள் ஊத்துக்குளி குமார ஜமீன்தார், மாட்சிமை தங்கிய திருவனந்தபுரம் மகாராஜா, எய். டி. கேம். நடராஜ காளிங்கராயர், பட்டி வீரன்பட்டி சௌந்திரபாண்டிய நாடார், எம். எல். சி. சுயமரியாதைத் தலைவரான ஈ. வெ இராமசாமி நாயக்கர், பட்டக்காரர் ஈரோடு தாலுக்கா போர்டு தலைவர் ராய்பகதூர் நல்லதம்பி மன்றாடியார், ராவ் பகதூர் டி. ஏ. இராமலிங்கஞ் செட்டியார், கோவை தாலூக்கா பிரசிடெண்டு வி. சி. பழனிசாமிக் கவுண்டர், ஜில்லா போர்டு உபதலைவர் எஸ். என். பொன்னைய கவுண்டர், கோவை முனிசிபல் உபத் தலைவர் வி. அருணாசலம் செட்டியார், பி. இரத்தின சபாபதிக் கவுண்டர், சி. எம். இராமச்சந்திரஞ் செட்டியார், எஸ். பீமைய செட்டியார், நஞ்சுண்ட சவுண்டர், சி. வி. வி. சுப்பைய செட்டியார், கேசவ பிள்ளையவர்கள், சுப்பா செட்டியார், எம். சம்பந்த முதலியார், எ. டி. இலட்சுமணசாமி முதலியார், டி. ஆர். சுந்தரம் பிள்ளை, டி. டி. இரத்தின சபாபதி பிள்ளை, சதாசிவ முதலியார், திருநாவுக்கரசு முதலியார் அவர்கள், ஜில்லாபோர்டு மெம்பர் ஈரோடு சுப்பன் அவர்கள், இராஜரத்தினம் பிள்ளை, துரைசாமி பிள்ளை முதலியவர்களும் மற்றும் பல குறிப்பிடத்தக்க பெரியோர்களுமாக சுமார் 150-பேர்கள் வந்திருந்தார்கள். திரு. முதலியார் அவர்கள் விருந்தினர்களை அன்போடு ஏற்று உபசரித்து அறு சுவை உண்டியளித்தது பெரிதும் பாராட்டத்தக்கது. மந்திரியவர்கள் இரவு 10-மணிக்கு ஊத்துக்குளி ஜமீன்தார் அவர்கள் பங்களாவிற்குப் புறப்பட்டுச் சென்றார்கள். ஒரு நிருபர்.

## திருச்செங்கோடு
# சுயமரியாதைச்சங்கத் திறப்புவிழா.

### எங்கும் காணாத காட்சி.

(நமது நிருபர்)

ஏற்கனவே நமது 'திராவிடன்' பத்திரிகையில் அறிவித்திருந்தபடிக்கு இன்றைய தினம் ஜூலை 12-தேதி "சுயமரியாதை"ச் சங்கத் திறப்பு விழாவை நடத்துவதற்கு இரண்டு மூன்று தினங்கள் முன்னாடியே உள்ளூரிலும், வெளியூர்களிலும் துண்டுப் பிரசுரங்களும் அழைப்புக்கடிதங்களும் ஏராளமாய் வழங்கப்பட்டன. அதன்படியே சேலம், ஓமலூர், தாரமங்கலம் பாகல்பட்டி, மாக்கோட்டை, கொங்கணபுரம், எடப்பாடி, தேவூர், படைவீடு, சங்ககிரி, ஈரோடு, கரிச்சிபாளையம், குமாரமங்கலம், வைகப் பொன்மலை, புதுப்பாளையம், பவானி முதலிய இடங்களிலிருந்து ஜில்லா போர்டு, தாலூகா போர்டு, யூனியன் போர்டு பிரசிடெண்டுகளும், மெம்பர்களும், கிராம அதிகாரிகளும், பிரபல வர்த்தகர்களும், இன்னும் அநேக கனவான்களும் குறித்த நேரத்திற்கு முன்னதாகவே விஜயம் செய்ய, மகாநாட்டுக்கென தோரணங்களாலும், சுயமரியாதை வாக்கியங்களாலும் அலங்கரிக்கப்பட்டிருந்த செங்குந்த மடத்திற்கு இந்நகர்வாசிகளாலும், இவ்வூர் சேர்மெனும், பிரபல வர்த்தகரும் செல்வந்தருமான திருவாளர் T. R. கந்தப்ப முதலியாரவர்களாலும், T. V. நடேச முதலியாரவர்களாலும் மேள தாளத்துடன் நன்கு வரவேற்கப்பட்டு அழைத்துச்செல்லப்பட்டார்கள்.

### சங்க ஆரம்பம்.

வந்திருந்தவர்களில் முக்கியமான வெளியூர் பிரமுகர்கள்:- திருவாளர்கள்:- சேலம் ஜில்லா போர்டு பிரசிடெண்ட் ராவ்பகதூர் எஸ். எல்லப்ப செட்டியார், சங்ககிரி தாலூகா போர்டு பிரசிடெண்ட் கொங்கணபுரம் ஜமீன்தார் என். செங்கோட்டு வேலு கவுண்டர், புதுப்பாளையம் காந்தி ஆசிரமம் ஜமீன்தார் பி. கே. ரத்னசபாபதி கவுண்டர், கொங்கணபுரம் ஜமீன்தார் கே. எ. நாச்சியப்ப கவுண்டர், சேலம் ஜில்லா போர்டு மெம்பர் தேவூர் எ. நஞ்சுராஜய்யா, சேலம் தாலூகா போர்டு வைஸ் பிரசிடெண்ட் டி. வி. பங்காருசாமி செட்டியார், சேலம் வக்கீல் அமிர்தலிங்கம் செட்டியார் பி. எ., பி. எல்., தாலூகா போர்டு மெம்பர் படைவீடு அத்தியண்ணகவுண்டர், சங்ககிரி வெங்கர் பிரபலம் பிள்ளை & Bros., ஓமலூர் யூனியன் போர்டு பிரசிடெண்ட் அர்த்தனாரி செட்டியார், ஓமலூர் கதிர் செட்டியார், சேலம் அமிர்தலிங்கம் முதலியார், சுயமரியாதைச் சங்கஸ்தாபகர் திருநெல்வேலி கே. சுப்ரமணியம், கரிச்சிபாளையம் புள்ளிக்காரர் வி. சொக்கலிங்க முதலியார், ஈரோடு ஜவுளி வர்த்தகர் டி. வி. பெரியசாமி முதலியார், சேலம் நூல் கிட்டங்கி டி. ஆர். முருகேச முதலியார் முதலிய இன்னும அநேக கனவான்களும் ஆவர்.

உள்ளூர் பிரமுகர்களில் முக்கியமானவர்கள்:- திருவாளர்கள் தாலூகாபோர்டுவைஸ் பிரசிடெண்டும், யூனியன் சேர்மென்னும், பிரபல வர்த்தகருமான புள்ளிக்காரர் டி. ஆர். கந்தப்ப முதலியார், தாலூகா போர்டு மெம்பரும்காளீஸ்வரமில் அண்டுகல்லாய்மில் ஏஜெண்டும் பிரபல நூல்வர்த்தகருமான டி. வி. நடேசமுதலியார், ஸ்ரீ கிருஷ்ணா ஜின்னிங் பேக்டரிமேனேஜிங் டைரக்டரும் பிரபல பஞ்சு வர்த்தகருமான ஆர். ஆர். பி. கிருஷ்ணய்ய செட்டியார், ஸ்ரீசண்முகானந்த ஜின்னிங்பேக்டரிமானேஜரும் கூ. அ. சு, அண்டு சன்ஸ் டி. எஸ். அண்ணாமலை முதலியார்; ஓ. கே. எஸ். எஸ். ராமசாமி முதலியார், சி. எம். சென்னியப்பமுதலியார் ப. க. பழனியப்பன், தாருமண்டி ஆர். எம். ஆர். எம் முத்துக் கருப்பண செட்டியார் &. Co. எ. எஸ். மாணிக்கம் செட்டியார், டி. எஸ். அப்பாவு செட்டியார், எஸ் கே. சி. வேலாயுதமுதலியார், என். எஸ். பி. மாரிமுத்து முதலியார், டி. கே பானுமுதலியார், நெல்மண்டி டி. ஆர் பெருமாள் முதலியார், எம். பி. காளியப்ப முதலியார், கோயமுத்தூர் என். தெண்டபாணி செட்டியார், அர்த்தனாரி பண்டாரம், என். பழனிசாமி பண்டாரம், வி. கந்தசாமி செட்டியார், ஆர் சுந்தரம் செட்டியார், ஆனந்த நிலையம் ஸ்ரீதர சுவாமிகள், சுயமரியாதை வீரர் வெடி மருந்து ஷாப் டி. ராக்கா நாயக்கர், ரங்கசாமி நாயுடு ஆகிய இன்னும் பல கனவான்களும் பெண்மணிகளும் விஜயம் செய்திருந்தது குறிப்பிடத்தக்கது.

தெய்வ வணக்கம் முடிந்ததும் சேலம் ஜில்லா போர்டு பிரசிடெண்ட் ராவ் பகதூர் எஸ். எல்லப்ப செட்டியார் அவர்களை அக்கிராசனம் வகிக்கும்படி டி. வி. நடேச முதலியார் பிரேரேபிக்க டி. ஆர். முருகேச முதலியார் அவர்கள் ஆமோதிக்க பெருத்த கரகோஷத்திடையே திருவாளர் செட்டியார் அக்கிராசனத் தமர்ந்தார்.

### தலைவர் முன்னுரை.

பெரியோர்களே! இம்மாபெரும் கூட்டத்திற்கு என்னை அக்கிராசனராகத் தேர்ந்தெடுத்ததற்கு நான் சிறிதும்பொருத்தமுடையவனல்லேன். ஆயினும் இங்கு ஸ்தாபிக்கப் போகும் சுயமரியாதைச் சங்கத்தின் பேரில் எனக்குள்ள ஊக்கமும், அன்புமே இப்பதவியை ஏற்றுக் கொள்ளும்படி செய்தது. இதற்காக எனது மனமார்ந்த வந்தனத்தைச் செலுத்துகிறேன். இப்பொழுது இச்சங்கத்தை கொங்கணபுரம் ஜமீன்தாரும் சங்ககிரி தாலூகா போர்டு பிரசிடெண்டுமான திருவாளர் என். செங்கோட்டு வேலகவுண்டர் அவர்கள் திறந்து வைப்பாரென் றுசொல்லி ஆசனத்தமர்ந்தார்.

### சங்கம் திறந்து வைத்தல்.

பலத்தகரகோஷத்தினிடையே ஜமீன்தார் என் செங்கோட்டு வேலகவுண்டர் எழுந்து பேசியதின் சாராம்சமாவது.

சகோதரர்களே! என்னுடைய ஜீவிய நாளில் இது ஒரு மகத்தான நாளென்று நான் நினைத்து உங்கள் முன் சந்தோஷமாய் நிற்கிறேன். நமது மாபெரும் தலைவரும் வைக்கம வீரருமான ஈ. வெ. ராமசாமி நாயக்கரவர்களால் தோற்றுவிக்கப்பட்ட இச்சுயமரியாதைச் சங்கத்தை திறக்கும் பாக்கியத்தை எனக்களித்ததற்காக எனது மனமார்ந்த வந்தனத்தை உங்களுக்குச் சமர்ப்பிக்கிறேன். (கரகோஷம்) இச்சுயமரியாதை இயக்கமானது நம்முடைய விடுதலைக்கு அடிப்படையாக இருப்பதால் நாம் ஒவ்வொருவரும் இதற்காக முன்னணியில் நின்று தீவிர ஒத்துழைப்புடன் இச்சங்கத்தின் கொள்கைகளை மேன் மேலும் பரவச் செய்து நம்முடைய வெற்றிக் கொடியை நிலை நாட்ட வேண்டுமென்று நான் உங்கள் ஒவ்வொருவரையும் கேட்டுக் கொள்ளுகிறேன் என அமர்ந்தார்.

### வைக்கம் வீரரின் திரு வுருவப்படத்தை திறந்து வைத்தல்.

பின்னர் அக்கிராசனர் எழுந்து வைக்கம் வீரரின் திருவுருவப்படத்தை திறந்து வைக்குமாறு புதுப்பாளையம் ஜமீன்தார் காந்தி ஆசிரமம் பி. கே. ரத்னசபாபதிக் கவுண்டரவர்களை கேட்டுக் கொள்ள, நீண்டகரகோஷமும் பெருத்த ஜெயகோஷங்களும்சப்திக்க திருவாளர் ஜமீன்தார் பி. கே. ரத்னசபாபதிக்கவுண்டர் எழுந்துதிருவுருவப்படத்தை திறந்து வைக்கும் முன் நம் தலைவர் நாயக்கரைப்பற்றி பேசியதின் முக்ய சாராம்சமாவது.

சபையோர்களே! சகோதரர்களே!!

என்னை இப்பெரியாரின் திருவுருவப்படத்தை திறந்து வைக்கவேண்டுமெனக் கேட்ட பொழுது நான் முதலில் விசனமும் பின்னால் சந்தோஷமும் அடைந்தேன். முதலாவது விசனமடைந்ததின் காரணமென்னவெனில் மகாதியாகியும் உண்மை உழைப்பாளியுமாகிய இப்பெரியாரின் படத்தைத திறந்து வைக்க நான் முற்றிலும் அருகதையுள்ளவனல்லேன் என்று விசனித்தேன். பின்னால் இந்தப் பாக்கியம் எனக்குக் கிடைத்ததற்காக நான் சந்தோஷமடைந்தேன். இருமிகு நாயக்கரவர்களின் குடும்பமும் எங்களுடைய குடும்பமும் பரம்பரையாக சிநேக பந்துத்வம் கொண்டாடியே வந்தது. நான் எப்பொழுதும் அவர்களை தந்தைக்குச் சமமாகவே கருதி வருகிறேன். நாங்களிருவரும் ஏகோபித்து காங்கிரஸ் ஒத்துழையாமை இயக்கத்தின் பொழுது எங்களால் இயன்ற ஊழியங்களைச் செய்துவந்தோம். தற்பொழுது நம் பெரியார் நாயக்கர் நம்முடைய விடுதலைக்காக சிறந்த முயற்சி எடுத்துக்கொண்டு வருகிறார். நான் அவர்களுடைய கொள்கைகளை முற்றிலும் ஆதரிக்கிறேன், ஆனால் அவர்கள் இந்து மதத்தையே அடியோடு ஒழித்துவிட வேண்டுமென்று சொல்லுகிறார்கள். அதில் மாத்திரம் எனக்கு விளங்கவில்லை. நான் அவர்களைச்சந்தித்து பல முறை பலவிஷயங்களைப்பற்றிப் பேசியிருந்தும் இந்து மதத்தைப்பற்றித் தர்க்கிக்காதது எனக்கவரிடமிருந்த பயத்தின் காரணமேயாகும். ஆனல் அவருடைய மற்ற கொள்கைகளை இப்பொழுதும அனுஷ்டித்துவருகிறேன். அப்படியே ஒவ்வொருவரையும் காரியத்தில் நடத்திக்காண்பிக்கும்படி கேட்டுக்கொண்டு என் அப்ப

(இதன் தொடர்ச்சி 13-ம் பக்கம் பார்க்க

# புராணங்கள்.

## முகவுரை.

(சத்திய விரதன் எழுதுவது)

'இதிகாசம்' என்னும் தலைப்பின் கீழ் இராமாயணத்தைப்பற்றி அன்பர் திரு. சந்திரசேகர பாவலர் அவர்கள் "குடி அரசில்" இதுவரை சுமார் 15 கட்டுரைகள் எழுதியிருக்கின்றார்கள். அதாவது இராமாயணத்தில், வால்மீகி, கம்பர் ஆகியவர்களால் செய்யப்பட்டதாகச்சொல்லும் நூல்களில், இருந்த விஷயங்களையும் அதற்குத் திருவாளர்கள் அனந்தாச்சாரி, சி. ஆர். சீனிவாசாச்சாரி, நடேச சாஸ்திரி, மன்மதநாததத்தர், தென்னாடு, வடநாடு முதலான பார்ப்பனர்களின் மொழி பெயர்ப்புகளில் இருக்கின்ற வாக்கியங்களையும் எடுத்துப்போட்டு தெளிவாய் விளக்கிக்காட்டி அதன் அசம்பாவிதங்களையும் ஆபாசங்களையும் பட்சபாதங்களையும் புரட்டுகளையும் நன்றாக விளக்கி வந்திருக்கின்றார். அதற்கு இதுவரை ஒருவராவது பொறுப்புடன் ஆட்சேபனையோ, மறுப்போ எழுத முன் வந்ததாகவும் தெரியவில்லை. ஆனாலும "தமிழ்நாடு" என்கிற ஒரு சென்னை தினசரியில் "நாயக்கர் பிரசாரம்" என்ற தலைப்பின் கீழ் ஒரு வியாசமும் "வைணவன்" என்கின்ற மாதப் பத்திரிகையில் ஒன்று இரண்டு வியாசங்களும் காணப்பட்டதாக எனது தகவலுக்கு எட்டியன.

அவைகளில் "தமிழ்நாடு" என்கின்ற பத்திரிகையில் வந்த வியாசமானது திரு. நாயக்கருக்கும் திரு. வரதாராஜுலு நாயுடுவுக்கும் ஏற்பட்ட மனஸ்தாபம் காரணமாக நாயக்கர் மீது குறை கூறும் எண்ணத்தைக்கொண்டு எழுதப்பட்டதானாலும் அதற்கும்தக்க சமாதானம் திரு. பாவலர் அவர்களாலேயே இவ்வாறாகக் 'குடி அரசில்' வெளிபடுத்தப்பட்டிருக்கின்றது மற்றபடி "வைணவன்" என்னும் ஒரு மாதப் பத்திரிகையில் வந்ததாகச்சொன்ன வியாசங்களானவை ஒருசிறிதும் குறிப்பில்லாமல் "இராமனை வைபலாமா? சீதையை வையலாமா" என்பது போன்ற ஆவலாதிகளும் "இராமாயணத்தைவிட கேவலமான புராணங்களும் இராமனைவிட மோசமான கடவுள்களுமிருக்க இதைப்பற்றி மாத்திரம் ஏன் இப்படி எழுதவேண்டும்" என்பதுபோன்றகேள்விகளுமே கேட்கப்பட்டதல்லாமல் ஒரு விஷயத்தையாவது குறிப்பிட்டு அது பொய் என்பதாக மறுத்ததாகக் காணப்படவில்லை. மற்றபடி பண்டிதர்கள் ஆராய்ச்சிக்காரர்கள், கவி இன்பம் நுகருவோர்கள், மத அபிமானிகள், இந்து மத சீர்திருத்தக்காரர்கள் என்போர்கள் முதலிய எவரும் முன்வந்து இதுவிஷயமாய் எவ்வித மறுப்பையோ அதிருப்தியையோ காட்டினதாகவும் காணப்படவில்லை.

ஆனால் சில வைணவர்கள் என்போர்களுக்கு மாத்திரம், இவ்வியாசங்கள் யாரோ ஒரு சைவரால் சைவப்பிரசாரம் செய்ய வேண்டி வைணவமதத்தை குற்றம் சொல்லும்முறையில் வெளியாக்கப்படுகின்றது என்றும் அப்படிக்கில்லாமல் பொதுவாக புராணப்புரட்டுகளைப்பற்றி எழுதுவதாயிருந்தால் சைவ சம்பந்தமான புராணப்புரட்டைவெளி இடக்கூடாதுஎன்றும், பாவலர்வெளியிடாவிட்டாலும் "குடி அரசு" ஏன் வெளியிடவில்லை என்றும் அப்படி வெளியிடாததற்குக்காரணம் "குடி அரசு" பத்திராதிபர் சைவர்களுக்கு பயந்து கொண்டு இருப்பது தான் என்றும் மற்றும் இது போன்ற சில ஐயங்கள் தோன்றியதாக நான் பாரிபாய் கேள்விப்பட நேர்ந்தது. இந்நிலையில் ஒரு திருச்சிற்றம்பலம் என்போர் "குடி அரசு" 20-5-28 இதழில் "தமிழ்நாடும் அடிமை வாழ்வும்" என்ற தலைப்பின் கீழ் எழுதிய ஒரு வியாசத்தில் சைவ சமயத்தைச் சேர்ந்த நால்வர்களைப் பற்றிய சில குறிப்புகள் வரைந்ததற்குப் பின்னால், திருவாளர் திரு. வி கல்யாண சுந்தர முதலியார் சீர்திருத்தம் என்றும், நாஸ்திகம் என்றும், பெரியார்களை வைதல் என்றும்,போர் தொடங்கல் என்றும் கூறிக்கொண்டு சீறியதற்குப்பின் அச்சைவ சம்பந்தமானபுராணப்புரட்டுகளையும் வெளியிடஇனி அரை நாழி தாமதித்தாலும் மேற் கூறியபடி வைணவர்கள் ஐயத்திற்கு ஆதாரம் ஏற்பட்டுவிடும் என்கின்ற கருத்துக்கொண்டு நானாகவே முன்வந்து "குடி அரசு" பத்திராதிபரை சைவ சம்பந்தமான புராணப்புரட்டுகளையும் வெளியாக்க எனக்கும் வாரம்ஒரு பக்கம் உதவவேண்டுமென்று விண்ணப்பித்துக் கொண்டதற்கு வாராவாரம் கொடுப்பதாய் வாக்களிக்க முடியாவிட்டாலும் கூடுமானவரை உதவுவதாக அவரும ஒத்துக் கொண்டிருப்பதால் அதைப்பற்றி எழுதிவர ஒருவாறு துணிந்துள்ளேன். எனவே அவற்றை இனி வாசித்துவரும் அன்பர்கள் கடுப்பு,காய்ப்பு, எரிப்பு முதலியவைகள் இல்லாமல் சமநிலையில்இருந்து படித்து உண்மையை உணரவேண்டுமாய்ப் பணிவுடன் கேட்டுக்கொள்ளுகிறேன். இத்தொண்டில் இறங்கிய எனது கருத்து என்னவென்றால், பண்டிதர்கள் புராணங்கள் ஆகியவைகளின் ஆதிக்கங்களால் மக்கள் எவ்வளவுதூரம் அடிமைப்பட்டிருக்கின்றார்கள் என்பதையும் அவைகளால் மக்கள் பகுத்தறிவு பெருக்கமடைவது எவ்வளவுதூரம் தடைப்படுத்திபாழாக்கப் பட்டிருக்கிறது என்பதையும் எடுத்துக்காட்டி அவைகளிலிருந்து மக்களை விடுவிக்கும் கருத்துக்கொண்டே யல்லாமல் வேறல்ல என்பதையும் தெரியப்படுத்திக் கொள்ளுகிறேன்.

அடுத்த கட்டுரையில், எடுத்துக்கொண்ட விஷயம் தொடங்கப்படும்.

---


# ஈரோட்டில் காங்கிரஸ் பிரசாரத்தின் கதி.

சுயமரியாதை இயக்கத்திற்கு பிறப்பிடமாகிய ஈரோட்டிலேயே சைமன் கமிஷன் பகிஷ்காரத்துக்கு ஆதாவு தேடிக்கொள்ள வேண்டுமென்று திருவாளர்கள் வரதாராஜுலுவும், C. V. வெங்கிட்டரமணய்யங்காரும் ஈரோட்டில் பார்ப்பனருள் சில முக்கியஸ்தர்களுக்கு கடிதப் போக்குவாத்து செய்துவந்ததின் பயனாக, பார்ப்பனர் முயற்சியால் 7.7-28-ந் தேதியில் அலிசவுக்கில்ஒரு பொதுக் கூட்டம் கூட்ட ஏற்பாடு செய்யப்பட்டது. வதந்தி யுலாவியபடி வரதாராஜுலுவும், அய்யங்காரும் கூட்டத்திற்கு வரவில்லை. ஜனாப் பஷீர் அமத் சாய்பும், திரு. O. K. கந்தசாமி செட்டியாரும் வந்திருந்தினர். இவ்விருவர்களுடைய வரவையும் சரிப்படுத்தி காரியம் சுதாரிக்க நாயுடுவால் அனுப்பப்பட்ட ஸ்ரீமான் பழனிச்சாமி பண்டாரமும் வந்திருந்தார்.

கூட்டம்சுமார் 6-30 மணிக்குகூடிற்று. வந்திருந்தசுமார்1500பேர்களில்பார்ப்பனர்களும் முஸ்லீம்களும கூட்டத்திற்கு அதிகமாக வந்திருந்தனர் ஈரோடு, காங்கிரஸ் கமிட்டி காரியதரிசி திருவாளர் இ. பி. வெங்கட்டாசலம் அவர்கள் திரு. S. A. கணேச முதலியாரை கூட்டத்திற்கு தலைமை வகிக்கும்படி பிரரேபித்தார். திரு. நரசிம்மாச்சாரியார் பி. ஏ., பி. எல்., ஆதரித்தார். திரு. கணேச முதலியார் தலைமை வகித்தார். ஜனாப் பஷீர் ஆமத் அவர்களுக்கு, முன் தகவல் இல்லாமல் பார்ப்பனர்கள் ஏற்பாட்டின்படி அவர்கள் செலவிலேயே வந்தவர்களாலே ஒரு உபசாரப்பத்திரம் வாசித்துக்கொடுக்கப்பட்டது. ஜனாப் அவர்கள் உபசாரப்பத்திரத்துக்கு பதிலளித்துவிட்டு தமது பிரசங்கத்தை ஆரம்பித்து, நாம் சுயராஜ்யமடையவேண்டியது அவசியமென்றும், நாம்சுராஜ்ஜியமடைவதற்குத்தான் காங்கிரஸ் இயக்கம ஏற்பட்டதென்றும், காங்கிரஸ் கொள்கையைத்தான் ஆதரிக்க வேண்டுமென்றும், ஜஸ்டிஸ் கட்சி என்பது தேசத் துரோகிகளால் உண்டாக்கப்பட்டதென்றும் அக்கட்சி தேசத் துரோகக்கட்சியென்றும், சைமன் கமிஷனை பகிஷ்கரிக்கவேண்டுமென்றும் பேசினார். இவரது பிரசங்கத்தில் இடையிடையே சுயராஜ்யம் என்றால் என்ன என்பதுபோன்ற ஆணித்தரமான கேள்விகள் கூட்டத்தினரால் கேட்கப்பட்டன. கேள்விகளுக்கு பதில் சொல்லாமல் தப்பித்துப்போக ஜனாப் பஷீர் முகமது அவர்கள் பல வழியிலும் முயற்சிசெய்து பார்த்தார். கூட்டத்தினர் பதில் சொல்லாமல் போகக்கூடாதென்று ஏகமாய் தடுத்து பரிகாசம்செய்தார்கள். அக்கிராசனர், "பிரசங்கியார் பதில் சொல்லிவிட்டுத்தான் போவார்" என்று சொல்லி கூட்டத்தில் எழுந்த கூச்சலை நிதானிக்கச்செய்தார்.

கடைசியாக ஸ்ரீமான் ஒ. கந்தசாமி செட்டியார் பேசி முடிந்தபின் கேள்விகளுக்கு பதில் சொல்லுவதாக ஜனாப் ஒத்துக்கொண்டார். அதன் பின் திரு. ஒ. கந்தசாமி செட்டியார் பேச எழுந்தார். ஒத்தைக்காசு செட்டியாருக்கு ஜே! என்ற சப்தம் கிளம்பியது. செட்டியாருக்கு புத்தி பேதலித்து விட்டது. வந்த வேலையும் ஞாபகமில்லை. கூட்டத்திலிருக்கும் உணர்ச்சியைப்பார்த்தார். தாம் பேசவேண்டுமென்று நினைத்ததைப் பேசவில்லை. ஏதோ பேசித்தீரவேண்டுமே என்று நினைத்தார். அவருக்கு ஒன்றும் புத்திக்கு எட்டவில்லை. கடைசியாக தமது இங்கிலாந்து யாத்திரையில் கண்ட நாகரீகங்களைப்பற்றிப் பேசி விட்டுத் தமது பிரசங்கத்தில் தாமே என்ன பேசினோமென்பது தெரியாமல் திகைத்து ஒரு

இதன் தொடர்ச்சி 12-ம் பக்கம் பார்க்க



குடி அரசு

ஈரோடு விபவ-௵ ஆடி மீ 7-உ

# தென்னிந்திய ரயில்வே தொழிலாளரின் வேலை நிறுத்தம்.

நீண்டநாளாக ரயில்வே தொழிலாளர்கள் தங்களுடைய குறைகளைப்பற்றி எவ்வளவோ எடுத்துச்சொல்லியும் அதிகாரிகள் கொஞ்சமும் இணங்காமலிருந்ததினாலும் பதினாயிரக்கணக்கான பேர்கள் திடீரென்று வேலையை விட்டுப் போகவேண்டியிருந்ததினாலும் வேறுகதியில்லாமல் தொழிலாளர்கள் சத்தியாக்கிரமும் வேலை நிறுத்தமும் செய்தே தீரவேண்டியதாய் விட்டது.

வேலைநிறுத்த விஷயத்தில் தொழிலாளர்களுக்கு எவ்வித உதவியும் இல்லாமல், அதாவது தொழிலாளர் தலைவர் என்று சொல்லிக்கொள்ளுகிறவர்களும் தேசீயத் தலைவர் என்று சொல்லிக்கொள்ளுகிறவர்களும் தேசீயப்பத்திரிகைகள் என்பவைகளும் பல ரயில்வேக் கம்பெனிக்காரர்களிடமிருந்து தங்கள் சுற்றத்தார்களுக்கு உத்தியோகங்கள் பெற்றிருக்கும் முறையிலும், பெற எதிர்பார்த்திருக்கும் முறையிலும், மற்றும் தங்கள் பத்திரிக்கைகளுக்கு விளம்பரங்கள் பெற்றிருக்கும் முறையிலும் ரயில்வேக்காரர்களுக்கு அடிமைகளாகி வேலை நிறுத்தத்தை தக்கபடி ஆதரிக்காமல் வேலைநிறுத்தம் செய்யவேண்டியதில்லையென்றும், வேலைநிறுத்தம் அனாவசியம் என்றும், ஏஜண்டு கூடியவரை நெருங்கிவந்திருக்கிறார் என்றும் இன்னும் மற்ற பொதுஜனங்களுக்கும் தொழிலாளருக்கும் அதிகாரிகளின் கொடுமையையும் வேலைநிறுத்தத்தின் அவசியத்தையும சரியானபடி எடுத்துக்காட்டாமல் எவ்வளவோ மறைத்துக்கொண்டு வந்திருந்தும், சென்ற 19-ஆம் தேதி தொழிலாளர்களால் தொடங்கப்பட்ட வேலை நிறுத்தமானது ஒருவாறு வெற்றிக்குறியுடனேயே மிக அமைதியாகவும் சமாதானமாகவும் நடந்து வருவதாகவே சமாச்சாரங்கள் எட்டி இருக்கின்றன.

தொழிலாளர்களின் கடைசி வேண்டுகோள்களாவன:—

1. கதவடைப்பு செய்தகாலத்திற்கு கூலி கொடுக்கவேண்டும்.

2 ராஜிநாமாச்செய்தவர்களைத்தவிரமற்றவர்களை வேலைக்குவைத்துக்கொள்ளவேண்டும்.

3. கீழ்த்தர வேலையாட்களுக்கு சம்பளம் கூட்டவேண்டும்.

4. ரன்னிங்ஸ்டாவ் என்னும் ரயில்போக்குவரத்தில் சேர்ந்த ஆட்களின் குறைகளை நீக்கவேண்டும்.

இவைகள் ரயில்வே அதிகாரிகளால் சரியானபடி கவனிக்கப்படவில்லை. இதனால் வேலை நிறுத்தம்செய்ய நிர்ப்பந்தம் ஏற்பட்டது.

### வேலைநிறுத்த விபரம்.

சென்னை 20-உ காலையில் சென்னைக்கும் எழும்பூருக்கும் வரவேண்டிய வண்டிகள் வரவில்லை.

தாம்பிரம் என்னும் இடத்தில் 30 தொழிலாளர்கள் லயினில் படுத்துக்கொண்டு சத்யாக்கிரகம் செய்ததாக அரஸ்ட்செய்யப்பட்டார்கள்.

சேத்துப்பட்டுக்கும் எழும்பூருக்கும் ஓடும் ஆபீஷியல் டிரெயின் ஓடிக்கொண்டிருக்கையில் நெருப்பை அணைத்து விட்டபடியால் வழியில் நின்றுவிட நேர்ந்தது.

எழும்பூர் ஸ்டேஷன் கீழ்த்தர சிப்பந்திகள் வேலைக்குப்போகவில்லை.

19-உ இரவு எழும்பூரைவிட்டுப் புறப்பட்ட போட்மெயில் முதலியவைகள் விழுப்புரமிருந்து சரியானபடி ஓடாமல் தகராறுபட்டுக்கொண்டேயிருந்தது.

உயர்தர அதிகாரிகளே வண்டிப்போக்குவரத்துக்கு வேலைசெய்துகொண்டிருக்கிறார்கள்.

விழுப்புரம் கோட்டி, போர்ட்டர், எல்லோரும் வேலைநிறுத்தம் செய்துவிட்டார்கள்.

திருச்சிக்கும் ஈரோட்டுக்கு செல்லவேண்டியவண்டிகள் வழியிலேயே நிறுத்தப்பட்டுவிட்டன. ஈரோட்டுக்கு வரவேண்டிய வண்டிகள் வரவில்லை.

திருநெல்வேலியில் நடுராத்திரியில் வேலை நிறுத்தம் ஆரம்பிக்கப்பட்டது. அங்கிருந்து செல்லவேண்டிய வண்டிகளும் தெற்கிலும் வடக்கிலுமிருந்து வரவேண்டிய வண்டிகளும் போக்குவரத்து நடைபெறவில்லை.

மதுரையில் மணியடிக்கும் சிப்பந்திகள், நிலக்கரிவாரும் ஆட்கள் உட்பட பலர் வேலைநிறுத்தம் செய்துவிட்டார்கள். மதுரையிலிருந்து புறப்படவேண்டிய ஷட்டில் வண்டிகளில் ஒன்றுமேபோகவில்லை.

ஈரோடு ஸ்டேஷனில் நடுராத்திரியில் வேலைநிறுத்தம் செய்யப்பட்டது.

போத்தனூரிலும் நடுராத்திரியில் வேலை நிறுத்தம் செய்யப்பட்டது.

ஆங்கிலோஇந்தியர், ஸ்டேஷன் மாஸ்டர் முதலியர்களின பிரயத்தனங்களினாலே சிற்சில மெயில்வண்டிகள்மாத்திரம் ஆகாரங்கு காலந்தவறிப் போய்க்கொண்டிருப்பதாகத் தெரிகிறது. வேலை நிறுத்தத்தை வெற்றியடையாமற் செய்யப் பல சூழ்ச்சிகள் நடப்பதாகவும் தெரியவருகிறது.

### ஏஜண்டின் தந்தி.

தொழிலாளர்களுக்குள்ள குறைகளை லக்ஷியம் செய்யாமல் தொழிலாளர்களுக்கு உதவி செய்யும் கீழ்த்தர சிப்பந்திகளுடையவும் வண்டியில்போகும் சிப்பந்திகளுடையவும் குறைகளைமாத்திரம் கவனிப்பதாக ஏஜண்டு சம்மதித்திருப்பதாய் வெளியிட்டிருக்கிறார் எனத்தெரிகிறது. தொழிலாளர்கள் இதை ஒரு பிரித்தாளும சூழ்ச்சியாகவேகருதியிருக்கினறனர். வேலை நிறுத்தம் வளர்ந்துகொண்டும் வலுத்துக்கொண்டும் போவதாகவே தெரிகிறது. தொழிலாளர்கள் வெற்றி பெற்று தொழிலாளர்களின் குறைகள் நீங்கி சுகப்படவேண்டுமென்று மனப்பூர்வமாய் ஆசைப்படுகிறோம். பொதுமக்களை வேலை நிறுத்தத்திற்கு எல்லாவுதவியும் செய்யவேண்டுமாய்க்கேட்டுக்கொள்ளுகிறோம். தொழிலாளர்களையும், பொறுமையோடும் அமைதியாகவும் பலாத்காரமற்ற தன்மையோடும உறுதியோடும் எவ்விதத் தியாகத்துக்கும் தயாராகயிருந்து முழுவெற்றி யடையவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறோம்.

# வேதாளம் மறுபடியும் முருங்கமரம் ஏறிக்கொண்டது.

திரு. வி. கலியாணசுந்தர முதலியார் அருப்புக்கோட்டை வாலிபர்கள் மகாநாட்டில் வாலிபர்களுக்கு புராணப் பிரசங்கம் செய்கையில், முன் திரு. நாயக்கருடன் "போர்" நடத்துகையில் முருகனைப்பற்றியும் புராணங்களைப்பற்றியும் என்ன எழுதினாரோ அவற்றிற்கு நேர்விரோதமாய் புராணங்களை ஆதரித்து பிரசங்கம் செய்திருக்கின்றார். மற்றும் பெரிய புராணத்தைப்பற்றி அவர் எழுதிய காலத்தில் "கவியழகுக்கும் இயற்கை வருணனைக்கும் கூடவா புராணங்களைப்படிக்கக்கூடாது" என்றும் "பெரிய புராணத்தின் உள்ளுறையை இதுவரை கிடைத்துள்ள கல்வெட்டுகள், அகச்சான்றுகள், நமது நாட்டைப்பற்றி இங்கு வந்துள்ளவர்கள் எழுதி வைத்த குறிப்புகள், சில புறச்சான்றுகள், சரித்திரப் பொருள்கள், காலநிலை முதலியவற்றிற்கு அரண்செய்யும் அளவுக்குக் கொள்ளலாம்" என்றும் எழுதியிருந்தார். இப்படி எழுதினவர் அடுத்தவாரத்திலேயே புராணப்பிரசாரத்துக்காக ஆரம்பித்து மறுபடியும் பழைய உணர்வு கொண்டு அதே புராணத்தை மூட நம்பிக்கைக்காக மக்களிடை பிரசாரம் செய்யத் திருநெல்வேலியைக் கண்டு பிடித்து அங்குள்ள மக்களிடம் தமது பழையமூட்டையை அவிழ்க்க ஆரம்பித்து விட்டார். அக்கூட்டத்தில் பேசும் போது அதே பெரிய புராணத்திலுள்ள ஒருகதையை எடுத்துக்கொண்டு, அவர் முன் எழுதினபடி கவியழகுக்கோ, இயற்கை வருணனைக்கோ, மற்றும் கல்வெட்டு, நாட்டைப்பற்றிய குறிப்புகள் முதலியவற்றிற்கு "அரண் செய்யும் அளவு"க்கோ எடுத்துக் கொள்ளாமல், மூட நம்பிக்கைக்கும் மற்றமதக்காரர்களை சமய வெறியர்கள் என்று பிரசம

## கடைசியாக வந்த தந்திச்செய்தி.

நீடாமங்கலத்தில் திரு. காளியப்பன் அவர்களையும் இன்னும் சில தொழிலாள சகோதரர்களையும் 20-தேதி காலையில் அரஸ்ட் செய்து மாலையில் விட்டுவிட்டதாக நேற்று மாலை தஞ்சையிலிருந்து கடைசியாக வந்த தந்தியிலிருந்து தெரியவருகின்றது.

பநிந்தனை ஒன்றையே குறிக்கொண்டுபோவிக்கதைகள் புனைகிற, தத்துவத்துக்கும்போலிப்புராணங்களால் "கடவுள் நெறி"க்கும் ஒழுக்கங்களுக்கும் அன்புக்கும், கேடுவிளையும்படியான தத்துவத்திற்கும் உபயோகப்படுத்திக்கொண்டிருக்கிறார். உதாரணமாக டி சொற்பொழிவில்,

"சமண மதம் சிறந்தது. ஆனால் சமண மதமும் சீர் கெட்டு நாட்டில் கொடுமைகள் அதிகரித்து கடவுள் நம்பிக்கையொழிந்து நாடு அதிகம் சீர் கெட்டிருந்த சமயத்தில் நாட்டு மக்கள் செய்து வந்த தவப்பயனால் திருஞான சம்பந்தர் சீர்காழியில் அவதரித்தார்" என்றும் பேசிவிட்டு "சமணர்கள் கழுவேற்றப்பட்டதாக சொல்லுவது கட்டுக்கதை" யென்றும் "சமணர்களைக் கழுவேற்றியவரலாற்றுக்குப் போதிய அகச்சான்றுவது புறச்சான்றுவது இல்லை" என்றும் சொன்னதோடு மற்றும் ஏதேதோ கொட்டியிருக்கிறார்.

திரு. முதலியார் சமண மதம் சிறந்தது என்று ஒரு தரம் சொல்லிவிட்டு மறுபடியும் கீழே சமண மதத்தால் நாட்டில் கொடுமைகள் அதிகரித்தது என்றும் சொல்லி அதை ஒழிக்கவே திருஞான சம்பந்தர் அவதாரம் எடுத்தார் என்றும் சொல்லுகிறார்.

இது பிற சமயக்காரரை நிந்தனை செய்கதாகாதா? என்று கேட்கின்றோம். இவர்களை ஒழிக்க கடவுள் ஒரு அவதாரம் அனுப்பியிருப்பதாகச்சொல்வதானால் அது கடவுளுக்கும் கடவுள் நெறிக்கும் ஒழுக்கங்களுக்கும் கேடு சூழ்ந்ததாகாதா? என்று கேட்கின்றோம்.

சமண மதம் என்பது எந்த விதத்தில் சிறந்தது என்றும், அது சீர்கெட்டதாகச் சொல்லப்படுவதற்கு என்ன ஆதாரம் என்றும், திரு. முதலியாரால் சொல்ல முடியுமா? சமணர்கள் செய்ததாகச் சொல்லப்படும் கொடுமைகள் என்ன என்பதை திரு. முதலியாராவது மற்றும் எந்த சமயாச்சாரியார், அவதாரம், என்பவர்களாவது எங்காவது சொல்லியிருக்கிறார்களா? திரு. முதலியாரால் "இயற்கை இறை உறையுள்" என்று போற்றப்படும் தேவாரம், திருவாசகம் என்கின்ற புராணங்களிலாவது ஏதாவது குறிக்கப்பட்டிருக்கின்றதா? அப்படிக்கொன்றுமில்லாமல் சமண மதத்தைப்பற்றி திரு. முதலியார் சமணர்களுக்கு பயந்துகொண்டு பூஜித்தும் சைவர்களுக்கு பயந்து கொண்டு தூஷித்துமிருந்தாலும் திரு. முதலியாரால் "அவதாரம்" "பெரியார்" என்று சொல்லப்படுகிற ஆசாமிகள் எல்லாம் சமண மதத்தையும் சமணர்களையும் மிகப் புன்மொழிகளால் வைதிருக்கின்றார்கள் என்பதை முதலியார் மறுக்கிறாரா என்று கேட்கின்றோம்.

நிற்க, சமணர்கள் கழுவேற்றப்பட்டது பொய் என்றும் அதற்கு "அகச்சான்று, புறச்சான்று" இல்லையென்றும் சொல்லுகிறார்.

திரு. முதலியாரால் 'இயற்கை அன்பு' என்று கூறப்படும் பெரிய புராணத்திலேயே சமணர்கள் கழுவேற்றப்பட்டது காணப்படுகிறது. திரு. முதலியாரவர்கள் பெரிய புராணத்தை அதிலுள்ள அகச்சான்றுகளைக்கொண்டு கொள்ளலாமென்று ஒப்புக்கொள்வதோடு, அப்பெரிய புராணத்திலுள்ள கதைகளில் ஒன்றாகிய திருஞானசம்பந்தர் அவதாரத்தையும் அவரது அற்புதத்தையும் ஒப்புக்கொண்டிருப்பதோடு, அவரைப்போல் இன்னொருவர் வருவதாகவும் சொல்லுகிறார்.

இது நிற்க, ஒவ்வொருவருஷமும் பல கோவில்களில் சமணர்களைக் கழுவேற்றுகிற உற்சவமும், கழுவைநட்டு அதில் சைவர்கள் சமணர்களைக் 'கழுவிலேற்றி அழுத்துவதும் நாடகம்போல நடித்துக் காட்டப்படுகிறது. இதை இன்றுவரையிலும் தப்பு என்றாவது, அம்மாதிரி நடத்தக் கூடாதென்றாவது திரு முதலியார் சொன்னவருமல்ல; ஏதாவது முயற்சி எடுத்துக்கொண்டவருமல்ல. எனவே திரு. முதலியார் எவ்விதப் பொறுப்பையும் உணராமலும் ஒரு சிறிதும் தமது பகுத்தறிவை உபயோகப்படுத்தாமலும், நினைத்தது நினைத்தபடியெல்லாம் உளறிக்கொட்டுவதும், சமயத்துக்குத்தகுந்தபடியெல்லாம் மாற்றிப்பேசுவதும், இவற்றையாராவது எடுத்துக்காட்டினால் அவர்கள் மீது பழி சுமத்துவதும், அவர்களைப்பற்றி விஷமப் பிரசாரங்கள் செய்வதும் தமது சமயத் தொண்டாகவும் ஆஸ்திகத் தன்மையாகவும் கொண்டிருக்கிறார் என்பது பொதுமக்களுக்கு விளங்கவில்லையா? என்று கேட்கின்றோம்,

மற்றும் அவர் அறு சமயம் பேசியதாகக் காண்பவைகளை புராணத்தைப்பற்றி எழுதவற்றுக்கொண்டிருக்கிற அறிஞருக்கு விட்டுவிடுகிறோம்.

நிற்க, திரு. முதலியார் இவ்விதம புராணப் பிரசாரத்திற்காகவும், அதைக்கண்டிப்பவர்களை எதிர்ப்பதற்காகவும் லஞ்சம் கொடுத்து பல நண்பர்களிடம் நட்புக்கொண்டிருக்கிறார். அதில் ஒருவராய திரு. வரதராஜுலுவுக்கு கொடுத்திருக்கும் லஞ்சம் என்னவென்பதை இவ்வார "நவசக்தி" தலையங்கத்திலிருந்து உணர்ந்திருக்கலாம். என்னவெனில் திரு. முதலியார் காங்கிரசைப் பற்றி இதற்கு முன்னால் வெளிப்படுத்தியுள்ள அபிப்பிராயம் யாவரும் அறிந்த தொன்றே. அதாவது, வகுப்புப் பிணக்குகளும் உயர்வு தாழ்வுத் தன்மைகளும் உள்ள நாட்டில் அரசியல் இயக்கம் என்று ஒன்று ஏற்படுவது அந் நாட்டிற்குக் கேட்டை விளைவிப்பதாகும் என்பதாக எழுதி யிருப்பதோடு தாமும் அக் காங்கிரஸ் என்ற அரசியல் குழுவிலிருப்பது குற்றமென்றும் சொன்னதுடன் காங்கிரஸ் நிர்வாக சபையிலிருந்து ராஜிநாமாக்கொடுத்து விலகினதல்லாமல் காங்கிரஸ் குழுவில் ஒரு சாதாரண அங்கத்தினராயிருப்பதிலிருந்தும் விலகிக் கொண்டதாகவும சொன்னவர் இப்பொழுது காங்கிரசை நிலை நாட்ட மிகக் கவலை கொண்டிருப்பதாக எழுதியிருக்கிறார். இதற்காக திரு. வ. உ. சிதம்பரம் பிள்ளையவர்கள் புராணக் குப்பைகளையும் காங்கிரஸ் புரட்டையும் ஆதரிக்க முன்வந்திருப்பதாக எழுதிக்கொண்டு அவரைப் பாராட்டி இருக்கிறார். இது எம்மட்டு நிஜமாயிருந்தாலும அதையும் பார்ப்போம்.

நிற்க, சைமன் கமிஷனைப்பற்றி திரு. முதலியார் அதை பகிஷ்கரிக்கக்கூடாதென்பதாக எழுதி வந்ததும், பகிஷ்கரிப்போர்களின் புரட்டுகளை வெளியாக்கினதும், அதை ஆதரித்தே துண்டு விளம்பரங்களும் சுவர்விளம்பரங்களும் வெளியாக நேர்ந்ததும், அவைகளைக்கண்டித்து திரு. வரதராஜுலு எழுதிவந்ததும் அதற்குமறுபடியும் திரு. முதலியார் எழுதினதும் யாவருக்கும் நினைவிருக்கலாம். இப்போது திரு. வரதராஜுலு, தமது (திரு. முதலியாரது) புராணப்புரட்டுக்கும் சமயப்புரட்டுக்கும் உதவி செய்வதற்காகக் காணிக்கையாய் தாம் (திரு. முதலியார்) அவரது (திரு. வரதராஜுலுவின்) பகிஷ்காரப்புரட்டுக்கும் தேசீயப்புரட்டுக்கும் உதவி செய்ய ஒருப்பட்டு துணிவோடு காங்கிரசையும் பகிஷ்காரத்தையும் ஆதரித்து எழுதியிருக்கிறார். சைமன் கமிஷனை குறை கூறியும் எழுதியிருக்கிறார். இதன் மூலம் பார்ப்பனரல்லாதார் கட்சியாகிய ஜஸ்டிஸ் கட்சியை தூற்றவும் காங்கிரசைப் புகழவும் சூழ்ச்சிதேடிக் கொண்டு அத்தொண்டிலும் மறைமுகமாக இறங்கியிருக்கிறார். இவைகளெல்லாம் பூனை கண்ணை மூடிக்கொண்டு பாலைக்குடிப்பது போலக் கருதி திரு. முதலியார் மொட்டையாக எழுதிவந்தாலும பொது மக்கள் கண்ணில் இவர்கள் இனி மண்ணைப்போட முடியா தென்பதே நமது துணிவு.

பொதுமக்கள் உண்மையான க்ஷேமத்தையும் சுயமரியாதையையும் விடுதலையையும் அடையவேண்டுமானால், நல்ல அரசாட்சி என்னும்போரால் வெள்ளைக்காரர்கள் அடிக்கும் கொள்ளையையும், அதிலிருந்து சுயராஜ்யம் என்னும் பேரால் தேசத்தைக்காட்டிக் கொடுத்து பார்ப்பனர்கள் அடையும் பங்கையும், அதிலிருந்து தேசியம், ஆஸ்திகம், மதம், என்பவைகளின் பேரால் மக்களைக்காட்டிக் கொடுத்து நம்மிற்சிலர் அடையும் கூலியையும் எப்படிப்பட்டாவது வெளியாக்கி நிறுத்தினாலொழிய ஒரு கடுகளவும் நமது நாடும் மக்களும் முன்னேற முடியாது என்கிற உறுதி கொண்டதினால்தான் இவை எழுதி வர நேரிடுகின்றது.

---

## துணுக்குகள்.

கோயமுத்தூர் ராவ்பகதூர்கள் டி. ஏ. ராமலிங்கம் செட்டியாரவர்களுக்கும் சி. எஸ். ரத்னசபாபதி முதலியாரவர்களுக்கும் தேர்தல்களின் பலனாய் மூன்று நான்கு வருஷங்களாய் ஏற்பட்டிருந்த மனஸ்தாபம் ராவ் பகதூர் பழயகோட்டை பட்டக்காரரவர்களின் முயற்சியால் தீர்க்கப்பட்டு இருவரும் ராஜியானார்கள். இந்த ராஜி வெற்றி பெற்று பயனளிக்க வேண்டுமாய் ஆசைப்படுகிறோம்.

* *

திருச்செங்கோடு காந்தி ஆஸ்ரமத்தில் சர். பி. சி. ரே. அவர்களால் ஒரு இலவச ஆஸ்பத்திரி திறக்கப்பட்டது.

திரு. எஸ். ராமநாதன் கதர் போர்டிலிருந்து ராஜினாமா கொடுத்துவிலகிவிட்டதின் பயனாய் அவருக்கு ஒரு விருந்து நடத்தப்பட்டது. அவ்விருந்தில் திரு. ராஜகோபாலாச்சாரியார் திரு. ராமநாதனை விபீஷணாழ்வாருக்கு சமமாய்ச் சொல்லி, அவர்கதர் ஸ்தாபனத்தில் இல்லாவிட்டாலும் எப்போதும் கதர் தொண்டே செய்து கொண்டிருப்பார்

என்று சொன்னாராம். அவர்ஸ்தானத்துக்குப் புதிதாய் வந்த திரு. எஸ். எஸ். வரதாச்சாரியார் திரு. ராமனாதனை ஸ்ரீராமபிரானுக்குச் சமமாகச் சொல்லி, திரு. ராமனாதன் கதர் ஸ்தாபனத்தில் இல்லாவிட்டாலும், பரதாழ்வார் ராமனுடைய செருப்பை வைத்து அரசாட்சி செய்ததுபோல தாமும் திரு. ராமநாதன் மறுபடி திரும்பி வரும்வரை அவருடைய அடியைவைத்தே கதர் ஆட்சி செய்துவருவதாகவே சொன்னாராம். மற்றும் பல பார்ப்பனர்கள் பாதாளத்துக்கும் முகட்டுக்குமாக திரு ராமநாதனை புகழ்ந்து கடவுளாக்கிவிட்டனராம். இவ்வளவும் திரு. ராமநாதன் கதர் லாக்காவை விட்டுவிட்டு "ரிவோல்ட்" பத்திரிகையில் பங்கெடுத்துக் கொள்ளுகிறேன் என்று சொன்னதின் பயனாய் ஏற்பட்டது என்று சொல்வதில் பொதுஜனங்களுக்கு அதிசயம் தோன்றாது என்று நினைக்கிறோம்.

"ரிவோல்ட்"டை ஆரம்பித்து எழுத ஆரம்பித்துவிட்டால் அப்புறம் இதே பார்ப்பனர்கள் அவருக்கு என்னென்ன பட்டங்கள் வழங்குவரோ தெரியவில்லை,

* * *

### ஸ்தலஸ்தாபனத் தலைவர்கள் மரணம்

இவ்வாரத்தில் திருப்பூர் சேர்மன் துரைசாமிக் கவுண்டரவர்களும், நாமக்கல் தாலூக்கா போர்டு பிரசிடெண்டு சிதம்பர செட்டியாரவர்களும், திருச்செங்கோடு தாலூகா போர்டு பிரசிடெண்டு கைலாச கவுண்டரவர்களும், மன்னார்குடி தாலூகா போர்டு பிரசிடெண்டு கோபால்சாமி முதலியார் அவர்களும் திடீர் மரணமடைந்திருக்கிறார்கள். இது "ஸ்தல ஸ்தாபன தேவதை"யின் திருவிளையாட்டு"போலும்!

---

## சுயமரியாதைப் பிரசாரங்கள்.

சுயமரியாதைப் பிரசாரங்கள் பல இடங்களில் நடந்து வருவதாகச் செய்திகள் எட்டுகின்றன. அவற்றில் பேசுகிறவர்கள் பல மாதிரி பேசுவதாகவும் அதைக்கேட்கிறவர்கள் பல விதமாய் அர்த்தம் செய்து கொள்ளுவதாயும் சிற்சில சமயங்களில் விபரீத அர்த்தம் ஏற்பட்டு விடுவதாகவும் தெரிய வருகிறது. அவ்விபரீதத்தை நிறுத்துவதற்காக குறைந்தது பதினைந்து நண்பர்களை தயார் செய்யும் பொருட்டு ஈரோட்டில் ரயில்வே ஸ்டேஷனுக்கடுத்த திரு. வெங்கட்ட நாயக்கர் தோட்டத்திலுள்ள ஒரு கொட்டகையில் "சுயமரியாதைப் பிரசார போதனைக் கூடம்" என்பதாக ஒரு ஸ்தாபனம் ஏற்படுத்துவதாக ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. அதில் ஒரு மாத காலத்திற்கு, தினமும் இரண்டு காலம் ஒவ்வொரு மணி நேரம் உபந்யாசங்களின் மூலமும், மற்றும் சம்பாஷணை, 'குடி அரசில்' கண்ட வியாசங்கள் முதலியவை மூலமாகவும் கற்பித்துக் கொடுக்க முடிவு செய்திருக்கிறோம். காலாவதி பொன்னுக்கு பதினைந்து பேர்களை சேர்த்துக் கொள்ளக்கூடும். அவர்களில் சௌகர்யமில்லாதவர்களுக்கு இலவச சாப்பாடு போடப்படும். இஷ்டமுள்ளவர்கள் தெரிவித்துக்கொண்டால் ஏற்றுக்கொண்ட விஷயத்துக்கும் வரவேண்டிய விபரத்துக்கும் மற்ற நிபந்தனைகள் விபரத்துக்கும் தெரிவிக்கப்படும்.

ஈ. வெ. ராமசாமி.

---

(9-ம் பக்கம் தொடர்ச்சி)

வாறு பிரசங்கத்தை முடித்தார். அதன்பின் 'தாஜுல் இஸ்லாம்' பத்திராதிபர் அவர்கள் பலத்த கரகோஷத்தினிடையே எழுந்து ஜனாப் பஷீர் ஆமத் அவர்கள் 'முஸ்லீம்கள் இன்னும் மயக்கத்திலிருக்கின்றனர்' என்று சொன்னதைக் கண்டித்தும், வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத்தை பஷீர் ஆமத் கண்டித்துப் பேசியதைக்கண்டித்தும் சிறிது நேரம் பேசினார். முஸ்லீம்கள் எல்லோரும் எழுந்து பஷீர் அவர்களை "எலெக்ஷன்போது தெரிந்த பள்ளிவாசல் இன்றைக்குத் தெரியவில்லையா, பார்ப்பனர் வீடு தான் உமக்குப் பள்ளிவாசலா" என்று அதட்டிக்கேட்க ஆரம்பித்தனர். இதற்குள் ஒரு முஸ்லீமை ஒரு பார்ப்பன வாத்தியார் சமாதானப்படுத்த முயன்றார். அதற்கு அவர் நீர் போட்டிருக்கும் கண்ணாடி எகிறிப்போகும்என்று திரும்பினார். பார்ப்பனர் பதுங்கி விட்டார்.

பற்பல கேள்விகள் கேட்கப்பட்டன. பல கேள்விகட்கு பதிலே சொல்லவில்லை சிலவற்றிற்கு சொன்னபதிலும் ஜனங்களுக்கு திருப்தியாகவில்லை. ஜஸ்டிஸ் கட்சியார் மந்திரிமீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வந்தபோது காங்கிரஸ் தீர்மானத்தின்படி ஏன் ஓட்டுச் செய்யவில்லை யென்ற கேள்விக்கு ஜனாப் அவர்கள் ஒரு பதிலும் சொல்ல முடியவில்லை. கேள்விகளுக்கு இவர் சரியான பதில் சொல்லாமற்போகவே ஜனங்களுக்கு ஆத்திரமுண்டாகி ஜனாப் அவர்களுக்கு புத்திவரும்படி எவ்வளவு கேள்வி கேட்கவேண்டுமோ அவ்வளவு கேள்விகளையும் முஸ்லீம்களே கேட்டுத்தங்கள் ஆத்திரத்தை அடக்கிக் கொண்டார்கள். ஜனாப் அவர்கள் ரெயிலுக்கு நேரமாயிற்றென்று கூட்டத்தைக்கலைக்க அக்கிராசனரைக் கெஞ்சினார். அக்கிராசனர் இடங்கொடுக்காமல் எழுந்து முடிவுரையாக பஷீர் ஆமத் அவர்கள் பேசிய விஷயங்களைக் கண்டித்துப் பேசியதுடன், ஜஸ்டிஸ் கட்சி தேசத்துரோகக் கட்சியல்லவென்றும், காங்கிரஸ் கட்சி தேசத் துரோகம் செய்ததை வரிசையாய் எடுத்துக் காட்டி ஜஸ்டிஸ் கட்சி நியாயமாக தனது விகிதாச்சாரத்திற்கு பாடு பட்டு வருகிறதென்றும், காங்கிரஸ் கட்சி வெறும் உத்தியோகம் சம்பாதிக்குங் கட்சியென்றும், ஜனாப் அவர்கள் முஸ்லீமாயிருந்தும் முஸ்லீம்களை இப்படித் தூஷிப்பதைவிட பூணூல் போட்டுக் கொண்டு தூஷித்தால் நலமென்றும், மைலாப்பூர் கோஷ்டியில் காங்கிரஸ் சிக்கிக்கிடக்கிறதென்பதை மகமது நபியை மனதில் நினைத்துத் தனது நெஞ்சில் கைவைத்துச் சொல்லும்படி ஜனாப்பைக் கேட்டாலே அவரும் ஒப்புக் கொள்ளுவாரென்றும், உண்மையான சுயராஜ்யம் ஜஸ்டிஸ் கட்சியார் வேண்டாமென்று சொல்லவில்லை யென்றும், வகுப்புவாரிப் பிரதிநிதித்துவமான அதாவது எல்லோருக்கும் உதவும்படியான சுயாட்சிகேட்கிறார்களென்றும், ஜனாப் அவர்களுக்கு இனியாவது நல்ல புத்தி வர வேண்டுமென்றும் பேசி முடித்ததும் ஜனாப் அவர்கள்-சைமன் கமிஷனை பகிஷ்கரிக்க வேணடுமென்றும் சைமன் கமிஷனை பகிஷ்கரிக்கும் தீர்மானம் சென்னை சட்டசபையில் வரும்போது இந்த ஜில்லா சட்ட சபை மெம்பர்கள் ஆதரிக்க வேண்டுமென்றும்-இரண்டு தீர்மானம் கொண்டு வந்தார். ஜனாப் எச், பாட்சா சாபு அவர்கள் 'சைமன் கமிஷனை இக்கூட்டம் வரவேற்கிறது' என்ற தீர்மானத்தைக் கொண்டு வந்தார், ஆக மூன்று தீர்மானங்களையும் அக்கிராசனர் ஜனங்களுக்கு வாசித்துக் காட்டி, சட்டசபை மெம்பர்கள் சட்டசபையில் பகிஷ்காரத்துக்கு ஆதரவு காட்ட வேண்டுமென்று கொண்டு வந்த தீர்மானத்தை நிராகரித்து விட்டார். முதல் தீர்மானமும் கடைசித் தீர்மானமும் ஓட்டுக்கு விடப்பட்டது. ஜனாப் பஷீர் அவர்கள் ஒருவர்தான் பகிஷ்காரத் தீர்மானத்துக்கு கை தூக்கினார் ஒ. கந்தசாமி செட்டியார் கைதூக்க வில்லை. கூட்டத்தினர் சிரித்தனர், கடைசியாக கமிஷனை ஆதரிக்கும் தீர்மானம் ஓட்டுக்கு விடப்பட்டது எல்லோராலும் பலத்த கரகோஷத்தினிடையே அத்தீர்மானம் நிறைவேறிற்று. தீர்மானம் நிறைவேறியதும்கூட்டம் 9 மணிக்கு கலைந்தது. தலைவர்கள்மோட்டாரில் புறப்பட்டார்கள். கூட்டத்தினர் மோட்டாரைச்சூழ்ந்து வெட்கம்! வெட்கம்! வெட்கம்! என்று ஆரவாரித்தனர். தலைதப்பியது தம்பிரான் புண்ணியமென்று திரு ஜனாப்பும் செட்டியாரும் ரயில்வேஸ்டேஷன் போய்ச் சேர்ந்தனர். கடைசியில் சுதேசமித்திரன், தமிழ்நாடு, நவசக்தி, தென்னாடு, பத்திரிகைகளும் மனு (அ)தர்ம நீதியும் கொளுத்தப்பட்டுக் கூட்டம் கலைந்தது. ஸ்ரீமான் சாய்பும் செட்டியாரும் ரயிலுக்கு சாப்பாடு இல்லாமலே போக நேர்ந்தது. இருவரும் ரயிலுக்குப் போகும்வரை வெட்கம் வெட்கம்என்னும் சப்தம்கூடவே சென்றது.

ஒரு நிருபர்.

---

### ஈரோடு நேஷனல் லைவ் ஸ்டாக் ரிஜிஸ்ட்ரேஷன் பாங்கியின் பரிதாப நிலை.

இந்த பாங்கியின் இண்டிபெண்டெண்ட் செக்ரிடெரி ஸ்ரீமான் சந்தனம் பிள்ளையவர்கள் சூப்ரவைசர் சப் ஏஜண்ட்டு முதலியவர்களிடம் அளவுக்கு மிஞ்சி பணங்களை வாங்கிக் கொண்டு அதற்குச் சரியான ரசீது கொடுக்காமல் நேற்று வரை சாக்குப்போக்குச்சொல்லிவந்ததால் அவர் மீது சந்தேகப்பட்டு சூப்ரவைசர்களும் சப்ஏஜண்டுகளும், பங்குக்காரர்களும், அர்பன்பாங்கியில் இருந்த பணத்தை ஷெ சேக்ரிடெரி வாங்க முடியாமல் வேண்டிய ஏற்பாடுசெய்து தடுத்துவிட்டார்கள். போலீசிலும் சொல்லியிருக்கிறார்கள். கிரிமினல் நடவடிக்கைக்கு வேண்டிய ஏற்பாடு செய்துக் கொண்டிருக்கிறார்கள். சகோதரர்கள் யாராவது பணம்கொடுத்திருந்தால் அல்லது கொடுக்க இருந்தால் இதுசமயம் ஜாக்கிரதையாய் யிருக்கக் கேட்டுக் கொள்ளுகிறோம்.

பணங் கொடுத்து ஏமாந்தவர்கள்.

(8-ம் பக்கத் தொடர்ச்சி.)

னுடைய படத்தைத் திறந்து வைக்கிறேன் எனகரகோஷத்துடனும் ஜே சப்தத்துடனும் வைக்கம் வீரரின் திருவுருவப்படத்தைத் திறந்து மாலை சூட்டினார். சில நிமிஷங்கள் வரை ஆரவாரங்களும் ஜே சப்தமும் ஒலித்துக்கொண்டிருந்தன.

திருநெல்வேலி திரு. கே. சுப்பிரமணியம் அவர்கள் 'சுயமரியாதை' என்னும் பொருள் பற்றியும் இந்து மதத்தின் ஆபாசங்களைப்பற்றியும் 1-மணி நேரம் பேசினார்கள்.

பின்னர் ஓமலூர் திரு. கதிர் செட்டியாரவர்கள் 'சுயமரியாதையின் அவசியம்' என்பதைப்பற்றி சிறிது நேரம் பேசினார்கள்.

அதன் பின்னர் நமது "குடி அரசு"ப் பத்திரிகையில் அடிக்கடி அறிவூட்டுபவர்களும் இச் சுயமரியாதைச் சங்கத்தை இவ்விடம் ஸ்தாபிக்க வேண்டிய முயற்சி எடுத்துக் கொண்டவருமாகிய ஸ்ரீலஸ்ரீ ஸ்ரீதர சுவாமியார் அவர்களை வந்திருந்த பிரபலஸ்தர்களும், அக்ராசனாதிபதியும் அவசியம் பேச வேண்டுமென்று கேட்டுக்கொண்டதற்கிணங்க ஸ்வாமியார் பெருத்த கரகோஷத்தினிடையே எழுந்து, வெகுகாலமாய் பிராமணர்களால், நம்மை ஏமாற்றுவதற்கென கைக்கொண்டுவந்தசாஸ்திரங்களிலிருந்தும், பகவத் கீதைகளிலிருந்தும் புலசுலோகங்களை எடுத்துச்சொல்லி, காலில் தைத்திருக்கும் முள்ளை அதேமுள்ளினால் எடுப்பது போல அப்பார்ப்பனர்களின் சாஸ்திரங்களிலிருந்தே அவர்களின் யோக்யதையையும் மதப்புரட்டுகளையும் எல்லோருக்கும் விளங்கும்படியாகவும் வந்திருந்தசில சாஸ்திரப்பார்ப்பனர்கள் தலை குனியும்படியாகவும் விரிவாக எடுத்துரைத்து எல்லோரையும் பரவசப்படுத்தினார்.

### தலைவர் முடிவுரை.

பின்னர் ராவ்பகதூர் செட்டியார் அவர்கள் எழுந்து பேசியதின் சாராம்சமாவது:—

சபையோர்களே இதற்குமுன்னால்பேசிய எனது நண்பர்கள் விரிவாகஎடுத்துரைத்தார்கள், எனதுநண்பர்பி. கே.ரத்தினசபாபதிகவுண்டர் அவர்கள் "நமது நாயக்கர்இந்துமதத்தையே அறவே ஒழித்துவிடவேண்டுமென்று பிரயத்னப்படுகிறார்கள்" என்று சொன்னார்கள், நான் "குடி அரசு" படித்த வரையில் அதில் இந்துமதத்தை அழிக்கவேண்டுமென்று சொல்லவில்லை என்றும் அப்படி அவ்வளவு தூரம் சொன்னால்தான் நாம் கொஞ்சமாவது திருந்துவோமென்றும் "சுயமரியாதை" என்னும் விஷயத்தைப்பற்றி எனது நண்பர் சுப்பிரமணியம் அவர்கள் எடுத்துரைத்தார்கள் எனறும், எங்களில் எப்பொழுதும் பிராமணர்களை சுப காரியத்துக்கோ வேறு புரோகிதத்துக்கோ எங்கள் ஜாதியினர் கூப்பிடுவதில்லை என்றும் ஆனால் நாம் பணம் செலவு செய்து கட்டிவைத்த கோயிலில் சென்று சுவாமி தெரிசனம் செய்தால், அந்தப் பிராமணர்களைவிட நாம் எவ்வளவோ சுசியாயிருந்தாலும், நம்மை, அவர்கள்கோயிலுக்குள்போகும் அளவு போகவிடுவதில்லை யென்றும், அத்துடன் அவர்கள் பிரசாதம் வழங்கும் போதுகேவலம் அறுதலியான மொட்டைப்பார்ப்பனத்திகளுக்குமுதலில்வழங்கிவிட்டுத்தான் பின்னால் நமக்கு வழங்குகிறார்கள் என்றும், காப்பிக்கிளப்புக்குப் போனாலும்நமக்கு வெளியில் தனியான இடத்தில் தான் வைத்துப் போடுகிறார்கள் என்றும், எங்கேயாவது அவசர ஜோலியாகப்போயிருந்து ஒரு பார்ப்பனன் வீட்டில்சாப்பிட நேரிடுமானால் நம்மை வெளியில் வைத்து சாப்பாடு போடுவதுமல்லாமல் இலையையும் எடுக்கச் செய்கிறார்கள் என்றும், 'இப்பொழுது எனக்கிருக்கிருக்கும் பதவிக்கு அப்படி நடவாவிட்டாலும் இதே எல்லப்ப செட்டியாராகிய நான் அனுபவித்திருக்கிறேன்' என்றும் இதையெல்லாம்கவனிக்கும்பொழுது இதுதான் "சுயமரியாதைக்குக்குறைவு" என்றும், இக்கொடுமைகளை யெல்லாம் ஒழித்துசுயமரியாதை அடையவேண்டும் என்பன போன்றவைகள் தான் சுயமரியாதைக் கொள்கைகள் என்றும் (கூட்டத்தில் அது தான் சுயமரியாதை என்ற கோஷம்) இதுமாதிரி சமயத்தை ரொம்பநாளாக எதிர்பார்த்தாரென்றும் அச்சமயம் இப்பொழுது தான் கிட்டியது என்றும் இவ்வூரிலுள்ள பிரபலஸ்தர்கள் இதில் ஊக்கம் காட்டுவதற்கு தாம் சந்தோஷப்படுவதாகவும், இதற்கு ஒவ்வொருவரும் முன் வந்து வேண்டும் கிளர்ச்சி செய்ய வேண்டும் என்றும் சொல்லி ஆசனத்தமர்ந்தார்.

### சங்கஸ்தாபனம்.

டி. வி. நடேச முதலியாரவர்கள் கீழ்க்கண்டவர்களை சங்க நிர்வாகிகளாக பிரேரேபிக்க எல்லோராலும்ஆமோதித்து ஏகமனதாய் நிறைவேறியது. பின்னர் டிஸ்டிரிக்ட் போர்டு மெம்பர் தேலூர் எ. நஞ்சராஜய்யா அவர்கள் எல்லோருக்கும வந்தனோபசாரம் சொல்லியதுடன் அடுத்தாற்போல் நடக்கப்போகும் நாயக்கர் அவர்கள் திருவுருப்பட ஊர்வலத்தையும் அது சமயத்தில் ராக்க நாயக்கரால் நடத்தப்படப்போகும் வாண வேடிக்கையும் வந்து கண்டு களித்துப்போகும்படி கேட்டுக்கொள்ள மகாஜனங்கள் எல்லாரும் ஆரவாரத்தினிடையே ஊர்வலத்துக்கு தயாரானார்கள்.

சங்க நிர்வாஹ அங்கத்தினர்கள்:—

அக்கிராசனர்,

மகா-ள-ள-ஸ்ரீ கே. ஆர். பி. கிருஷ்ணப்ப செட்டியார் அவர்கள் (ஜின்னிங் பாக்டெரி மானெஜிங் டைரெக்டர்)

உப அக்கிராசனர்கள்.

திரு டி. ஆர். கந்தப்ப முதலியாரவர்கள் (திருச்செங்கோடு யூனியன் சேர்மேன்,)

திரு எஸ். வ. கே. எம். அருணாசலம் செட்டியாரவர்கள்.

காரியதரிசிகள்.

திரு தோ. ரு. பெருமாள் முதலியார் அவர்கள் (நெல்லு மண்டி.)

ஸ்ரீலஸ்ரீ. ஸ்ரீதரஸ்வாமியார் அவர்கள்.

மகா-ள-ள-ஸ்ரீ ப. க. பழனியப்ப செட்டியார் அவர்கள்.

நிர்வாக மெம்பர்கள்.

புதுப்பாளையம் ஜமீன்தார் காந்தி ஆசிரமம் திருவாளர் பி.கே. ரத்தினசபாபதி கவுண்டர் அவர்கள்.

கொங்கணபுரம் ஜமீன்தார் திருவாளர் என். செங்கோட்டு வேலப்பகவுண்டர் அவர்கள்.

திருவாளர், தேலூர் நஞ்சராஜய்யா அவர்கள் (ஜில்லா போர்டு மெம்பர்),

„ „ படவீடு அத்தியண்ணா கவுண்டர் (தாலூகா போர்டு மெம்பர்)

„ „ கைலாசம்பாளையம், நடராஜ கவுண்டர் அவர்கள் (தாலூகா போர்டு மெம்பர்)

„ „ ஏமாமங்கலம் ஜமீன்தார், எல். செங்கோட்டுவேல கவுண்டர் அவர்கள்.

„ „ டி. வி. நடேச முதலியார் அவர்கள் (தாலூகா போர்டு மெம்பர்)

„ „ கொ. கி. வேலாயுத முதலியார் அவர்கள்.

„ „ காளியப்ப முதலியார் அவர்கள்.

## கிருஷ்ணபுரம் சுயமரியாதைச் சங்கஸ்தாபனம்.

நேற்று 14-7-28 தேதி பிற்பகல் இவ்விடம் மாலை 7-30 மணிக்கு கற்பூர விநாயகர் கோவில் தெரு சுடலைமாடன் கோவில் கம்பவுண்டுக்குள் ஒரு பெரிய கூட்டம் கூடிற்று. அதில் பார்ப்பனர்களைத்தவிர மற்றெல்லா ஆண்மக்களும் பெண்மக்களுமாக 5000 பேர்க்கு குறையாமல் கூடி இருந்தார்கள். அப்பொழுது திருநெல்வேலி திரு. லெக்ஷ்மண பிள்ளையவர்கள் சுயமரியாதை என்பதின் கொள்கையை பற்றி சொற்பொழிவு நிகழ்த்தினார்கள். இறுதியில் சுயமரியாதை சங்கம் என்று 21 அங்கத்தினர் களடங்கிய சங்கம் ஒன்று ஏற்படுத்தப்பட்டது. திருவாளர் கே. என். கலியாணசுந்தரம் பிள்ளையவர்கள் அக்கிராசனாதிபதியாகவும், கே. எஸ். நேல்லநாயகம் பிள்ளையவர்கள் பஞ்சாயத்துகோர்ட்டு பிரசிடெண்ட் காரியதரிசியாகவும், கே எஸ். கந்தசாமிப் பிள்ளையவர்கள், ஸ்ரீ ராமபாகவதரவர்கள், பஞ்சாயத்துக் கோர்ட்டு மெம்பர் பெரியசாமி ஆசாரியாரவர்கள், தனக்கோடி செட்டியாரவர்கள், மகாலிங்கவேளாரவர்கள், சேனையார், சிந்தாமணி முதலியாரவர்கள்: அங்கத்தினர்களாகவும் தெர்ந்தெடுக்கப்பட்டார்கள். காரியதரிசி.

## பார்ப்பனீயம் ஒழிந்த திருமணம்

சாக்கோட்டை ஸ்ரீமான் கண்ணுசாமி நாயக்கர் பெண் சௌபாக்கியவதி காயாரம்மாளுக்கும், திருத்தலை பூண்டி தோப்படி தெருவு, ஸ்ரீமான் குருவப்ப நாயக்கர் குமாரன் ஸ்ரீமான் ராமகிருஷ்ண நாயக்கருக்கும் சென்ற 8-7-28 ல் சாக்கோட்டை சுயமரியாதைச்சங்கம் அங்கத்தினர் ஸ்ரீமான் எஸ். வீரப்ப நாயக்கர் அவர்கள் கிருகத்தில் சுயமரியாதைத் திருமணம் வெகு விமரிசையாய் நடந்தேறியது. அதுசமயம் அநேக பெரியார்கள் வந்திருந்து மண மக்களை ஆசீர்வதித்தார்கள்.

கே. கணபதி நாயக்கர்.

## புரோகிதம் ஒழிந்த திதி.

திருமங்கலம் தாலூகா குன்னத்தூரிலிருக்கும் நா. நாராயணசாமி நாயுடு அவர்கள் தமது தகப்பனார் திதியை சென்ற ஆனி௴ 28-ந்தேதி புதன்கிழமையன்று யாதொரு புரோகிதமும் இல்லாது தமது தந்தையின் ஞாபகார்த்தமாக தமது பந்துக்களுக்கும் ஏழைகளுக்கும் சாப்பாடு போட்டார். ஷையார் சமீபத்தில் தமது மக்களுக்கு நடத்திய கல்யாணத்திலும் பார்ப்பன புரோகிதத்தை யறவே யொழித்து விட்டார். இவரது சுயமரியாதை போற்றத் தக்கது. திரு. கண்ணப்பரது வருகையிலிருந்து ஷை ஊரில் சுயமரியாதை யுணர்ச்சி காட்டுத் தீ போல் பரவிவருகிறது.

அருணாசலம்.

## பார்ப்பனீயம் ஒழிந்த உத்திரகிரியை.

அறந்தாங்கி தாலூகா இரையோன்பட்டி கிராமத்தில் காலஞ்சென்ற திரு. ஆர். எம். முத்தையா பிள்ளை அவர்களின் உத்தர கிரியையை தம் புதல்வர் ஆனி௴ 16௳ வெள்ளிக்கிழமையன்று பார்ப்பன புரோகிதத்தை அறவே ஒழித்து உறவினர்க்கும் ஏழைகளுக்கும் அன்னமளித்து இனிது முடித்தார்.

சுப்பையா




# ஜீவாம்ருதம்.

வைத்யரத்ன பண்டிட் கோபாலாச்சார்லு அவர்களால் சிறந்த மூலிகைகளினின்றும் கண்டு பிடிக்கப்பட்டு கால் நூற்றாண்டுகளாக உலகில் நிலவி வருவது. ஆரோக்கியம், தேஜஸ், வீரியம், பலம் முதலியவைகளைத் தன்னுள்ளடக்கிய தேவாம்ருத புட்டி என்பது மிகையா! மெலிந்த தேகிகளுக்கும், நோயாளிகளுக்கும் இது உண்மையில் ஒரு வரப்பிரசாதந்தான்.

இன்றே ஒரு புட்டிக்கு ஆர்டர் செய்து பாருங்கள்.

விலை ரூ. 3—4—0.

## ஆயுர்வேதாஸ்ரமம்.

151 கோவிந்தப்ப நாயக்கன் தெரு,

தபாற் பெட்டி 287, சென்னை.

வைக்கம் வீரர்

உயர்திருவாளர்

## ஈ. வி. ராமசாமி நாயக்கர்

திருவுருவப்படம் மார்பிள் பிரிண்டாக செய்யப்பட்டு கண்ணாடி போடும்படி 10x8 இஞ்சு உள்ளது. ஒவ்வொரு சுயமரியாதை நண்பர்கள் வீட்டில் அவசியம் இருக்க வேண்டியது. சுயமரியாதைப் பிரசாரம் பரவவே தயார் செய்யப்பட்டது. உடனே ஆர்டர் செய்யவும்.

100-காப்பிகள் ரூ 5–0–0. டசன் 1-க்கு அணா 11. இரண்டனா ஸ்டாம்பு அனுப்புவோருக்கு ஒரு காப்பி அனுப்பப்படும்.

கே. பாலய்ய செட்டியார்,

ஷாப், நாகூர்.

## கதர் விலை குறைக்கப்பட்டது.

நம்முடைய கதர் இருப்பு சரக்குகளை விலை குறைத்து விற்பனை செய்வதால் தங்களுக்கு வேண்டும் சரக்குகளுக்கு உடனே ஆர்டர் செய்யுங்கள்.

விலை :— கதர் போர்டு விலையைவிட கஜம் 1-க்கு 0—0—9 வீதம் குறைக்கப்பட்டிருக்கிறது. விலை விபர ஜாபிதாவுக்கு எழுதுங்கள்.

M. V. KARUPPANNA CHETTIAR,
Khaddar Merchant TIRUPUR. (S. India)

## மதனகைமம்.

(புதுச்சேரி பதிப்பு).

மதன விஷயங்களை விளக்கமாய் எடுத்துரைக்கும் நூற்களில் இப்புத்தகமே முதன்மை வாய்ந்தது. அதில் அநேக கொக்கோகச் சக்கரங்களும் மானிட லீலை மர்மங்களும் அடங்கியிக்கின்றன. இன்ப ரகசியங்களை தெளிவாயும், விரிவாயும் எழுதுவதில் பெயர்பெற்ற பிரஞ்சிந்தியாவே முதன்மைவாய்ந்ததென்பது யாம் கூறாமலே நண்பர்கள் அறிவார்களாகையால் இதிலுள்ள விஷயங்களை கூறாது விடுத்தனம். விலை ரூ. 1—0—0.

வஸந்த நிலையம், ரங்கப்பிள்ளை வீதி, புதுச்சேரி.

## திருப்பூர் ஸ்பெஷல் கார்டிகன் பனியன்ஸ்.

தமிழ் நாட்டு இளைஞர்களால் தயார் செய்யப்பட்டிருக்கிறது.

20 இஞ்சு முதல் 40 இஞ்சு வரை உள்ள எல்லா நினுசுகளும் கிடைக்கும்.

விலை 32 இஞ்சு 2 நூல் பூரா சைஸ் டஜன் 1 க்கு 3—8—0,

,, ஷை 3 நூல் Thick Fancy 5—0—0.

இவைகளைத் தவிர எங்களிடம் பெரிய வலை, சின்ன வலை, கோகர்ஜான் வலை, திகபிக் ஜம்பிங், ராயல் நிக், ராயல் ரிப், பிளேன் முதலான பனியன்களும் இந்தியாவிலுள்ள மற்ற பனியன்களையும் விட விலை சகாயமாகவே கிடைக்கும். வேண்டியவர்கள் நேரே எங்கட்கு ஆர்டர் செய்யவும். விலை விபர ஜாபிதா இனாம்,

The General Knitting Factory,
Tirupur, (S, India.)

## வேஷ்டிகள்.

உடுத்திக்கொள்ளுவதற்கு இலேசாகவும் உறுதியாகவும் இருக்கக் கூடியதும், சலவைக்கும் துவைப்பதற்கும் நாள்பட தாங்கக்கூடியதும், எல்லோராலும் எக்காலத்திலும் விரும்பக்கூடியதுமான அசல் எண்பதுக் கெண்பது வெள்ளை நூல் பட்டுச்சரிகை போட்டு வேஷ்டிகள் எங்கள் மேற்பார்வையில் தற்காலத்துக்கேற்ற மாதிரிகளில் தயார்செய்யப்பட்டுவருகிறது. ஓரங்களில் கால் அங்குலம் முதல் அரை அங்குலம் வரையில் அகலத்தில் சாயம்போகாத பட்டுக் கரையில் உயர்ந்த வெள்ளி ஜரிகையிலும் பலவிதமான கொடி பூ முதலியவைகள் உள்ள பேட்டுகள் போட்டிருக்கும். வேஷ்டிகளின் அகலம் 52-முதல் 54-அங்குலம் 5, 6, 7, 8, 9 முழம் இந்த நீளங்களில் கிடைக்கும். கரை பல கலரில்.

முழம் 1-க்கு ரூ 1—8—0; 1—12—0; 2-0-0.

உடனே ஆர்டருக்கு முந்துங்கள்.

சேலம் ஷண்முகம் கம்பெனி லிமிடெட்,
மெயின் ரோட், சேலம். (S. India.)

## தெம்மாப்பட்டு வேளாளர்களுக்கு ஓர் வேண்டுகோள்.

ஐயன்மீர்!

பார்ப்பனர்களால், தங்கட்குச் சாதகமான வற்றை முனிவர்கள் வாக்கென்றும், இருடிகள் அருளியதென்றும், கடவுளால்மக்கட்குசெய்யப்பட்டதென்றும் கூறி, புராணங்களென்றும், இதிகாசங்களென்றும் பல பெயர்களிட்டு எழுதிவைக்கப்பட்ட புரட்டுத்தனத்தையும் யோக்கியமற்ற கட்டுக்கதைகளையும் யாவர்க்கும் புலனாகும்படி தக்க ஆதாரங்களுடன் இடித்துக்கூறி இக் 'குடி அரசு' 'திராவிடன்' முதலிய பத்திரிகைகள் மூலமும் சொற்பெருக்குகள் மூலமும் தமிழ்நாட்டிற்கு புது உணர்ச்சியை ஈந்து வைதிகப்பேயையும் புரோகிதச்சனியனையும் நாட்டைவிட்டுத் துரத்தி அதனால் கொள்ளைபோகும் பொருள்களையும் சுயமரியாதையையும் காப்பாற்ற பல அறிவாளிகள் தங்கள் உயிரைத் திரணமென உன்னி பாடுபட்டு வருவதை நீங்கள் அறிவீர்கள். அப்படியிருக்க, ஒரு பார்ப்பனப்புரோகிதக் குடும்பத்தை வேளாளர்களுக்குச் சொந்தமான பொதுஸ்தலத்தில் இரண்டொரு தாசர்களின் தூண்டுதலின்பேரில் கூட்டிவந்து இருக்கச்செய்து அக்குடும்பத்திற்கு வேண்டியவசதிகள் புரிந்துவருவதுமன்றி அப்பார்ப்பனர் பெயரால் ஏழைகளை வஞ்சித்து பொருள் பறிப்பது பெரியோர்கள் என்று பெருமை பேசிக்கொண்டு திரிவோர்களுக்குச் சிறிதும் பொருத்தமானதாகாது.

பார்பனப் புரோகிதத்தின் மோசத்தனத்தை உணர்ந்து அம்மாயவலையில் சிக்காமல் விலகிநிற்கும் மக்களை, மேற்சொன்ன புரோகிதரையோ அன்றி வேறெந்தப் புரோகிதரையோ கூட்டிவந்துதான் கலியாணமுதல் மற்ற சடங்குகள் யாவும் நடத்தப்படவேணுமென்றும் அப்படிக்கில்லாவிட்டால் ஜாதிப்பிரஷ்டம் செய்துவிடுவோமென்றும் (குடியே முழுகிப்போய்விடும்) சொல்லி பூச்சாண்டி பிடிக்கப்பார்ப்பது வேளாளர்களை மூன்னுக்கு கொண்டுவருவதற்கு அடையாளமாவெனக்கேட்கின்றேன்.

மணவீட்டார் நேர்மையுடன் செய்யும் இந்தக் காரியத்திற்கு சகலமும் உணர்ந்த மேதாவிகளைப் போல் நடித்துக்கொள்ளும் ஒருசிலர் இவ்விஷயத்திலும் புத்திசாலித்தனமாகவல்லவா நடத்திக் காண்பிக்கவேண்டும், இன்றேல் தங்கள் வேஷத்திற்கு கௌரவ மேறபடாதல்லவா?

பார்ப்பனப் புரோகிதம் வேண்டுமென்பவர்கள் தாங்களே அதற்கு ஆதரவளிப்பதோடு தொலையாமல் பிறரையும் பிரசாரஞ் செய்து வருவதால் இவர்களுக்குள் ஏதோ ரகசியம் மறைந்து கிடக்கிறது. சாம்பல் பூச்சையும் ருத்ராட்சக்கொட்டைகளையும் பார்த்து மோசம்போன காலம் மலையேறிவிட்டதென மிகவும் வணக்கமாய்த் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

பெரியோர்களே! இனிமேலாவது புரோகிதமின்றி நடைபெறும் காரியங்கட்கு இடையூறாக புரோகிதத்திற்கு வக்காலத்து வாங்கிப்பேசமாட்டீர்களென நினைக்கிறேன். பேசினும் அறிவுள்ள மக்கள் ஏற்கமாட்டார்களென்றும் உங்களை எச்சரிக்கை செய்கிறேன். ஆண்டவன் உங்கள் இருள்மதியை ஓட்டிசுடர்மதியை அளிப்பாராக.

சுயமரியாதை அன்பன்.

---

காமானந்த ரஸாயனம்.
பெயர் பெற்ற தாதுபுஷ்டி மருந்து இதுவே,
25 நாள் டப்பி 1-க்கு விலை 1—8—0.
கேட்லாக் இனாம்.
மானேஜர், சித்த ஔஷதசாலை கம்பெனி,
போஸ்டு முல்லச்சேரி, தென் மலையாளம்.

குடியர்களை குணமாக்கும்
அற்புத "லிக்கோரின்"

"லிக்கோரினை" தண்ணீர், பால், குழம்பு, மிளகுரசம், காப்பி, டீ, கள், பிராந்தி முதலிய எந்தப் பானத்திலும் கலந்து குடிகாரருக்கும் அபினி தின்போருக்கும் தெரிந்தோ தெரியாமலோ கொடுத்து வருவதில் குடியையும், அபினையும் ஆயுளுள்ளளவும் விட்டு விடுகிறார்கள். பரீட்சைக்கும் பலனுக்கும் உத்தரவாதம். கடந்த 16 வருஷமாக ஏராளமான நற்சாட்சிப் பத்திரம் பெற்றது. பத்தியமே கிடையாது. 15, 20, 25 வருஷக் குடியருக்கு ஒரே புட்டி போதுமானது. தேகத்திற்கு யாதொரு கெடுதியும் செய்வதேயில்லை. தேகத்திற்கு பலத்தை யுண்டாக்கும்.
40 நாள் புட்டி லிக்கோரின் விலை ரூ. 5.
தபால் வி. பி. செலவு அணா 9 பிரத்தியேகம்.
ஆங்லோ இன்டியன் டிரக்ஸ் கம்பெனி,
கோயமுத்தூர், தென் இந்தியா.
ANGLO INDIN DRUGS CO.,
Coimbatore. (S. India)

அசல் வெள்ளி நகைகளை
வாங்குங்கள்.

அசல் வெள்ளியினால் தயார்செய்த அருணாக்கொடி நினுசுகள், கொலுசுகளில் சாதா செயின், முத்து செயின், பட்டைபடித்த செயின், ஒட்டியாணம், காப்பு, கடகம், மயிர் மாட்டி, பீலி, அருப்பு சங்கிலி, சாவிச் சங்கிலி, கம்மல், தோடு, கடுக்கன், மோதிரம், இதர தங்கம், வெள்ளி நகைகளும் கிடைக்கும். வியாபாரிகளுக்கு குறைந்த விலைக்கு கிடைக்கும். விபரத்திற்கு எழுதவும்.
S. K. மாணிக்கம் செட்டி,
தங்கம், பவுன், வெள்ளி
நகைகள் வியாபாரம்,
செவ்வாய்பேட்டை, சேலம்.

சுயமரியாதை பெற்றால்
சுயராஜ்யம் பெறலாம்.


பழனியில் இதுவே பரம்பரையான வைத்தியசாலை!
உலகப் பிரசித்திபெற்ற வைத்திய ஆசிரியர்!
சன்மானங்கள் பெற்ற சமஸ்தான வைத்திய நிபுணர்!

அநேக பரிசுகளும், மெடல்களும், நற்சாக்ஷிகளும் பெற்று உலகப் பிரசித்தி அடைந்திருப்பதோடு 25-8-23ல் சென்னையிலும், 14-7-27ல் மதுரையிலும் நடந்த வைத்திய கான்பரன்ஸ் அண்டு மருந்து கண்காக்ஷியில் இவர் மருந்துகள் பஸ்ட்கிளாஸ் (முதல்தர) தேவ ஔஷதங்களென தங்க மெடல்களும் வைத்திய ஆசிரியர் பட்டமும் பெற்றவர்.

தேகபலம், மனோசக்தி, தாதுபுஷ்டி, ஜீரணசக்தி, உற்சாகம், ஞாபகசக்தி, சுறுசுறுப்பு, ஊக்கம், என்றுமழியாத இளமைப் பருவத்தை அடைய வேண்டுமானால்

பழனி சி. எம். சாமி முதல்நெ. மகாவீரிய அசல்
தங்க பஸ்பம் சாப்பிடுங்கள்.

பரிசைக்ஷக்கும் பலனுக்கும் உத்திரவாதம்.

தாதுபுஷ்டிக்கு இதற்கு நிகரானது புவியிலெங்குமில்லை. நாதை கட்டுவதிலும் பசியை உண்டாக்குவதிலும் இரத்த விருத்தியைக் கொடுத்து தாதுபுஷ்டியைத் தருவதிலும் அபார சக்தி வாய்ந்தது. இது பிரபுக்களுக்கானது. இதை ரோய் பலம்போல் ஒன்றரை மண்டலம் காலை மாலையாக சாப்பிட சகல வியாதிகளையும் நீக்கி வெகு சீக்கிரத்தில் வீரியத்தையும் பலத்தையும் கொடுத்து இழந்த பலமும் ஆண்மையும் திரும்ப உண்டாகும். இவ்வாழ்க்கையின் இன்பத்தைக் கொடுத்து பால்யம், யௌவனம், விருத்தாப்பியம் இந்தப் பருவங்களில் அடையவேண்டிய காலத்திற்கு முன் அடைந்த விபரீதங்களை நிவர்த்தி செய்யும். இழந்தனத்தை நீக்கி வலலமை அடையச் செய்வதில் பேர்பெற்றது. இதன் பெருமையை எழுதி முடியாது. ஒருமுறை உபயோகித்தவர்களுக்கே இதன் பெருமை தெரியும். அவ்வளவு அபார சக்தி இதனிடமிருக்கிறது. வெள்ளை, வெட்டை, கடுப்பு, பவுத்திரம், மூலம், நீரழிவு, க்ஷயம், இருமல், சப்தகட்டு, குன்மம், குஷ்டம், மேகம், சூலை முதலிய சகல சர்ம வியாதிகளும் நீங்கும். பத்தியமில்லை. 100 நாள் பஸ்பம் ரூ. 40. 48 நாள் பஸ்பம் ரூ. 20. 24 நாள் பஸ்பம் ரூ. 10. வி. பி. சார்ஜ் வேறு.

நற்சாக்ஷி:—தங்கள் தங்க பஸ்பம் சாப்பிட்டதில் எனக்கிருந்த வாய்வு, வெட்டை, பலக்குறைவு முதலியன நீங்கி அபார தாதுபுஷ்டி உண்டாயிருக்கிறது. இதன் பெருமையை எழுதமுடியாது. இன்னும் ஒரு தங்க பஸ்பம் ஒரு மண்டலத்திற்கு அனுப்பவும். வி. பி. வரதராஜப்பெருமாள் சாமி, கவிராயர், பொள்ளாச்சி.

ஏராளமான நற்சாக்ஷிகளை கேட்லாக்கில் பார்க்கலாம். வி. பி. சார்ஜ் பிரத்தியேகம்.
பினாங் முதலிய அன்னிய தேசவாசிகள் ரூபாய் அட்வான்ஸ் அனுப்பவேண்டும்.

சித்த ஆயுர்வேத வைத்திய ஆசிரியர்
C. மலையப்பசாமி நித்தியானந்த வைத்தியசாலை,
பழனி S. I.

சென்னை பிராஞ்ச் ஆபீஸ்:-முருகன் ஏஜென்ஸி, 43 அரமனைக்காரத் தெரு, ஜி. டி. சென்னை.

5-ம் பக்கம் தொடர்ச்சி

டிற்குச் செல்லுங்கள். குழந்தை பிறக்கும் தினத்தன்று எனக்கு நிறைய பொருளனுப்பிவைக்கும்படி தங்கள் கணவருக்குச் சொல்லுங்கள்" என்று கூறிப் போய்விட்டார்.

பிறந்த குழந்தை ஒன்றாம் பிறந்தது. ஆனால் பிறந்த குழந்தை பெண்ணாகப் பிறந்துவிட்டது.

பல வருஷங்கள் கழிந்தன. இதே காளி கோவிலுக்கு இரண்டாவதாக ஒரு முறையும் சீதா போய் வந்தாள். ஆயினும் வேறு பலனில்லை. வாழ்வும் அடங்குபோயிற்று. இருந்தாலும் "கடவுள் இதுமட்டில் என் உடலுக்கு எவ்வித பிணியையும் வருப்படி விடாமலிருந்தாரே, அதுவே போதும். ஐயோ அதிலும் குட்ட நோய் என்ற பெயரைக்கேட்டாலோ என் குடல் நடுக்குறுகிறது" என்று சீதா ஒருவாறு தன் மனதையாற்றிவந்தாள். அவள் கணவனாகிய பிமால் இனி குழந்தை பெறுவதரிது என்று கண்டவுடன் தனக்குக் கொள்ளி வைத்துக் குடம் உடைப்பதற்காக ஒரு பையனைத் தத்து எடுத்துக்கொண்டான்.

'காளியருளால்' பிறந்த பெண்ணும் நன்றாக வளர்த்துவரப்பட்டும் அவள் தாயாராகிய சீதாவால் குடும்ப வேலைகளில் நன்கு பயிற்றப்பட்டும் வந்து ஒன்பதாவது வயதில் மணமுடிக்கப்பட்டுக் கணவன் வீடு போய்ச் சேர்ந்தாள்.

அதன்பின் சீதா செய்த பாபத்தினால் பிமால் இறந்தான். சீதா என்ன பாவம் செய்தாள்! இப்பிறப்பில் எதுவும் செய்ததாக அவள் அறியவில்லை. ஆயினும் முற்பிறப்பில் செய்ததுதான் வந்து மூண்டதுபோலும்!

அது எப்படியானாலும் மனைவியானவள் பாபஞ் செய்திராவிட்டால் கணவன் இறப்பானா? இறக்கமாட்டானாகையால் கணவனை இழந்த அவள் கண்டோர் அபசகுனமென்று கடியுமாறும், யாதொரு உரிமையுமின்றியும் அடிமையைப் போற் சாகும் வரையிற் காலங் கழித்து வரவேண்டும் என்பதுவே பழக்கமான கொள்கையல்லவோ?

சீதாவின் அணியும், நகைகளும், கூந்தலும் களையப்பட்டன. ஒரு வெள்ளைச்சேலை கையிற் கொடுக்கப்பட்டு [illegible] யாவின் வீட்டால் வெளியில் [illegible] தப்பட்டாள். [illegible] யால் சேர்த்து வைத்திருந்த [illegible] பொருள்களில் இவளுக்கு அந்த வெள்ளைச்சேலை ஒன்றுதான் கொடுக்கப்பட்டு [illegible] சேரவில்லை.

ஆயினும் சீதாவின் [illegible] யாக [illegible] க்கு வாய்த்திருந்த மருமகன் [illegible] முடையவனாக இருந்தான். அவன் தான் முதலில் குறிக்கப்பட்ட [illegible] வீட்டை சீதாவுக்குக் கட்டிக்கொடுத்து ஆகாரத்துக்கு வேண்டிய வசதிகளையும் ஒருவாறு செய்து கொடுத்தான். அந்த வீட்டில் வசித்துக் கொண்டு இரவும் பகலும் வேறு வேலையில்லையல் பழைய வாழ்வை நினைத்து நினைத்துக் கண்ணீர் பெருக்கி காலங்கழித்து வந்தாள். கைம்பெண்ணாகிய ஒருத்திக்கு அதைவிட வேறு என்ன கதி?


'திராவிடன்'

---

# முந்துங்கள்!

விலை ரூ. 3-8-0 தான் ரூ. 3-8-0 தான்

**110** சாமான்கள் அடங்கிய ஜெர்மன் பெட்டி



சாமான்களின் விவரம்.

18 காரட் ரோல்டு கோல்டு அழகிய கிப்புடன் பவுண்டன் பேனா 1; 18 காரட் ரோல்டு கோல்டு இமிடேஷன் வைர மோதிரங்கள் 2; ஷை சர்ட் பொத்தான்கள் செட் 12; ஷை கல்விழைத்த புரூச் 1; ஜப்பான் நூதன பொம்மைகள் 6; சொந்தியான முகம் பார்க்கும் கண்ணாடி 1; அழகிய தந்த சீப்பு 1; மடிப்புள்ள கத்தி 1; நேர்த்தியான கத்தி 1; காம்பினேஷன் நூதன சாவி வளையமும் செயின் 1; உயர்ந்த பென்சல்கள் 12; பென்சல் கிளிப்புடன் கூடிய கவர் 1; பலரக பென் ஹோல்டர்கள் 6; உயர்ந்த கிப்புகள் 12; மணிபர்ஸ் 1 ஜெர்மன் இங்கி புட்டி 1; இங்கி மாத்திரைகள் 12; செண்ட் புட்டி 1; தேசிய டிரான்ஸ்பர் படங்கள் 12; அழகிய பலரக சேப்டி பின்கள் 2! ஆக 110 சாமான்கள் அடங்கிய ஜெர்மன் பெட்டி 1-க்கு 3—8—0. P. K. மூர்த்தி கம்பெனி தபால் பெட்டி 119, மதராஸ்.

---

மதுரையில்

## ஓர் நல்ல வீடு

விற்பனைக்கு வருகிறது.

மதுரை வடக்குச் சித்திர வீதி ஒக்கூர் லக்ஷ்மண செட்டியார் பாடசாலைக்குச் சமீபத்தில், மதுரை இம்பீரியல் சினிமா புரொப்புரைட்டர் ஜி. எஸ். ஜகபதி நாயுடு அவர்கள் வீடு கெட்டி மச்சு கட்டிடம் கோவிலுக்குச் சமீபத்தில் இருப்பதால் வியாபாரத் தொழிலாளிகளுக்கு மிகவும் வஸதியாயுள்ளது. விடுதிக்காகவும் உபயோகப்படுத்தலாம்.

மற்ற விபரங்களுக்கு கீழ் கண்ட விலாசத்துக்கு எழுதித்தெரிந்து கொள்ளவும்.

ராவ்சாஹிப் எம். அப்பாய் நாயுடு,
ஜில்லா போர்டு வைஸ் பிரசிடெண்டு,
மதுரை.

---

நமது நாட்டை பாழாக்கியது
பார்ப்பனீயம்.

---

## கிரந்தி மாத்திரை.

மேகம், கிரந்தி, வெடிசூலை, முதலிய கொடிய வியாதிகட்கு
ஓர் அனுபவ மருந்து.

மேக விஷநீரால் உண்டாகும், அரிப்பு, தடிப்பு, மதப்பு, கைகால் சுவாதீனக் குறைவு, நூணுக்காய் கிரந்தி, கள்ளிப்பூக் கிரந்தி, கருங்கிரந்தி, இரணத்தோடு கூடிய கிரந்தி, லிங்கப்புற்று, யோனிப்புற்று, முதலிய சகல வியாதியும் குணப்படும்.

நீண்டகாலமாக அனுபவமான உயர்ந்த மருந்து.

முதலில் சாப்பிடவேண்டிய கஸ்தூரி எண்ணை—

| | |
|---|---|
| 3-நாள் மருந்து சீசா 1-க்கு | 3—0—0. |
| கிரந்தி மாத்திரை 7-நாளைக்கு | 7—0—0. |

ஒரே முறையில் குணந்தெரியும்.
ஏராளமான பேர்கள் சாப்பிட்டு குணமடைந்ததற்கு நற்சாட்சி
பத்திரங்களிருக்கின்றன :—

சீர்காழியில் பரம்பரை பிரபல வைத்திய குடும்பத்தைச் சேர்ந்த பண்டிட், சி. வா. ஞானசம்பந்தம் அவர்களை நான் இருபது வருஷங்களாக அறிவேன். எனது நண்பர் ஒருவருக்கு மேகவிஷநீர் சம்பந்தமான கிரந்திரோகத்தை கஸ்தூரி எண்ணை கிரந்திமாத்திரை இவைகளால் 1918-ம் வருஷத்தில் இவர் குணப்படுத்தியிருக்கிறார். இவரது தங்கம் சேர்ந்த இராஜமதனாமிர்தம், மதனாமிர்தம், இவைகள் நரம்புகளுக்கு முறுக்கேற்றி, இந்திரிய வலுவை உண்டாக்குவதால் முதன்மையான தென்பதில் சந்தேகமில்லை. இவர்களால் நீண்டகாலமாக தயார் செய்யப்படும் பிருங்கமலாக தைலம் சிரசிலுள்ள உஷ்ணத்தை நீக்கி கண்களுக்கு உணர்ச்சியை உண்டாக்குகிறது.


(ஒப்பம்) மு. செல்லையா ஆச்சாரி,
3—6—28. தேவஸ்தானம் திருப்பணிஸ்தபதி, திருமாளம்
அம்பல் போஸ்டு. (தஞ்சை ஜில்லா)

**பண்டிட், சி. வா. ஞானசம்பந்தர்,**
ஜீவரட்சாமிர்த இராஜ வைத்தியசாலை,
கடைவீதி, பிடாரி வடக்கு வீதி, சீகாழி.

நான்காம் பதிப்பு! நான்காம் பதிப்பு!

# இல்வாழ்க்கையின் இரகசியங்கள்

அழகான பயிண்டு. சுமார் 400 பக்கங்கள் கொண்ட பெரிய புஸ்தகம். நேர்த்தியான அச்சு.
நல்ல கிளேஸ் காகிதத்தில் அச்சிடப்பட்டிருக்கிறது. அநேக அழகிய ஆப்டோன் படங்களுடன் கூடியது.




இந்த ஏரோப்ளேன் டிரேட் மார்க் பார்த்து வாங்குங்கள். இந்த டிரேட் மார்க் இருந்தால்தான் உண்மைப் புஸ்தகம்.

## இந்நூலில் அடங்கியுள்ள விஷயங்கள்,

1. துறவிகளின் கதி என்ன?
2. இவ்வாழ்க்கை என் சிறந்தது?
3. இல்லறத்திலிருந்து மோக்ஷமடைவதெப்படி?
4. இல்வாழ்க்கையின் இரகசியங்களை யறியாதார் படும் பாடு.
5. பெண்ணின் பெருமை. பெண் கல்வி.
6. நாணம் எப்படி உண்டாயிற்று?
7. உடைக்கும் நாணத்திற்கும் சம்பந்தம்.
8. நாம் ஏன் உடைதரிக்கவேண்டும்?
9. நிர்வாணமாயிருப்பதின் தத்துவமென்ன?
10. இக்காலத்தில் எங்கெங்கே நிர்வாணமாயிருக்கின்றனர்?
11. ஒவ்வொரு தேசத்திலும் கலியாணங்கள் எப்படி நடைபெறுகின்றன? உண்மையான கலியாணம் எது?
12. காதல் என்றால் என்ன? காதலுக்கும் காமத்திற்குமுள்ள வித்தியாசம்.
13. இல்லறத்தில் எப்படி வெற்றியடைவது?
14. மனைவிகளைக் கணவன்மார் எப்படி வசியப்படுத்துவது?
15. கணவன்மாரை மனைவிகள் எப்படி வசியப்படுத்துவது?
16. தமக்குச் சரியான ஸ்திரீ அல்லது புருஷன் என்று எப்படிக் கண்டு கொள்வது?
17. ஸ்திரீகளுக்கு எப்பொழுது காமம் உண்டாகிறது?
18. அவர்களிடத்தில் அமிர்தகலை எங்கெங்கே இருக்கிறது? அதை எப்படி நிலை பெயர்க்கிறது?
19. பலஜாதி ஸ்திரீகளின் லட்சணங்கள்.
20. சங்கமம் செய்ய வேண்டிய நாளும் நாழிகையும்.
21. ருதுவாவதின் மர்மம் அல்லது மாதவிடாய் என்பதன் தத்துவமென்ன?
22. பெண்களிடத்தில் பிணக்கு உண்டாவதற்கு காரணம். இதை போக்கடிக்கச் சுலபமான வழிகள்.
23. மனம்போல் மக்களைப் பெறும் அரிய உபாயங்கள்.
24. கருவிலிருப்பது ஆணு பெண்ணு என்று எப்படி அறிந்து கொள்வது?
25. கர்ப்பகாலத்தில் ஸ்திரீகள் நடந்துகொள்ள வேண்டிய முறைகள்.
26. கர்ப்ப காலத்தில் ஒவ்வொரு மாதத்திலும் உண்டாகக்கூடிய வியாதிகள்.
27. ஆவைகளை போக்கடிக்கும் உபாயங்கள்.
28. முதல் மாதத்திலிருந்து கடைசி மாதம் வரையில் சிசுவின் வளர்ச்சித் தத்துவம்.
29. ஸ்திரீகள் மலடாவதுண்டா? உண்டானால் அதற்குக்காரணம்? அதைப் போக்கடிக்கும் விவரம்.
30. புருஷர்கள் மலடாவதுண்டா? எங்கு பார்த்தாலும் ஏன் ஆண் மலடு விசேஷமாயிருக்கிறது? இதைப் போக்கிக் கொள்வதெப்படி?

31. அதிகமாகக் குழந்தைகள் பிறப்பதினால் நாட்டுக்கு நன்மையா, தீமையா? தீமையாயின் அதைத் தடுக்க உபாயம் என்ன? ஸ்திரீ புருஷர்கள் சேர்க்கையைத் தவிர்க்காமல் குழந்தைகள் பெறுவதை மட்டும் தடுக்க முடியுமா? அமெரிக்கா, பிரான்ஸ், இங்கிலாந்து, ஜப்பான், சைனு, துருக்கி முதலிய இடங்களில் குழந்தை பெறும் விஷயத்தில் ஜனங்கள் என்னென்ன அநியாயங்கள் செய்கின்றனர்? சிசுக் கொலை அநியாயம்.

32. ஒருவன் எத்தனை மாதரை மணம்புரிந்து கொள்ளலாம்? பல மாதரிடம் சேர்ந்திருப்பவன் கவனிக்க வேண்டிய விஷயங்கள் என்ன? அவன் தனது சரீரத்தை எப்படிக் காப்பாற்றிக் கொள்வது? அவனுடைய மனைவிகள் ஒருவருடனொருவர் பொறாமை கொள்ளாமலிருக்க வேண்டுமானல் அவன் எப்படி நடந்துகொள்ளவேண்டும்.

33. தாசிகள் நாட்டிலே இருப்பதால் நன்மையா, தீமையா? தாசிகள் வீடுபோகும் நபர்களுக்கு நாம் சொல்லக்கூடிய சில வார்த்தைகள்.

நண்பர்களே! இதுகாறும் சொல்லிவந்த விஷயங்களல்லாமல் இன்னும் எத்தனையோ நூற்றுக்கணக்கான பொன்போன்ற இரகசிய விஷயங்களை இந்நூல் தன்னகத்தே கொண்டிருக்கிறது.

விலை ரூபாய் 2-0-0.

ஒரே சமயத்தில் இரண்டு காபிகளுக்கு எழுதினல் உள்நாட்டுக்கு தபால் செலவு இனம்.

## வாஸன் புஸ்தகசாலை,

**244, தங்கசாலைத் தெரு, தபாற் பெட்டி நெ. 119, ஜி. டி. மதராஸ்.**

3-ம பக்கத் தொடர்ச்சி.

த்தின் உபயோகமான அங்கங்களாகத் திரும்ப வும் அனுப்பப்படுகிறார்கள். ஆ ஆ! என்ன ஆச்சரி யம், என்ன அழகு! நீ பார்த்தாலே நம்புவாய். ஆ! இந்தியா தேசத்தில் எளியவர்கள் தாழ்ந்தவர் களைப் பற்றி நாம் என்ன நினைக்கிறோம் என்ப தைப்பற்றி நினைக்க எனது இருதயம் எத்தகைய வருத்தமுற்றது. அவர்கள் (இந்தியதேசத்து ஏழை கள்) மேலேறுவதற்கு வழியில்லை; சந்தர்ப்பமி ல்லை. இந்தியாவில் எளியவர்கள், தாழ்ந்தவர் கள், பாவி, இவர்களுக்கு ஸ்நேகிதர்கள் இல்லை; சகாயமில்லை; இவர்கள் எவ்வளவு முயற்சி செ ய்தபோதிலும, மேலெழும்பமுடியாது; நாளுக்கு நாள் கீழே கீழே தாழ்ந்து போகின்றனர்; குரூர சுபாவத்தையுடைய ஒரு ஜன சமூகம் அவர்க ளின்மேல் அடிமேல் அடியாக அடிப்பதை உணரு கிறார்கள். ஆனால் அடி எங்கிருந்து வருகிறதெ ன்று அவர்கள் அறியார்கள். தாங்களும் மனிதர் என்பதை அவர்கள் மறந்தேவிட்டார்கள். பயம், அடிமைத்தனம் ஆகியவைகளை சென்ற சிலவருஷ ங்களுக்குள் ஆலோசனைச் திவாய்ந்த சிலஜனங்கள் அறிந்தனர். நானும் அதன் மர்மத்தை அறிந்து கொண்டேன். மதத்திடத்தில் குற்றமில்லை. உன்னுடைய மதமானது ஒவ்வொரு ஜீவராசியும் உனது ஆத்மாவின் பருக்கமே என்று உனக்கு உபதேசிக்கின்றது. ஆனால் இருதயக்குறைவே இரக்கமின்மையே-அனுபவ ஞானம் இன்மை யே-பண்டித மமதையே- வைதீகக் கொடுமைக்கு காரணமாகும்: கடவுள் உங்களிடத்திற்கு மறுபடியு ம்புத்தராக வந்து எளியவர்கள், துன்புறுபவர்கள், பாவி இவர்களுக்கு இரங்கும்படி உங்களுக்கு உப தேசித்தார்; ஆனால் நீங்கள் அவருடைய வார்த்தை க்குச்செவிசாய்க்கவில்லை; உங்களுடைய வைதிக் களும் இரக்கமற்ற பண்டிதர்களும் பொய்க்கொள் கையினால் அசுரர்களை மயங்கச் செய்வதற்கு கட வுள் இங்கு வந்திருந்தார்' என்ற பயங்கரமான கதை யைக் கட்டி விட்டனர். உண்மைதான். யாமே அசுரர்கள்; நம்பினவர்களல்லர். யூதர்கள் இயேசு நாதரை மறுத்துவிட்டு அன்றுமுதல் எல்லோரா லும் கொடுமையாக நடத்தப்பட்டு உலகில் இருப் பதற்கு இடமில்லாமல் இரந்துதிரிவதைப்போல, நீங்களும் உங்களை ஆட்சிசெய்யலாமென்று நினை க்கிற எந்த ஜன சமூகத்தாருக்கும் அடிமைகளாக விருக்கிறீர்கள். ஆ கொடுமையாளர்களே; ஒரு புறம் கொடுமை; மறுபுறம் அடிமைத்தனம் என்ப தை நீங்கள் அறிவீர்கள். அடிமையும் கொடுமை யாளனும் ஒரே அர்த்தத்தைக் குறிப்பிடுபவர் களே.

"உலகில் ஒருமதமும் மானிடவர்க்கத்தின் பெ ருமையை இந்து மதத்தைப் போல் அவ்வளவு உயர்ந்த படியில்போதிப்பதில்லை"யென்று பெரு மையை அனுபவிக்கப் புறப்படும் நீங்கள் "இந்து மதத்தைப் போல உலகில் ஒரு மதமும் தாழ்ந் தோர் எளியோர் இவர்களுடைய கழுத்தில் ஏறி மிதிப்பதுமில்லையே" என்பதற்கு பதில் என்ன சொல்லுகிறீர்கள். மதத்தில் குற்றமில்லை, ஆ னால் இந்துமதத்தின் போல் மதத்தில் இரக்க மில்லாத பண்டிதர்களும் வைதீக வெளிவேஷக் காரர்களும் பாரமார்த்திகம் வியாவகாரிகம் என்ற கொள்கைகளின் வடிவமாய் கொடுமை செய்வத ற்கு எல்லாவித யந்திரங்களையும் சிருஷ்டித்தனர். முக்ஸ்திதி, வெளிவேஷம் ஆகியவைகளையெல் லாம் விட்டு ஜன சமூகத்திற்கு ஸ்வதந்தி ரம் கொடுத்தால் நீங்கள் கடைத்தேறுவீர்கள். உங்களுடைய மதத்திலிருந்து வைதிகக்கொடுமை யை எடுத்துவிட்டால் உலகில் உயர்ந்த மதம் உங்களுடையதே.

(தொடரும்)

[4-ம் பக்கத் தொடர்ச்சி]

பட வேண்டு மென்னும் காரணத்தால் தன்னு டைய மனைவியாகிய நாட்டின் அரசியை காட் டிற்கனுப்பிய நன்னடத்தைகளும்" என்று எழு தினர். பிரஜா உரிமை பற்றியும் அரசாளு முறை பற்றியும் நன்னடத்தை பற்றியும் திச்சாமிநாதனு க்குள்ள அறிவு மிக அழகிதே. இவ்விழிந்த ஆ ராய்ச்சியையும் 'தமிழ்நாடு' வெளிப்படுத்தியதே! அறிவாளர் நகையாடக் கூடிய இத்தகைய கட்டு ரைகளை வெளிப் படுத்துவதினும் நல்ல கட்டுரை கள் கிடையாது போலும். வெள்ளைத்தாள்களை மடித்துச் சந்தாதாரர்களுக்கு அனுப்பின் மிக நலமாயிருக்குமே.

கேவலம் வண்ணானொருவன் தன் மனைவியின் நடத்தையில் ஐயுற்றது காரணமாகத் தன் மனைவி யை அதிலும் பூரண கருப்பிணியை ஒருவன்காட் டுக்கு அனுப்பினுனென்றால் அவனைப் போலும் அறிவில்லாத முழுமுடன் ஒருவன் இவ்வுலகத்தில் இதுகாறும் தோன்றியிருப்பானா என்பதைச் சாமி நாதன்சிந்திப்பாராக. இராமன் இதனால் மிகவும் முழுமுடனாதல் வேண்டும். அன்றியும் இரக்கமற்ற பாவியுமாதல் வேண்டும். தன்னுடைய மனைவி யும் பூரண கருப்பிணியுமாகிய சீதை யென்ற ஓர் பெண்ணிடத்திலேயே இவ்வாறு மிருகத்தி லும் கேடுகெட்ட மிருகம் போல நடந்து கொண்ட இராமன் தவம் செய்து கொண்டிருந்த ஓர் சூத்திரனுடைய தலையை வெட்டினானென் பது ஓர் ஆச்சர்யமன்று. விவேகானந்தர் கூறுகி றாரென நம்பும் இடைச்செருகலெனும் நம்பிக் கையைச் சாமிநாதன் விட்டொழிப்பாராக. மேலும் சீதை கற்பிழந்தவளாகாதிருந்தால் அவள் கணவனாகிய இராமன் ஐயுற்றதோடு நில் லாமல் உறுதி கொண்டு அவளைக் காட்டுக்கு அனுப்பியிரானன்றோ? அவரது பாரதக் கூறாரா ராய்ச்சியைவரும்போது எழுதுவோம் அதற்கு இடமின்றும். ஆதலின் மேற் செல்லுதும்.


கேம்பிரிட்ஜ்

இங்கிலீஷ்

கரஸ்பாண்டன்ஸ்

டிபார்ட்மெண்டு.

புது ஆரம்பம்! புது ஆரம்பம்!

சுயாதீனமாய் தொழில், உத்தியோகம் செய்ய வேண்டுமோ? ஆங்கிலம் தெரியாதவர் கள் உலக பிரசித்திபெற்ற 5 மாத இங்லீஷ் கோர்ஸை முடித்து சர்க்காரால் அங்கீகரிக் கப்படும் உயர்தர பட்டங்களுக்கும் படிக்கக் கூடியதுமான கேம்பிரிட்ஜ ஜூனியர், சீனி யர், கோர்ஸ்களை வீட்டிலிருந்தபடியே தாங் கள் செய்யும் தொழிலுக்கு யாதொரு இ டையூறின்றி படிக்கலாம். ஏராளமான நற் சாக்ஷிப் பத்திரங்கள். 7-வது (III Form) பாஸ் பண்ணினவர்கள் ஜூனியரிலும், 9, 10 (S. S. L. C.) படித்தவர்கள் சீனியர் வகுப்பிலும் எடுக்கப் படுகிறார்கள்.

5 மாத இங்கிலீஷ் முழுக் கோர்ஸ் தபால் மூலம் கற்றுக்கொள்ள ரூ. 5 மாத்திரம் முன் பணம் கட்ட வேண்டும். பிராஸ்பெக்டஸுக் கு, எர்கனவே படித்த விபரத்தோடு ஸ்டா ம்புடன் எழுதவும்.

டைரக்டர்,

கேம்பிரிட்ஜ் இன்ஸ்டிடியூட், நாகூர்.



சிரிப்பு! சிரித்து சிரித்து வயிறு சிரிப்பு! புண்ணாய் விட்டதென்று ஒருவர் எழுதுகிறார்.

முத்துமாமா.

நேயர்களே! இந்தக் கதையைப் படித்து விட்டால் நீங்கள் சாப்பிடும் போதும் சிரிப்பீர்கள். தூங்கும்போதும்கூட சிரிப் பீர்கள். வேண்டுவோர் 4½ அணு ஸ்டா ம்பு அனுப்பவும். எந்த தேசத்து ஸ்டா ம்பாயிருந்தாலும் அனுப்பலாம்.


வாஸன் புஸ்தகசாலை,

97, அண்ணாபிள்ளைத் தெரு, மதராஸ்.



டேபில் டைம்பீஸ் இனும்!!!

எங்கள் 22 காரட் ரோல்ட் கோல்ட் "கோல் டன்" கைச்கெடியாரம் வாங்குகிறவர்களுக்கு மே



ஜையின் பேரி ல்லைக்கக்கூடி யஒருஅழகான டேபில் டயம் பீஸ் இனுமாக சேர்த்து அனு ப்பப்படும். இர ண்டும் 5 வரு ஷம் உத்திரவாதம். மூன்றுங்கள் விலை ரூ. 7-8-0 தபால் கூலி பிரத்தியேகம்.

வி. பி. சட்டமில்லாத வெளிநாட்டு நேயர்கள் இதற்கு 8-8-0 முன் பணம் அனுப்பவேண்டும்.

தி பான்வி வாட்சு ஆபிஸ்,

15 A-பீட், ஜி. டி. மதராஸ்



முன் விலை ரூ. 14. இப்பொழுது ரூ 7.

22 காரட் ரோல்டு கோல்டு புது மாடல்

கைக்கடியாரங்கள்



மேற்கண்டபடி எந்தவேஷப்வேண்டுமானாலும் அனுப்பப்படும். வேலைப்பாடு மிகவும் உறுதி. கையில் கட்டிக்கொண்டால் தங்க ஆபரணம் போல் இருக்கும். ஒவ்வொருகடியாரத்திற்கும் ரோல்டுகோல்டு அமெரிக்கன் கைச்சங்கிலி இனுமாய்ச்சேர்த்து அனுப்பப்படும். 5வருஷம் உத்திரவாதம். ரூ. ஏழுமட்டும்.

CANADIAN WATCH PEOPLE

George Town, Madras.



அசோகி.

ஸ்திரீகளுக்கு உயரிய ஓர் திவ்ய ஔஷதம்.

ஸ்திரீகளுக்கு கர்ப்ப ஆசயத்தில் உண்டா கும் கெடுதல்களாகிய கிறுவயத்தில் ருதுகம நின்றுபோதல், காலக்கிரமம் தவறி ஆதல், குறைவாகக் காணுதல், அதிகம் காணுதல், சூதக வயற்றுவலி, பெரும்பாடு ஆகிய சகல கர்ப்பக் குற்றங்களையும் 'அசோகி' என்னும் திவ்ய ஔஷதம் பூரணமாகக் குணப்படுத்தி தேக ஆரோக்கியத்தையும் சந்தான விருத்தி யையும தருவதில் நிகரற்றது. கர்ப்பகாலத் தில் உபயோகிப்பதால் சுகப்பிரசவம் உண் டாகிறது. புட்டி ஒன்றுக்கு விலை ரூ. 2. தபாற் செலவு வேறு.

டைரக்டர், பாரத டிஸ்பென்ஸரி,

ரங்கே கவுண்டன் வீதி, கோயமுத்தூர்.

பிரபலமடைந்த நம்பிக்கையான

## சேலம் ஜவுளி வியாபாரிகள்.

கல்யாண காலத்திற்காக ஏராளமான புதிய ஸ்டாக் நயமான விலைகள்.

ஏராளமான புதிய ஸ்டாக் நயமான விலைகள்,

## நவீன நாகரீக சேலம் ஜவுளி தினுசுகள்.

எங்களிடம் அசல் பட்டு வஸ்திரங்களும், பலகலர்களிலும் வெள்ளை நூலில் சரிகைப் பேட்டு சரிகை முந்தி வேஷ்டிகளும், துப்பட்டாக்களும், ஜோடிகளும், நார்பட்டு சேலைகளும், வஸ்திரங்களும் பேற்படி தினுசுகளில் சரிகை வேலை செய்த பல கலர் சேலைகளும், விலையுயர்ந்த அசல் பட்டு சரிகை புட்டா சேலைகளும், கொள்ளேகாலம் அசல்பட்டு சரிகை கொட்டடி, சரிகை மூலமாங்காய் கமலம்பேட் வஸ்திரங்களும், மைசூர் குண்டஞ்சு ஜோடிகளும் சேலம் துண்டு மடிகளும் ஜமுக்காளங்களும், சார்டட்டில் பலவிதமான கண்ணைக்கவரும்படியான ஜமுக்காளங்களும், சேலம் பனியன்களும், சேலத்தில் தயாராகும்படியான எல்லா ஜவுளி தினுசுகளும் விலை மிக்க சாசமாய்க்கிடைக்கும். ஒரு முறை பரிக்ஷியுங்கள்.

K. N. Kuppusamier, Cloth Merchants,
Commission Agent. Shevapet, Salem. (S. India.)



கவனியுங்கள்! நல்ல லாபம்!

## PHOTO HAND CAMERA



ரொம்பவும் குறைந்த விலை ரூபா. 2—15—0

நண்பர்களே! மேலே சொல்லிய காமிரா லண்டனில் புதிதாகச் செய்யப்பட்டது. எக்காலத்திலும் தெளிவான போட்டோபிடிக்கலாம். இந்த காமிராவை வாங்கி நூறு நூறாகப் பணம் சம்பாதிக்க ஆரம்பித்துவிட்டனர். போட்டோவின் அளவு $3\frac{1}{2}$x $2\frac{1}{2}$ ஆகும். காமிராவைச் சேர்ந்த எல்லா சாமான்களுடனும் அனுப்பப்படும். சிறிது நாளைக்கு மட்டும் எங்களுடைய அசல் விலை ரூ. 2—15—0 குக் கொடுக்கப்படும். உடனே எழுதுங்கள்.

கானடியன் வாட்ச் பீபிள், ஜி. டி. மதராஸ்



ஒருமணி நேரத்தில் குணம்! ஆச்சரியமானது!!

## மன்மத ஸ்தம்பன குளிகை.


குணம் இல்லையென்று நிரூபிப்பவர்களுக்கு ரூ. 100 இனமாகக் கொடுக்கப்படும்.

நேயர்களே! இந்த ஸ்தம்பனக் குளிகையானது முறையாகச் செய்யப்பட்டு பல பிரமுகர்களாலும் உபயோகிக்கப்பட்டு வருகிறது. பலர் பலபெயரிட்டு விளம்பரப்படுத்தியிருக்கும் மாத்திரையை நீங்கள் சாப்பிட்டிருக்கலாம். ஆனால் சொல்லியபடி நீங்கள் குணத்தைக் கண்டிருக்கமாட்டீர்களென்பது நிச்சயம். எங்கள் ஸ்தம்பனக்குளிகை அப்பேர்ப்பட்டதல்ல. அநுபவித்துப் பார்த்தவர்களுக்குத்தான் உண்மை விளங்கும். இந்த மாத்திரையை லேபிளில் சொல்லியிருப்பதுபோல் 10 நாள் சாப்பிட்டு வந்தால் ஆண் சிங்கத்தைப்போன்ற பலமும், ரோஜா புஷ்பம்போன்ற முகதேஜஸும், அழகும், தைரியமும் உண்டாகும். நீர்த்துப்போன இந்திரியத்தை கெட்டிப்படுத்துவதில் இதற்கு நிகர் வேறு எதுவுமில்லை. உத்தரவாதம். உடனே எழுதுங்கள். டப்பி 1-க்கு ரூ. 2. உபயோகிக்கும் விதம் மருந்துடன் அனுப்பப்படும். வெளிநாடு நேயர்கள் அவசியம் முன்பணம் அனுப்பவேண்டும்.

ஸ்ரீ தனம் அண்டு கம்பெனி, தபால்பெட்டி 119, ஜி. டி., மதராஸ்.



## போட்டோ ஆல்பம்.




நேயர்களே! இந்த ஆல்பத்தில் பன்னிரண்டு விதமான பிரெஞ்சு லேடிகளின் படுக்கையறைப் போட்டோக்கள் பார்க்க வெகு சுந்தரமாக வைக்கப்பெற்றிருக்கின்றன. பாரிஸ் மாநகரின் லீலா விநோதமும் ஒப்புயர் வற்ற ரூபலாவண்யமும் பலதினுசு சாயல்களில் கண்டு ஆனந்திக்கலாம். ஒரு ஆல்பம் தருவித்தவர் உடனே திரும்ப ஆறு ஆல்பங்கள் அனுப்புங்கள் எனக் கடிதம் எழுதுகிறார்கள். நீங்கள் உடனே முந்துங்கள். விலை ரூ 2-12-0

தி. கிருஷ்ணா ஏஜன்சி, தபால் பெட்டி 119 மதராஸ்.



## 'சேலம் மாம்பழம்'

விற்பனைக்கு தயாராகிவிட்டது, விலை சாசம்.

தினசரி மார்க்கட் நிலவரத்திற்கு என்னுடைய சொந்த பார்வையின்மேல் பொறுக்கி எடுத்து நாக்கிறதையாய் பாக் செய்தனுப்பப்படும். அட்வான்ஸுடன் ஆர்டர் செய்யவும்.

செடிகள், விதைகள் கேட்லாக் இனாம்.

ச. கோ. இ. காதர்மீறு சாயபு,
நெசட்கார்சி அண்டு பழவியாபாரம், சேலம்.
தந்தி விலாசம்:—"ஸ்டோர்," சேலம்.



இனும்! இனும்!

முனையில் இரிடியம் உள்ள 14 Kt. தங்க நிப்பு போட்ட Self-filling பௌண்டன்பேனா இனாம்.



எங்கள் 18 காரட் ரோல்டு கோல்டு பி எப்புறமும் சித்திரவேலை செய்யப்பட்ட சில்வர் பாக்கெட் கெடியாரம் வாங்குகிறவர்களுக்கு மேலே சொல்லியபடி பௌண்டன்பேனா இனாமாய் அனுப்பப்படும். கடியாரம் விலை ரூ. 4-12-0. 5வருஷம் உத்தரவாதம். உடனே எழுதுங்கள்.

CANADIAN WATCH PEOPLE,
George Town, Madras.



இனும்! இனும்!!

நேயர்கள் தங்கள் விலாசம் தெரிவிப்போருக்கு அரும் பாக்கம் வைத்தியம் ஸ்வாமி ஞானானந்தரின் குடும்ப ஆயுர்வேத புத்தகம் இனாம்!!

ஞானானந்தர் ஆயுர்வேத ஹோம்
408, தங்கசாலை வீதி, சென்னை.



## மூன்றுமாதத்தில் மோட்டார் ஓட்ட கற்றுக் கொள்ளலாம்

(1916 ஆம் ஸ்தாபிக்கப்பட்டது)

மோட்டார் வண்டிகளை ஓட்டவும் பிரிக்கவும் பூட்டவும் கற்றுக்கொடுக்கப்படும். தேர்ச்சியடைந்தபின் கவர்மெண்ட் லைசென்ஸ் வாங்கிக்கொடுக்கப்படும். மற்ற விபரத்திற்கு நேரில் எழுதவும்.

மதராஸ் தென்னிந்தியா மோட்டார் இஞ்சினியரிங்வொர்க்ஸ்,
மைலாப்பூர், மதராஸ்.



## பொருள் செய்வகை.

(விலை ரூபாய் ஒன்று)

அநேக வியாபார தந்திரங்கள் அடங்கியிருக்கின்றன. தினுசுகள் விலையேறுவதும இறங்குவதும் அறிவதற்கு தமிழில் முதல் புஸ்தகம் இதுவே. ஏராளமான திரவியம் சம்பாதிக்கலாம்.

தேவி ஆஸ்ரமம்.
திரௌபதை அம்மன் கோவில் வீதி,
புதுச்சேரி.

# பெண்கள்

ஆவலாய்விரும்பக் கூடியது! உயர்ந்த மல்லில், பச்சை, புளூ, வயலெட், ஆரஞ்சி, கருப்பு, கெம்ப ஸ்பைகலர்கள். கெட்டிச்சாயம், கரையிலும் முந்தியிலும் பூவேலைமானமுள்ள நூதனமாகத்தயார் செய்த புடவை. 18 மு. X 48 இஞ்சு புடவை ரூ. 4—8—0. ஷை பூவேலைமானமில்லாதது ரூ. 4—4—0. ஷை உடல் சிகப்பு அல்லது கருப்பு பல மாதிரி புள்ளிகள் போட்ட சுன்னடி புடவை ரூ. 4—8—0. புதிய கேட்லாக் இனாம்!

The Madura Oriental TradingCo
Laxmi Colth Store,MADURA.

## ஆநந்த குணபோதினி.

மூன்றாம் வருடம்.

இது போன்ற நவீன மாதாந்தர சஞ்சிகை இது வரை வெளிவரவில்லை. இது அபூர்வமும் சிறந்ததுமான வழியில் ஆங்கிலமாத சஞ்சிகைகளை யொப்ப உயர்தரமாய் நடத்தப்படுகிறது. எல்லாம் கருத்து, எல்லாம் களிப்பு, எல்லாம் அநுபவம், எல்லாம் புத்தி போதனைகளே. யாவும் சிந்தைக்கினிய, செவிக்கினிய அலங்கார வசன மழை. ஒவ்வொரு மாதமும் 56 பக்கங்கள் கொண்ட பெரிய பத்திரிக்கை இது ஒன்றேதான். 5000-சந்தாதாரர்கள் உள்ளது. வருட சந்தா ரூ.1, வெளி நாடு ரூ. 1—4—0 மாதிரி இனாம். இது பெரிய ஆஸ்தி. உடனே எழுதுங்கள்.


'ஆநந்த குண போதினி' ஆபீஸ்
302, தங்கசாலை வீதி, மதராஸ்.

## அறிக்கை.

எங்களிடம் பிரான்ஸி நல்ல ரகமுள்ள வெள்ளி ஜரிகை மார்க்குகளும், பாப்பேரு வாலட்டி மேல் கண்ட மார்க்குகளும், சூரத் மார்க்குகளும் கைவசமிருக்கிறது. உள்ளூர் ஜவுளி தினுசுகளும் இருக்கிறது. விலைஜாப்தா வேண்டியவர் எழுதினால் அனுப்பித்தருகிறோம்.

சி. லிங்கி செட்டி,
எஸ். வெங்கிட்டராம செட்டி,
ஜவுளி அண்டு ஜரிகை வியாபாரம்,
கோயமுத்தூர்.

5 இனாம் சாமானுடன் கொடுக்கப்படும்.




எங்களின் தாரா லீவர் 18 காரட்டு ரோல்ட்டு கோல்டு பாக்கெட் கடியாரம் ஆர்டர் செய்பவர்களுக்கு இதில் கண்ட 15 இனாம் சாமான் கொடுக்கப்படும். இனாம்களுடன் ரூ. 4—8—0. தீ. பான்ஸி வாட்சு அவுஸ், ஜி. டி. மதராஸ்.

இனாம்! இனாம்!! இனாம்!!!

எங்கள் லேஹியமானது ஸ்ரீ கொக்கோக மஹாமுனிவரால் அருளிச் செய்யப்பட்டதல்லவென்று நிரூபிப்பவர்களுக்கு ரூ. 1000 இனாம்.

ஸ்ரீ கோக்கோக மஹா முனிவர் அருளிச்செய்த அசல்

# சிந்தாமணி லேஹியம்.

(அயகாந்த செந்தூரம்)

இந்த லேகியத்தில் 196 விதக் கடைச் சரக்குகளும், வித்துகளும், யூனானி மிஸ்ரிகளும், பொன் அம்பர், பாதம் பருப்பு, பிஸ்தா, அக்ரோட், சல்கூஜா பருப்புகளும், அவைகளுடன் மலை மூலிகைகளைக் கொண்டுவந்து இயந்திரத்தின் வாயிலாய்க் கொடுத்து அதன் மூலமாய் வரும் சஞ்சீவியின் சத்தை ஏராளமாகச் சேர்த்து பசு நெய், பசும் பால், மலைத் தேன் முதலியனவும் உறவாக்கி, கை பாகம், செய்பாகம் தவறாமல் செய்துள்ளோம். ஆகார விஷயத்தில் யாதும் நிர்ப்பந்தமில்லை. எல்லா காலத்திலும் எல்லா ஊரிலும் எந்த சீதோஷ்ண நிலைமையிலும் மேற்படி லேகிய செந்தூரத்தை சாப்பிடலாம். சாப்பிடுவதற்கும் வாய்க்கு அல்வாவைக் காட்டிலும் அதிக ருசியுள்ளதாயிருக்கும் என்பதையும் அறிவித்துக் கொள்ளுகிறோம். இதற்கு பத்தியம் இல்லை.

## இந்த லேகிய செந்தூரத்தை சாப்பிடுவதனால் உண்டாகும் குணங்கள்.

1. நித்திரையிலும் பெண்களோடு பேசிக்கொண்டிருக்கும்போதும் நினைத்தபோதும் உண்டாகும் துரிதஸ்கலிதம் என்னும் கொடிய வியாதியை தலையெடுக்கவொட்டாமல் அடித்துவிடும்.
2. தளர்ந்து துவண்டு மெதுவபட்ட இராஜ கருவிகளாகிய நரம்புகளை முறுக்கேற்றி கெட்டிப்படுத்தி கைகால் இடுப்பு முதலியவைகளுக்கு அதிக பலத்தைக் கொடுத்து இல்லறத்தில் அபரிமிதமான பிரியத்தைத் தரும்.
3. கிழத் தன்மையைப் போக்கி இளமையைத் திருப்பித்தரும்.
4. சரீரமானது பத்தரைமாற்றுப் பசும் பொன்னைப்போல் பளபளப்பைத் தரும்.
5. ஞாபக சக்தியை அதிகப்படுத்தி இன்பரசத்தை ஊட்டும்.
6. இன்னும் மேக சம்பந்தமான குன்மங்கள், சூலை, அண்டவாதம், குடல்வாதம், ஆண், பெண் குறிகளிலுண்டாகும் மேகங்கள், பாரிசவாய்வு, ஓடுவாதம், அஜீர்ணம் முதலியவையும் காற்றாய்ப் பறந்து உடம்புக்கு சுகத்தைக் கொடுக்கும்.

நண்பர்களே! இந்த லேகியமானது 50 வருட காலமாய் இந்தியா, பர்மா, சிலோன் ஐக்கிய மலாய் நாடுகள், ஜாவா, மோரீஸ், நேட்டால் முதலிய பல தேசங்களில் நிகரற்றதென பிரசித்தி பெற்றது. நூற்றுக் கணக்கான சுதேச வைத்தியர்கள், ராஜாக்கள், ஜமீன்தார்கள், லாயர்கள், தேசாபிமானிகள், ஸ்கூல் உபாத்தியாயர்கள், வர்த்தகர்கள், தலைமை கங்காணிமார்கள் முதலிய கனதனவான்கள் நமது லேகியத்தை புசித்து ஆயிரக்கணக்கான நற் சாட்சிப் பத்திரங்கள் கொடுத்திருக்கிறார்கள்.

ஒரு மண்டலம் 48 நாள் சாப்பிடக் கூடிய லேகிய செந்தூரம் டப்பி ஒன்றுக்கு ரூபாய் 5. வி. பி. சட்டமில்லாத வெளிநாட்டு நேயர்கள் முன்பணம் அனுப்பும்போது தபாற் செலவையும் சேர்த்து அனுப்ப வேண்டுமென்று நிரம்பவும் தாழ்மையாய் கேட்டுக் கொள்ளுகிறோம்.

எமது விலாசம்: ஸ்ரீ தனம் அண்டு கம்பெனி,
பிரும்ம சமாஜ கட்டடம், ஜி. டி. மதறாஸ்.

மதுரை, இராமனாதபுரம் ஜில்லா பார்ப்பனரல்லாத இளைஞர் மகா நாடுகளிலும் இன்னும் அநேக பொருட்காட்சி சாலைகளிலும்,

அநேக டாக்டர்களிடமிருந்தும் நற்சாட்சி பத்திரம் தங்க மெடல்கள் பரிசுபெற்ற

மதுரை. V. K. அன் சன்ஸ்., கம்பெனியாரின்

## லன் பிளவர் சோப்,
## லர்தார் சோப்,

ஹார்ட்லி அன்பர்மஸ், டின் பிஸ்கட்ஸ் உபயோகப்படுத்துங்கள்.
எல்லா ஷாப்புகளிலும் சகாயமான விலைக்குக் கிடைக்கும்.

தந்தி விலாசம்,
"பிஸ்கட்" மதுரை.

V. K. அன் ஸன்ஸ்.,
கீழமாசி வீதி, மதுரை.


கடவுளை வணங்க
பார்ப்பனத் தரகர் வேண்டுமோ?

[illegible] மாளைக்களால், ஈரோடு "உண்மை விளக்கம்" பதிப்பகத்தில் பதிப்பிக்கப்பெற்று வெளியிடப்பட்டது.